# தேசியப்பாட்டுகள்.

[விலை 6 அணா]

நாமக்கல்
வெ. இராமலிங்கம் பிள்ளை.

உ

வந்தேமாதரம்.

# தேசியப்பாட்டுகள்.

(முதல் பாகம்.)

நாமக்கல்

வெ. இராமலிங்கம் பிள்ளை

இயற்றியவை.

ஸ்ரீமான்

C. இராஜகோபாலாச்சாரியாரவர்களுடைய

முகவுரையுடன்

ஸ்ரீமான் S. இராமசாமி அய்யரவர்களால்

நாமக்கல்

யூனியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1934.

காபிரைட்.

இதன் விலை]

# முகவுரை.

என் நண்பர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை இயற்றிய பாடல்களைத் தமிழ் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள், படித்தும் பாடியும், கேட்டும் உள்ளம் கரையுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அன்பு நிறைந்த தொண்டிலும், பல கலைகளிலும், புதிய நூல்களிலும் தன் நன்மக்கள் வாயிலாக நமதருமைத்தாய் விளங்கி வருகிருள். தமிழ்த் தாய்பெற்ற நன்மக்களுள் ஒருவராகிய இராமலிங்கம் பிள்ளையின் தேசபக்தியை நான் நன்கு அறிவேன். அவர் பாடின இப்பாடல்களை தமிழ்நாட்டார் ஆதரித்து அவர் ஊக்கத்தைப் பெருக்கித்தரக் கோருகிறேன்,

சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சார்.

உ

# வந்தேமாதரம்.

## காப்பு.

### பரமன் வணக்கம்.

உலகெலாம் படைத்துக்காத்து உருவிலா தழித்தாளும்
உண்மையாய் எண்ண மாளா ஒருவனாய் அருவனாகி
சலமிலா தெண்ணுவோர்க்குச் சத்தியமயமேயாகி
தனித்தனி பிரித்தபோதும் தானதிற்பிரியானாகி
மலரின்மேல் தேவனாகி மாதொருபாகனாகி
மாலொடு புத்தனாகி மகம்மதாய் ஏசுவாகி
பலபல தெய்வமாகிப் பற்பல மதங்களாகிப்
பக்குவப்படியே தோன்றும் பரமனார்பெருமை போற்றி.

### விக்நேச்வரன் துதி.

மோனமுற்ற முதியவர் சொல்லிய
ஞானமுற்று முதிர்சுவை நற்றமிழ்
ஊனமற்று உயரியச் சொல்லிய
ஆனையப்ப னடிமலர் போற்றுவாம்.

### அவையடக்கம்.

நாரத கீதமென்ன நயந்திகழ்பாடலாலே
பாரத நாட்டையென்றும் பணிந்திடும் சுப்ரமண்ய
பாரதி பாட்டைக்கண்ட பழையவித் தமிழர்நாட்டில்
'யாரது?' என்றுகேட்க யானுமிக் கவிகள்சொன்னேன்.

# விண்ணப்பம்.

## அகவல்

உலகெலாங் காக்கும் ஒருதனிப்பொருளே
உன்னருள் நோக்கி இன்னு மிங்குள்ளேம்.
இந்திய நாட்டை இந்தியர்க்கென்று
தந்தனை யில்லையோ தவறதில் உண்டோ
காடும் மலைகளும் கனிதரும் சோலைகள்
ஓடும் நதிகளும் உள்ளன எவையும்
இங்கே பிறந்தவர் எங்களுக்கில்லையோ !
எங்கோ யாரோ வந்தவர் துய்க்கச்
சொந்த நாட்டினில் தோன்றிடும் செல்வம்
எந்த நாட்டிலோ எங்கோ போய்விடக்
கஞ்சியு மின்றிக் கந்தையும் இன்றி
அஞ்சியவாழ்வின் அடிமையிற்கிடந்து
நொந்தனம் கொள்ளை நோய்களாற் செத்து
காட்டிடை வாழும் விலங்கினுங்கேடாய்
நாட்டிடையிருந்தும் நலிந்தனம் ஐயோ !
யாருடை நாடு ? யாருடை வீடு ?
யாருடைப்பாடு? யார் அனுபவிப்போர் !
பிறந்த நாட்டினிற் பிறவாதவரிடம்
இரந்து நின்று அவர் ஏவலே செய்து
உடலே பெரிதென உயிரைச்சுமந்திடும்
ஊனமிவ் வாழ்வினை ஒழித்திடத்துணிந்தோம்.
ஞான நாயகா ! நல்லருள் சுரந்து,
ஆண்மையும் அறிவும் அன்பும் ஆற்றலும்
கேண்மையும் பிறர்பால் கேடிலா எண்ணமும்
அடிமை ஒருவருக் கொருவர் என்றில்லா
குடிமை நீதியின் கோன்முறை கொடுத்து,
சோறும் துணியும் தேடுவதொன்றே
கூறும் பிறவியின் கொள்கையென்றின்றி



அளவிலா உந்தன் அருள்விளையாட்டின்
களவியல்போன்றக் கருணையின்பெருக்கின்
உளவினைத்தேடி உணர்ந்திடவென்றே
வளமும் எங்கள் வாழ்நாட்போக்கி
மங்களம்பாடி மகிழ்ந்திடத்தருவாய்
எங்கும் இருக்கும் எழிலுடைச்சோதி !

## முருகன் பாட்டு.

1 வாவா முருகா ! வடிவேல் முருகா !
காவாய் முருகா ! கடிதே முருகா !
தேவா உனையே தினமும் தொழுவேன்
தீவாய் பிணிவைத் தீர்த்தினமே வாவா

2 அழியா அழகா ! அறிவாம் முருகா !
கழியா இளமைக் கடலே முருகா !
மொழியா இன்பம் அடையும் முறையை
ஒளியா தருள்வாய் ஒருவா முருகா ! வாவா

3 குறையா அழகே ! குமரா முருகா !
மறையா வையுமே அறியா ஒருவா !
சிறைவா யுலகில் சிறுகும் எளியேன்
சிறுகா விதமுன் திறமே தருவாய் வாவா

4 தளரா உடலும் சலியா உயிரும்
குளறா உரையும் குறையா அறிவும்
வளரா வாடா வடிவும் உடையாய் !
எளியாய் ! அடியார் களியே ! ஒளியே ! வாவா

5 நரையும் திரையும் நணுகா முருகா !
கரையும் பிணியும் களையொன்றறியாய்
விரியும் உலகின் விரையே முருகா !
வருவாய் முருகா வரமே தருவாய். வாவா

## சுதந்தரவாழ்வே சுகவாழ்வு.

---

(சிதம்பரம் போகாமல் இருப்பேனே?—என்றமெட்டு).

1 சுதந்தரம் இல்லாமல் இருப்பேனே?—வெறும்
சோற்றுக்குயிர் சுமந்து இறப்பேனே! (சுத)

2 விடுதலை யடையாமல் விடுவேனே?—என்னை
விற்றுடல் வளர்ப்பதில் கெடுவேனே! (சுத)

3 மானத்தைப் பெரிதென்று மதிப்பேனே?—அன்றி
மாற்றவர்க் குழைத்துடல் உதிப்பேனே! (சுத)

4 தொழுதுடல் சுகிப்பதைத் தொலைப்பேனே?—இன்றித்
தொழும்ப னென்றே பெயர் நிலைப்பேனே!

5 பயமின்றித்தருமத்திற் குழைப்பேனே?—விட்டுப்
பாபங்களுக் கொதுங்கிப் பிழைப்பேனே! (சுத)

6 ஞான சுதந்தரத்தை அடைவேனே?—இந்த
ஊனுக்குழைத் தடிமை தொடர்வேனே! (சுத)

## புதுக்கொடிவணக்கப்பாட்டு.

---

1. கொடி வணக்கமது செய்வோம்—நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம்
முடி வணங்கியதைப் போற்றி—அதன்
மூன்று நிறக்குறி சாற்றி. (கொடி)

2. புதுமையான கொடி பாரீர்—வேறு
பூத லத்திலிலை தேரீர்
முதுமையா யெவர்க்கும் பொதுவாம்—வாழ்வின்
முறையைக் காட்டுவது இதுவாம் (கொடி)



3. பச்சையான ஒரு தோற்றம்—நமக்கு
பக்தி வேண்டுமெனச் சாற்றும்
இச்சையான பொருள் கூட—பக்தி
இருக்க வேணுமதை நாட (கொடி)

4. தூய்ய வெள்ளைநிறக் காட்சி—உண்மை
துலங்கு மென்பதற்குச் சாட்சி
மையமாக நிற்கும் மர்மம்—ஸத்யம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம். (கொடி)

5. துறவின் வர்ணமந்தக் காவி—உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி
சிறையும் வீடுமதற் கொன்றே—என்னும்
சேதி ஓதுவதற் கென்றே. (கொடி)

6. நடுவில் ராட்டையொன்று பார்ப்போம்—அதில்
நலிந்த பேர்க்குக்கஞ்சி வார்ப்போம்
வடுவிலாத தொழில் நூற்றல்—குடிசை
வாழும் ஏழைக்கென்று சாற்றல். (கொடி)

7. பக்தி, சத்தியம், த்யாகம்—இவற்றின்
பண்பே வாழ்க்கையின் யூகம்
நித்தம் நித்தமிந்த நீதி—தம்மை
நீட்டும் புதுக்கொடியின் ஜோதி. (கொடி)

8. ஜாதிபேதமதில் இல்லை—மற்றும்
சமய பேதமதில் இல்லை
நீதி யானபல முறைகள்—தமக்கு
நிலைய மாகுமதன் குறிகள். (கொடி)

9. என்ன புதுமையிது பாரும்—கொடி
எதிது போலொன்று கூறும்
அன்னைக் கொடியிதனைப் பாடி—அதன்
அடியில் நின்றுபுகழ் கூடி. (கொடி)

10. ஏழை எளியவர்கள் யார்க்கும்—பயம்
இல்லை யென்ன அறம் காக்கும்
வாழி புதியகொடி வாழி—புது
வாழ்வு தந்தினிது ஊழி. (கொடி)

# கள்ளுக்கடை - மறியல் பாட்டு.

1. மறியல்செய்ய வாருங்கள்
அரியகாந்தி சொற்படி
வெறிகொடுத்து ஏழைமக்கள்
குடிகெடுத்த கள்ளினை (மறியல்)

2. குடிப்பதைத் தடுப்பதே
கோடிகோடி புண்ணியம்
அடிப்பினும் பொறுத்து நாம்
அன்புகொண்டு வெல்லுவோம் (மறியல்)

3. மக்களை வதைத்திடும்
மனைவியை உதைத்திடும்
துக்கமான கள்ளினைத்
தொலைப்பதே துரைத்தனம் (மறியல்)

4. பித்தாகி ஏழைகள்
பேய்பிடித்த கோலமாய்
புத்திகெட்டு சத்தியற்றுப்
போனதிந்த கள்ளினால் (மறியல்)

5. பாடுபட்ட கூலியைப்
பறிக்குமிந்த கள்ளினை
வீடுவிட்டு நாடுவிட்டு
வெளியிலே விரட்டுவோம் (மறியல்)

6. கஞ்சியின்றி மனைவிமக்கள்
காத்திருக்க வீட்டிலே
வஞ்சமாகக் கூலிமுற்றும்
வழிபறிக்கும் கள்ளினை (மறியல்)

7. மெய்தளர்ந்து மேனிகெட்டுப்
போனதிந்த கள்ளினால்
கைநடுக்கங் கால்நடுக்கம்
சண்டதிந்தக் கள்ளினால் (மறியல்)



8. தேசமெங்கும் தீமைகள்
மலிந்ததிந்த கள்ளினால்
நாசமுற்று நாட்டினர்
நலிந்ததிந்த கள்ளினால் (மறியல்)

9. குற்றமற்ற பேர்களும்
கொலைஞராவர் கள்ளினால்
கத்திகுத்து சண்டைவேண
கள்ளினால் விளைந்ததே (மறியல்)

10. குற்றமென்று யாருமே
கூறுமிந்த கள்ளினை
விற்கவிட்டு தீமையை
விதைப்பதென்ன விந்தையே ! (மறியல்)

# காந்தியடிகள் பெருமை.

## (இந்திய நாட்டிற்கு அவராலுண்டான நன்மை)

(" முன்னையிலங்கை அரக்கரழிய " என்ற மாதிரி)

1. இந்திய நாடுசு தந்தர மெய்தநல்
தந்திரம் தந்ததுயார் ? — சிறு
கந்தை 'பக்கீ' ரென்று தந்தொருவன் சொன்ன
காந்தி யென்னும் பெரியார். (இந்)

2. அஞ்சிக் கிடந்தநம் நெஞ்சந்துணிந்திட
ஆண்மை எழுப்பினதார்? — ஒரு
வஞ்ச மில்லாதவர் வாய்மையின் தூய்மையின்
வாழ்க்கையர் காந்தியவர். (இந்)

3. ஆயுதம் இன்றியும் யாரும் வணங்கிடும்
அன்பைப் பெருக்கினதார்? — சற்றும்
சாயுதல் செய்திடா சத்தியமூர்த்தி நம்
தவமுனி காந்தியவர். (இந்)

4. நாட்டினிக்காயுயிர் கேட்பினும் தந்திட
நானென்று முன்வருவோர் — பலர்
போட்டியிட்டேவா வீரம் புகுத்தினர்
புண்ணயர் காந்தியவர். (இந்)

5. அடிபட்டு மாளவும் சிறைபட்டு வாழவும்
அச்ச மகற்றினதார்! — உண்மைக்
குடிகொண்டுக் கோபத்தைக் குறைவற நீக்கிய
குணமுயர் காந்தியவர். (இந்)

6. பேதையரென்று நாம் பேசிய பெண்களும்
வீதியில் நம்மிலுமே — இந்த
நீதியில்லா முறை அரசை எதிர்த்துடன்
நின்றிடக் காந்தி செய்தார். (இந்)

7. சின்னஞ்சிறியக் குழந்தைகளும் இன்று
ஜய ஜய வென்றுசொல்லி — எங்கும்
கன்னெஞ்சுருகிடத் தேசத்தினைத்தொழக்
காந்திஜி செய்துவிட்டார். (இந்)

8. தீண்டப்படாதென்று மனிதரைச் சொல்வது
தீமையில் தீமையென்றே — அதைப்
பூண்டொடும் போக்கநாம் விரதம்புனைந்தது
புண்ணியர் காந்தியினல். (இந்)

9. தன்னை வதைப்பவர் தங்களுக்கும் அன்பைத்
தாங்குவதே தவமாம் — என்று
முன்னை யிந்நாட்டினில் சொன்னவர் சொற்களை
முற்றுவித்தார் காந்தி. (இந்)

10. உடலினும் உயிரினும் உள்ளிருக்கும் ஒன்று
உயர்ந்தது காணும் என்றே — இந்தக்
கடலுலகத்தினில் கண்ணுக்கு முன்னுகக்
காட்டிவிட்டார் காந்தி. (இந்)

11. காந்தியென் னும்பெயர் சாந்தம் என்னும் சொல்லின்
காட்சியின் சாக்ஷியென்றே — இனி
மாந்தர்கள் எங்குமே எந்தியதன்வழி
மங்களம் எய்திடுவார். (இந்)



## இச்சா சுதந்தரம்.

1. இச்சை கொண்ட நிமிஷமே
நிச்சயம் சுதந்தரம்
பிச்சை கேட்க வேண்டுமோ
பிறர் கொடுக்கவல்லதோ (இச்)

2. 'வேண்டும்' என்ற உறுதியே
விடுதலைக்கு வழிவிடும்
யாண்டிருந்து வருவது?
யார் கொடுத்துப் பெறுவது? (இச்)

3. 'அடிமையல்ல நான்' எனும்
ஆண்மையே சுதந்திரம்
தடியெடுக்க வேண்டுமோ?
சண்டையிட்டு வருவதோ? (இச்)

4. ஆசைவிட்ட பொழுதிலே
அடிமை வாழ்வும் விட்டிடும்
மீசை துள்ளி வாயினல்
மிரட்டினல் கிடைப்பதோ (இச்)

5. அஞ்சுகின்ற தற்றபோது
அடிமையற்றுப் போகுமே
நஞ்சுகொண்டு யாரையும்
நலிவுசெய்து தீருமோ (இச்)

6. நத்திவாழ்வதில்லை யென்ற
நாளிலே சுதந்தரம்.
கத்தி கொண்டு யாரையும்
குத்தினுற் கிடைக்குமோ? (இச்)

7. கள்ளமற்ற நேரமே
காணலாம் சுதந்தரம்
உள்ளிருக்கும் ஒன்றை வேறு
ஊரிலார் கொடுப்பவர்? (இச்)

8. தீமையோடு உரவுவிட்ட
திண்மையே சுதந்தரம்
வாய்மையோடு உரவறுத
வண்மையே சுதந்தரம் (இச்)

---

## மஹாத்மா தரிசனம்.

---

துறவிகளின் பெருமை.

1 மடங்கிய பயிர்களெல்லாம் மழைவரநிமிர்ந்து நீளும்
மருண்டிடும் குழந்தைபெற்ற மாதினைக் கண்டுதேறும்
ஒடுங்கிய தேகம் தக்க உணவினால் உறுதிகொள்ளும்
ஒளிந்திடும் நாகம் நல்ல ஓசையால் வெளிவந்தாடும்
அடங்கி யித்தேகந்தன்னில் அவித்தையில் அழுந்தும் ஆன்
அன்பின் நல்லுருவமாய அறிஞரைக்கண்டபோது [மா
முடங்கிய மயக்கம் நீங்கி முன்னைய உணர்ச்சி ஓங்க
மொய்ச்சுடர்கொழுந்துபோல முடுகிடும்மேலேயன்றோ.

2 அருமறையும் பலகலையும் உலகுக்கீந்து
அறுசமயப் பலவழியை அடக்கியாண்டு
உரிமையுடன் பிறநாட்டார் உவந்துபோற்ற
ஊழிதொறும் புதிதாகும் உயர்வுதாங்கும்
பெருமைநமைப் பெற்றெடுத்த இந்தநாடு
பெற்றதென நாமடைந்த பெரியபேறு
மருளகற்றி அருள்சுரக்கும் ஞானந்தோன்றி
மனத்துறவு பூண்டவர்கள் மகிமையேயாம்.



3 துறந்தவர் மிகுந்த நாட்டைத் துறந்திடும் துன்பமெல்லாம்
துறந்தவர் குறைந்தநாட்டைத்தொடர்ந்திடும் துன்பமெல்
அறிந்தவர் மொழிகளாலும் அனுபவ அறிவினாலும் [லாம்
அறிந்தனம் அதனையிந்த தேசமும் மறந்ததந்தோ!

4 வான்முறை மழைபெய்யாது மானிலம் வளமைகுன்றும்
கோன்முறை கோணும்மற்றும் குடிவளம் குறைந்து
சாண்வயிறதற்குக்கூடச் சரிவரக்கிடைக்காதானும் [வாடும்
'தான்' எனும் அகந்தைநீத்தத்தவசிகள் குறைந்தநாட்டில்.

5 அன்ன அத்துறவுபூண்டோர் அரிதெனப்போனதாலோ
சொன்னவர்துறவி யென்றோர் தூய்மையிற் குறைந்ததாலோ
முன்னையவளங்கள்குன்றி முதுமறைப்பெருமைவிட்டுக்
குன்னிய வாழ்க்கைவந்துக் குறைந்ததிப் பாதநாடு.

6 அக்குறை நீங்கவென்றே ஆண்டவன் அனுப்பிவந்தோன்
இக்கணம் இந்தநாட்டின் இருள்மிகும் அடிமைநீங்க
முக்குணம் அவற்றுள் போற்றும்முதற்குணவழியேகாட்டும்
சத்குருவான காந்தி சத்தியசீலன்தானே.

7 தாங்கண்ட இன்பம் இந்தத் தரணியோர் பெறுமாறெண்ணி
ஆங்கென்றும் ஈங்கென்றோடி அறப்பறைஅடிக்கும் காந்தி
தீங்கென்றுஉலகம் சொல்லும் செய்கை ஓர் சிறிதுமில்லார்
நாங்கொண்டபெருமைஎங்கும் நல்லவர்யாருங்கொள்வார்.

## காந்தியடிகளின் காலமே நல்லசமயம்.

---

வராளி—ரூபகம்.

பல்லவி.

நல்லசமயமடா—இதை—நழுவவிடுவாயோ!

அநுபல்லவி.

நாட்டிற் சுதந்தரம் நாட்டிமனிதருள்
தீட்டுந் தீண்டாமையுந் தீர்த்துவிடுதற்கு (நல்ல)

சரணங்கள்.

1 காந்தியைப்போல் தலைவர்—எந்த—காலத்திற்கிட்டுமடா
வாய்ந்த கருணமிதை—நீ—வழுவியி ழப்பாயோ
சூழ்ந்திடும் துன்பங்கள்—வீழ்ந்திட நாமினி
வாழ்ந்திடவும் மனச்—சாந்தியடையவும் (நல்ல)

2 வேதம் ஒலிக்குதடா-காந்தி—ஓதும்மொழிகளிலே
கீதை ஜொலிக்குதடா-அவர்-செய்யும் கிரியையெல்லாம்
வேற்றுமை யில்லாமல்—நாட்டின்நலத்தினைப்
போற்றின யாரையும்—கூட்டிஉழைத்திட (நல்ல)

3 பண்டைய காலந்தொட்டு-நம்முள்-பாசம்பிடித்த பல
வண்டை வழக்கங்களை இனி வாரியெறிந்துவிட்டு
பக்தி வளர்ந்தினிச்—சுத்தவழிகளில்
சக்தி அனைவரும்—ஒத்துச்சுகித்திட (நல்ல)

---

## காந்தியடிகள் உண்ணாவிரதம்.

---

மதுரைச் சிறையில் இருந்தபோது, மஹாத்மா காந்தியவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித்தொகுதி கொடுத்து அவர்களை ஹிந்துசமூகத்திலிருந்து பிரித்துவைத்ததை ரத்து செய்தாலல்லாமல் "உண்ணாவிரதமிருந்து உயிர்விடுவேன்" என்று, ஆங்கில பிரதம மந்திரி ராம்சே மாக்டனால்டுக்கும், இந்தியா மந்திரி சாமுயேல் ஹோருக்கும் எழுதியிருந்த கடிதங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு, மஹாத்மா விரதம் ஆரம்பிக்கும் முன்னால் பாடப்பட்டவை.

விருத்தம்.

1. மனிதர்கள் கடவுளாகார் கடவுளர் மனிதராவார்
புனிதமும் பொறுமையாவும் பொய்யிலா வாழ்வும்பற்றி
கனதையும் கருணைபொங்கும் காந்திபோல்வாரைவிட்டு
இனியொரு கடவுளென்பார் எங்குளார்? எங்குளாரே?



2. கடவுளே பொய்யென்றாலும் கண்டவரில்லையென்றாலும்
உடனுலகுயிர் ஒன்றிற்கும் ஒருசிறு தீங்குமெண்ணார்
கடனறி சாந்தக்குன்றாம் காந்திபோல்வாரையன்றி
உடலுயிர் உள்ளார் தம்மில் உவப்பது யாரை? யாரை?

3. நம்பின பேருக்கேனும் நம்புதலற்றார்க்கேனும்
அப்புவி ஏழைக்காக அருந்துயர் அனைத்தும்தாங்கி
வெம்பிய செய்தாருக்கும் வெருவுளஎண்ணார் சொல்லார்
இப்பரின் காந்திவாழ்வை இலையென மறுக்கப்போமோ

4. ஈரமும் இரக்கம் மட்டும் இருப்பவர் யாரும் எங்கும்
ஓரமும் பொய்யும் நீக்கி உயர்குணம் யாவும்காத்து
யாரொரு சிறியார்க்கேனும் யாதொரு தீங்கும் ஒப்பார்.
சீரியர் காந்தி வாழ்வைச் சிறப்பியா திருப்பதெங்ஙன்?

5. ஒன்றினை ஒன்றுமாய்த்து ஒருவரை ஒருவர்வாட்டித்
தின்றுடல் சுகிக்குமிந்தத் தீமைசூழ் உலகந்தன்னில்
தன்றுணைச் சுகங்கள்விட்டுத் தளர்ந்தவர்க்குடலையீந்து
நின்றிடும் காந்தி வாழ்வை மறப்பதோ நினைப்பதோதான்.

6. தன்னுயிர் போவதேனும் பிறர்துயர் சகிக்கமாட்டார்
பொன்னுயிர் பொதுமைக்கீந்துப் பொறுப்பது மானம் அஃதே
இன்னுயிர் மனிதவாழ்வி ரகசிய மாகுமென்று
உன்னிய காந்திவாழ்க்கைத் தாழ்ந்ததோ உயர்ந்ததோதான்.

7 "வாழ்ந்தவர் வாழ்ந்தவாழ்வின் வழியிழிவழக்கத்தாலே
"தாழ்ந்தவர்' என்பார் தம்மைப் பிரிகலேன், பிரித்துவைத்தால்
வீழ்ந்துயிர் விடுவேன்" என்ற காந்தியின் விரதவார்த்தைப்
போழ்ந்துளங் கலங்கிடாதார் பூமியில் உண்டோ மக்கள்?

8 'சத்தியம்' சாந்தம் என்னச் சலிப்புறக் கேட்டதெல்லாம்
பொத்திய உடை ஒன்றோடுப் புறத்தொரு அழகுமின்றி
நித்தமும் தன்பாற்குற்றம் நெருப்பெனக் காய்ந்துநீக்கி
சுத்தமாம் காந்தியாகத் தோன்றிடக் கண்டோம் இன்று.

9. ‘சாந்தம்’ என்றது தானின்று சபர்மதி சாலைநீங்கி
ஏந்திய கொள்கைக்காக எரவாடா சிறையிற்றங்கி
பாந்தவர் தாழ்ந்தவர்க்காப் பட்டினியிறப்பேனென்று
ஆய்ந்தவர் அறிவில் என்றும் காந்தியாய் அரசுகொள்ளும்.

10. சத்தியம் வெல்லுமென்றால் தவமதுபலிக்குமானால்
உத்தமன் கடவுளென்ற ஒருபொருள் உண்மையானால்
இத்துறை எங்கள் காந்தி இடருருவண்ணங் காத்து
வைத்திடவேண்டும் இந்த வையகம் வாழ்த்தும்என்றும்.

---

## சாந்தமே மதங்களின் முடிவு.

(காந்தியடிகளைப் பின்பற்றுங்கள்).

---

செஞ்சுருட்டி—ஏகதாளம்.

பல்லவி.

தருணம் இதுவே, தருமம் இதுவே
தமிழா! எழுந்திரடா.

அநுபல்லவி.

கருணையின் வடிவாம் கலைகளின்முடிவாம்
காந்தியென்றொரு முனி ‘சாந்தி’ யென்றழைக்கிறார் (தரு)

சரணங்கள்.

1 வள்ளுவர் வாழ்க்கையும் திருக்குறள்வகுத்ததும்
தள்ளரும் தாயுமா னவருடல் தகித்ததும்
வள்ளலிராமலிங்க சுவாமிகள் வடித்ததும்
கள்ளமில் பட்டினத்தார் கவலையும் இதற்கே (தரு)

2 சைவர்கள் பூண்டதும் சமணர்கள் மாண்டதும்
வைணவர் வருத்தமும் புத்தர்கள் வாட்டமும்
மையற ஏசுதான் சிலுவையில் மரித்ததும்
மஹம்மது நபியவர் மகிழ்ந்ததும் இதற்கே (தரு)



3 கம்பன் கவித்திறமும் வில்லியின் சந்தமும்
செம்பொருள் சேக்கிழார் தேடித் தெரித்ததுவும்
பைம்பரஞ்சோதியார் பாடிப்பகர்ந்ததுவும்
நம்பின யாவரும் நவின்றதும் இதுவே (தரு)

4 நால்வர் தேவாரமும் ஔவை நன்மொழிகளும்
ஆழ்வாராதியர் அனுபவ உரைகளும்
பால்வரும் திருப்புகழ் ஆதியபனுவலும்
மேல்வருங்கதிக்கென விளம்பியதிதுவே (தரு)

5 யாகங்கள் முயன்றதும் யோகங்கள் பயின்றதும்
மோகங்களை விடுத்த முனிவர் பற்பலர்
சாகங்களைப் புசித்து தவங்கிடந்துழன்றதும்
ஆகமம் பற்பலவும் அலைந்ததும் இதற்கே (தரு)

---

## தேசியத் தொண்டர்களுக்கு

வழிநடைப்பாட்டு.

---

1. தேச பக்ததிருக்கூட்டம்—தேச
சேவை செய்வதெங்கள் நாட்டம்
பாச பந்தமெல்லாம் ஓடி—விடப்
பாரதப் பெருமை பாடி (தேச)

2. பிச்சை யெடுக்க வந்ததல்ல—வேறு
பிழைக்க வழியிலை யென்றல்ல
இச்சை வந்துமிக தள்ள—தேசம்
இருக்கும் நிலைமைதனைச் சொல்ல (தேச)

3. தூங்கித் தூங்கி விழும் தமிழா—உந்தன்
தூக்கம் போக்க வந்தோம் தமிழா !
ஏங்கிப் படுத்திருக்கும் தமிழா!—உன்னை
எழுப்ப வந்தசக்தி தமிழா (தேச)

4. எழுந்து நின்று கண்ணைத்துடைத்து—உந்தன்
இருகையாலும் கொடிபிடித்து
அழுந்திக் கீழிருந்து வாடும்—அன்னை
அடிமை நீக்க வழிதேடும் (தேச)

5. வெட்டி வெட்டி யெறிந்தாலும்—மற்றும்
வேறுஹிம்சை புரிந்தாலும்
சுட்டி ரத்தம் சொறிந்தாலும்—நாங்கள்
தூய்மை மாறிடோம் நாளும் (தேச)

6 சாந்த மூர்த்தியந்தக் காந்தி—சொன்ன
சத்தியத்தையே ஏந்தி
மாந்தர் யாருமினி உய்ய—உயர்
மார்க்க போதனைகள் செய்ய (தேச)

7. தேவிசக்திதுணை கொண்டு—இந்த
தேசம் சுற்றிவா வென்று
கூவிக்கூவி யெங்கள் தொண்டு—புரியக்
குறைகள் தீருமினி நன்று (தேச)

1930-ம்வருஷத்தில் மஹாத்மா காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரஹத்தை ஆரம்பித்து "டாண்டி"க்குப் புறப்படப்போகிறாரென்ற போது பாடியது.

## சத்தியப் போர்.

1. கத்தியின்றி ரத்தமின்றி—யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர் (கத்)

2. ஒண்டி அண்டி குண்டுவிட்டு—உயிர் பறித்தலின்றியே
மண்டலத்தில் கண்டிலாத சண்டையொன்று புதுமையே (கத்)

3. குதிரையில்லை யானையில்லைக் கொல்லும் ஆசையில்லையே
எதிரியென்று யாருமில்லை ஏற்றும் ஆசையில்லதாய் (கத்)

4. கோபமில்லை தாபமில்லை—சாபங்கூறல் இல்லையே
பாபமான செய்கையொன்றும் பண்ணுமாசையின்றியே (கத்)



5. கண்டதில்லை கேட்டதில்லை சண்டையிந்த மாதிரி
பண்டைசெய்த புண்ணியம் பலித்ததே நாம்பார்த்திட

6. காந்தியென்ற சாந்தமூர்த்தி தேர்ந்துகாட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற வாய்ந்ததெய்வ மார்க்கமே (கத்)

---

## முருகன் மேற் காதல்.

1. முருகனென்ற பெயர் சொன்னால்
உருகு தெந்தனுளம் என்னே!
பெருகி நீர்விழிகள் சோர
பித்துகொள்ளுது உள் ளூற (முரு)

2. கந்தனென்று சொலும் முன்னே
சிந்தை துள்ளுவது என்னே!
உந்தும் பேச்சுரைகள் ஊறி
ஊமை யாகுதுளம் குளிர (முரு)

3. வேலனென்ற பெயர் கேட்டு
வேர்வை கொட்டுதுதன் பாட்டில்
காலனென்ற பயம் ஓடி
களி சிறக்குதடி சேடி (முரு)

4. குமரனென்ற ஒரு சத்தம்
குளிர வந்ததடி சித்தம்
அமர வாழ்வுபெறல் ஆனேன்
அடிமையார்க்குமிலை நானே (முரு)

5. குகனெனச் சொல்வதற் குள்ளே
அகம் மறந்தேன் என்ன கள்ளோ!
தகதகவென் றொரு காட்சி
தண்ணென முன்வரல் ஆச்சு (முரு)

6. ஆடும் மயிலில் வரக்கண்டேன்
அழகு அதைவிட ஒன்றுண்டோ
வீடு வாசல்பொருள் எல்லாம்
விட்டு மறந்தனடி நல்லாள் (முரு)

7. பச்சைக் குழந்தையவன் மேலே
பற்று மிகுந்த தெதனாலே?
இச்சை யாறமிகத் தழுவி
இணங்கி யிருந்தனின்பம்முழுகி (முரு)

8. கள்ளங் கபடமற்ற பாலன்
காதல்கொண்ட என்னை ஞாலம்
எள்ளி எளனம் செய்தாலும்
எதற்கு மஞ்சிலன் எக்காலும் (முரு)

9. முருகன் கந்தன் வடிவேலன்
திருகுகன் குமரன் சீலன்
சிறு குழந்தை யானாலும்
திருமணம் புரிவன் மேலும் (முரு)

10. வேறு பெயரைச் சொன்னாலும்
விரும்ப மாட்டெனெந்த நாளும்
தூறு பேசுவதை விட்டு
துணைபுரி முருகனைக் கட்ட (முரு)

## தீண்டாமை ஒழிய.

1. தீண்டாமை யென்கின்றத் தீய வழக்கம்
தீரத் தொலைந்திட நாளாச்சு
ஆண்டவன் பொதுவென்று நம்பினயாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும் (தீண்)



2. இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தினை வெட்டுது வாளாய்
நிந்தை மிகுந்து அழிந்திடுமுன்னே
நீக்கிட யாரும் எழுந்திடும்இன்னே. (தீண்)

3. வேதத்திலில்லை கீதையில்இல்லை
வேறுள்ள சாத்திரம் யாருக்கினி?
சாதித்து யாரையும் சண்டாளனென்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ? (தீண்)

4. நால்வருரைத்ததே வாரத்திலில்லை
நந்தன் குலத்துக்கு நிந்தைசொலல்
பால்வரும் ஆழ்வார் பாசுரத்தில்லை
பாணர் வளர்ந்ததைக் கோணலெனல் (தீண்)

5. சங்கரன் காசியில் அங்கென்னசொன்னார்
சண்டாள பக்தனும் தன்குருவென்றார்
எங்கள் ராமானுஜன் தன்குலமென்றே
யாரையுங் கொண்டுடன் கோயிலுட்சென்றார் (தீண்)

6. காட்டொரு வேடனைத் தம்பியென்றெய்தி
கழுகினைத் தந்தை யெனக்கடன் செய்து
சேட்டைக் குரங்கையும் தன்னுடன் சேர்த்து
சீதாபிராமனும் செய்ததைப் பார்த்து (தீண்)

7. கண்ணப்ப னெச்சிலை முக்கண்ணனுண்டார்
கண்ணபிரான் கடைநீரையுங் கொண்டார்
எண்ணிய பக்தருக் கெளியது தெய்வம்
என்பதுவே நல்ல ஹிந்துவின் தர்மம் (தீண்)

---

# யார் சண்டாளன்?

இராகம்—நவரோஜ்.

நானே சண்டாளன்!—சரி
தானே உங்களுக்கு?

சரணங்கள்.

1. தாயை யிகழ்ந்தவன் சண்டாளன்
தந்தையை நொந்தவன் சண்டாளன்
தூயவர் நல்லோர் பெரியோரைத்
தோஷ முரைத்தவன் சண்டாளன்
தீயவை செய்தே பலர் ஏசத்
தின்றுழல் கின்றவன் சண்டாளன்
ஏவின செய்வேன் குற்ற மிலேன்
எளியவ னானேன் என்பதற்கே (நானே)

2. வீட்டை மறந்தவன் சண்டாளன்
வேசியர்க்கலைபவன் சண்டாளன்
நாட்டைக் காட்டிக் கொடுத்ததனால்
லாபமடைந்தவன் சண்டாளன்
பாட்டைத் தனிவழி வந்தோரைப்
பதுங்கி யடிப்பவன் சண்டாளன்
ஓட்டைக்குடிசையில் வாழ்கின்றேன்
ஒரு சிறுபாபமும் அறியாத (நானே)

3. நன்றி மறந்தவன் சண்டாளன்
நயமுறை வஞ்சகன் சண்டாளன்
கொன்று சுகித்தவன் சண்டாளன்
கோப மிகுந்தவன் சண்டாளன்
கன்று நலிந்திடப் பாலெல்லாம்
கறந்து புசித்தவன் சண்டாளன்
ஒன்றுந் தெரியேன் "ஏழை" என்றிடும்
ஒன்றே என்குறை அதற்காக



4 கள்ளைக் குடிப்பவன் சண்டாளன்
காமத்தலைபவன் சண்டாளன்
கொள்ளை அடிப்பவன் சண்டாளன்
கூடிக்கெடுப்பவன் சண்டாளன்
'அள்ளித்தெரிக்கா' பணக்காரன்
ஆபத் துதவான் சண்டாளன்
வெள்ளைத் துணியொன்றில்லாமல்
வேலை செய்வேன் அதற்காக (நானே)

5 தெய்வ மிகழ்ந்தவன் சண்டாளன்
தீனரைக் கெடுத்தவன் சண்டாளன்
பொய்யுரைபேசி பிறர் கேடே
புரிந்து பிழைப்பவன் சண்டாளன்
'ஐய அடைக்கலம்' என்றோரை
ஆதரிக்காதவன் சண்டாளன்
வெய்யில் மழை யென்றில்லாமல்
வேண்டிய செய்வேன் அதற்காக (நானே)

6. ஆலயத் துள்ளே அபசாரம்
அறிந்தே புரிந்தவன் சண்டாளன்
கூலியை மறைத்தவன் சண்டாளன்
கோள்சொல்லிப் பிழைப்பவன் சண்டாளன்
வேலியைக் கடந்தே பிறன்பயிரை
வேண்டுமென் றழித்தவன் சண்டாளன்
காலையும் மாலையும் இல்லாமல்
கஷ்டப் படுவேன் கள்ளமிலேன் (நானே)

7. வட்டி பெருக்கி ஏழைகளின்
வாழ்வு கெடுத்தவன் சண்டாளன்
பட்டினி எளியவர் ஆசையுடன்
பார்த்திட உண்பவன் சண்டாளன்
ஒட்டிய வழக்கில் பணத்திற்காய்
ஓரஞ் சொன்னவன் சண்டாளன்
அட்டியில்லாமல் சொன்னதெல்லாம்
அடியேன் கேட்டேன் அதற்காக (நானே)

8. தானங் கொடுப்பதைத் தடுப்போனும்
தவத்தைப் பழிப்பவன் சண்டாளன்
மானங் கெடுத்தவர் சோறுண்டு
வயிறு வளர்ப்பவன் சண்டாளன்
கானுங் காடும் உங்களுக்காய்க்
கல்லிலும் முள்ளிலும் பாடுபடும்
ஏனிங் கென்னைச் 'சண்டாளன்'
என்பது சரியோ உங்களுக்கே? (நானே)

---

## தீண்டாமை விலக்குப்பாட்டு.

---

பல்லவி.

ஓட்டடா! ஓட்டடா!—நாட்டைவிட்டு ஓட்டடா!
தீட்டடா மனிதருக்குள்—தீண்டலென்ற தீமையை (ஓ)

கண்ணிகள்.

1. தொத்து நோய்கள் மெத்தவும் தொடர்ந்துவிட்டபேரையும்
தொட்டுகிட்டி சொஸ்தமாக்கல் தர்மமென்று சொல்லுவார்!
சுத்தமேனும் ஜாதியால் தொடப்படாது என்றிடல்
தொத்துநோயைக் காட்டிலும் கொடியரென்று சொல்வதோ (ஓ)

2. நாய்குரங்கு பூனையை நத்திமுத்தமிடுகிறோம்
நாகலுண்ணும் பன்றியும் நம்மைத்தீண்ட ஒப்புவோம்
ஆயும் ஆறு அறிவுடை ஆன்மஞான மனிதனை
அருகிலே வரப்பொறுமை அறிவிலே பொருந்துமே? (ஓ)

3. செடிமரங்கள் கொடிகளும் ஜீவரென்ற உண்மையை
செகமறிந்து கொள்ளமுன்பு செய்ததிந்தநாட்டடா!
முடிவறிந்த உண்மை ஞானம் முற்றிநின்றநாட்டிலே
மூடரும் சிரிக்குமிந்த முறையிலா வழக்கமேன்? (ஓ)



4. உயிரிருக்கும் புழுவையும் ஈசனுக்கு உறையுளாய்
உணருகின்ற உண்மைஞானம் உலகினுக்குரைத்தநாம்
உயருகின்ற ஜீவருக்குள் நம்மொடொத்த மனிதனை
ஒத்திப்போகச்சொல்லுகின்ற தொத்துக்கொள்ளலாகுமோ? (ஓ)

5. அமலனாகி அங்குமிங்கும் எங்குமான கடவுளை
ஆலயத்துள் தெய்வமென்று அங்கிருந்து எண்ணுவோம்
விமலனான கடவுள் சக்திமனிதன்கிட்டி விலகினால்
வேறுஜீவர் யாவும் அந்த விமலனென்ப தெப்படி? (ஓ)

6. ஞாயமல்ல ஞாயமல்ல ஞாயமல்ல கொஞ்சமும்
நாடுகின்ற பேர்களை நாமிடைத் தடுப்பது
பாயுமந்த ஆற்றிலே பருகிவெப்பம் ஆறிடும்
பறவையோடு மிருகமிந்தப்பாரிலோர் தடுக்கிறார்? (ஓ)

---

1927-ல் சென்னையில் நடந்த காங்கிரஸில்
**S. சீனிவாசய்யங்கார் அவர்களால்**
தங்கப் பதக்கம் பரிசுபெற்றத்
**தேசீயப்பாட்டுகள்**

---

(சுருட்டி, நீலாம்பரி, முகாரி, பைரவி, ஆனந்தபைரவி
முதலான ராகங்களில் பாடலாம் தாளம் ரூபகம்.)

### நெஞ்சொடு கிளத்தல்.

அறுசீர் விருத்தம்.

1. நாட்டை மறந்தனை மனமே
நாளுமிங் கெளியவர் வருந்தும்
பாட்டை நினைந்திலைச் சிறிதும்
படித்தனை யதன் பயன் இதுவோ
பூட்டிய விலங்குடன் புலம்பும்
பெற்ற பொன்னாட்டினைப் போற்றாய்
ஏட்டிற் படித்தனை வேதம்
ஏதும்உன் செய்கையில் இல்லை!

2. வேதம்வே தாந்தங்கள் வளர்ந்து
வேண்டிய வளம்முற் றும் பொருந்திப்
பூதங்கள் விபத்துக்கள் குறைந்து
பூமியில் இணையற்ற நாட்டில்
சாதமும் வயிற்றிற்கில் லாமல்
சாகாதும் பிணமெனத் தளர்ந்தோம்
ஏததன் காரணம் என்றே
எண்ணவும் மாட்டனை நெஞ்சே!

3. தன்னுயிர் போற்பிற உயிரைத்
தாங்கிய பெரியவர் வாழ்ந்து
பொன்னொளி வீசிய நாட்டின்
புகழறம் நீபிறந் தழித்தாய்
அன்னியர்க் குளவுகள் சொல்லி
அவர்தந்த எச்சிலை அருந்தி
உன்னுடன் பிறந்தவர் வருந்த
உடல்சுகித் திருந்தனை மனமே!

4. மாற்றவர்க் கிடங்கொடுத் தேழை
மக்களைப் பிழிந்துடல் வளர்த்தாய்
கூற்றுவன் கணக்கிடும் நாளில்
கூறுவை பதிலென்ன மனமே!
வீற்றிருந் தாண்ட உன் அரசை
விற்றுடல் சோப்பினை யினிமேல்
ஆற்றுவை இப்பழி அகற்ற அன்னையின்
விடுதலைக் கறமே.

5. சொர்ந்தசு தந்திரம் மறந்தாய்
சோற்றினுக் குடல்சுமந் திருந்தாய்
பந்தம கன்றிட நினையாய்
பாரதத் தாயினைப் பாடாய்
அந்த மிலாதவள் செல்வம் அன்னியர்க்
கிழந்தனைக் குடிகள்
கந்தையும் கஞ்சியும் அற்றார் காரணம்
நீயெனக் கருதாய்



6. அடிமையிற் பழகினைப் பொழுதும்
ஆண்மையை மறந்தனை முழுதும்
குடிமுறை குறைந்தனைச் சிறிதும்
குலமுறை நினைந்திலைப் பெரிதும்
மிடிமையிற் கிடந்ததுன் நாடு
மேன்மையை இழந்ததுன் வீடு
மடமையில் மயங்கியிப் பிறப்பின்
மகிமையை மறந்தனை மனமே!

7. கொண்டவள் குலக்கொடி வாடக்
கூத்தியர் மையலிற் குறையும்
வண்டர்கள் எனவல்ல முன்னோர்
வழக்க ஒழுக்கத்தை மறந்து
கண்டவர் சிரித்திடக் களித்து
கற்றவர் மொழிகளைப் பழித்து
அண்டிய அயலவர் மயக்கால்
அழித்தனை மனையறம் அறிவோ?

8. ஜாதியை மதத்தினைப் பழித்துச்
சண்டையில் உவந்தனை மனமே
வாதுகள் மிகுந்தன நாட்டில்
வறியவர் வரிகளால் வருந்த
எதினி விடுதலை எனவே
யாவரும் எங்கினர் நல்லோர்
ஓதிய ஒற்றுமைக் குழைத்து
ஒப்புற ஒழுகுவை உயர்வாய்.

9. தேனுள்ள தாமரைமேலே
தினமுள்ள தவளையைப் போல
நானுள்ள இப்பெரும் நாட்டின்
ஞானமெல் லாந்திறண் டாற்போல்
ஊனுள்ள தேகத்தினோடும்
உன்முன்னே காந்தியொன் றுற்றும்
ஏனென்ன என்றிலை மனமே
இருந்தென்ன போயென்ன நீயே.

10. ஆண்டவன் உனக்கென்ற நாட்டில்
அன்னியர்க் காசளித் தடிமை
பூண்டுடல் வளர்த்தனை நெஞ்சே
புண்ணியம் உனக்கிலை நரகே
மீண்டுமுன் நாட்டினை மீட்க
மெய்ப்பொருள் ஆவியும் ஈந்து
ஆண்டொழில் புரிகுவை யாயின்
ஆன்ம சுதந்திரம் அடைவாய்.

---

## சத்தியச்சங்கு.

---

(1) சத்தியம் நிலைக்குமென்று சங்கூதுவோம்
சாந்தமே ஜெயிக்குமென்று சங்கூதுவோம்
நித்தியம் கடவுளென்று சங்கூதுவோம்
நீர்க்குமிழாம் வாழ்க்கையென்று சங்கூதுவோம் (சத்)

(2) நீதியே நிலைக்குமென்று சங்கூதுவோம்
ஞாயமே கெலிக்குமென்று சங்கூதுவோம்
வாதுசூது பொய்மையாவும் ஒன்றோடொன்றாய்
வம்புகொண்டு மறையுமென்று சங்கூதுவோம் (சத்)

(3) புண்ணியம் பலிக்குமென்று சங்கூதுவோம்
பொறுமையே கெலிக்குமென்று சங்கூதுவோம்
மண்ணிற்செய்த நன்மைதீமை யல்லாமலே
மற்றதொன்றும் மிச்சமில்லை என்றூதுவோம் (சத்)

(4) தருமமே நிலைக்குமென்று சங்கூதுவோம்
தானமே தழைக்குமென்று சங்கூதுவோம்
கருமமே சிறக்குமென்று சங்கூதுவோம்
கடவுளுண்மை வடிவமென்று சங்கூதுவோம் (சத்)



(5) உண்மையைக் கடைப்பிடித்து யர்ந்தார்களை
உலகமோசம் என்னசெய்யும் என்றூதுவோம்
தண்மையான சாந்திபெற்ற தக்கோர்முனே
சஞ்சலங்கள் ஓடுமென்று சங்கூதுவோம் (சத்)

(6) கோபமற்று குணமிகுந்த நல்லோர் முன்னால்
கூர்மழுங்கும் ஆயுதங்கள் என்றூதுவோம்
பாபமற்ற வாழ்க்கையுள்ள பண்பாளரை
பயமுறுத்த ஒன்றுமில்லை என்றூதுவோம் (சத்)

(7) அன்புகொண்டு ஆசையற்ற நல்லார்களை
அரசனும் வணங்குமென்று சங்கூதுவோம்
வம்புதுன்பம் வஞ்சமாயம் எல்லாமிதோ
வழிகொடுத்து விலகுமென்று சங்கூதுவோம் (சத்)

(8) கொல்லுகின்ற தில்லையென்ற நல்லோர்கள்பேர்
குவலயத்தில் வாழுமென்று சங்கூதுவோம்
வெல்லுகின்ற போதுமாசை விட்டார்களே
வீரர்தீரர் சூரரென்று சங்கூதுவோம் (சத்)

(9) ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை
அடிமையாக்க யாருமில்லை என்றூதுவோம்
தான்மறந் தகந்தைவிட்ட தக்காரையே
தலைவணங்கும் உலகமென்று சங்கூதுவோம் (சத்)

(10) சாந்திசாந்தி சாந்தியென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்திகாந்தி காந்தியென்று நம்நாட்டிலே
கால்நடக்கும் வேதமென்று சங்கூதுவோம் (சத்)

அன்புதான் தெய்வம் ஏழைக்
கருள்வதத் தெய்வ பூசை
முன்பு நாம் மஹமத் ஏசு
புத்தரும் மொழியக் கேட்டோம்
என்பெலாம் உருக ஏழை
எளியவர்க் காக வாழும்
வம்பிலா மார்க்கந் தந்த
காந்தியார் வாழ்க வாழ்க.

## 28-12-31ல் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு திரும்பிவரும் மகாத்மா காந்திக்கு வரவேற்பு.

1. எட்டளவிருந்த வேதம் இதுவென எடுத்துக்காட்டி
எழுத்தளவிருந்த கீதம் செய்கையில் ஏந்திநின்று
வீட்டளவிருந்த காதல் விருந்தொடு விரியச்செய்து
விருந்தளவிருந்த நேசம் வியன்பெரு நாட்டிற்காக்கி
நாட்டளவிருந்த அன்பை நானிலம் முழுதும்நாட்டி
நானிலத்தெவர்க்கும் அன்பே நாதனைக் காண்பதென்று
காட்டினை சொல்லாலல்ல ஒழுக்கத்தால் கருணை வாழ்வின்
காந்தியே வீசும்சாந்தக் காந்தியே வருக ஐயா.

2. பக்தியென்றாடுகின்றோம் பஜனையாம் பாடுகின்றோம்
பாகவதமென்றுபல படிப்போம் நித்தம்
முத்தியென்றோதுகின்றோம் மோக்ஷமே பேச்சிலெல்லாம்
மோனமென ஞானமென மொழிவோம் முற்றும்
சத்தினைப் போகவிட்டுச் சக்கையைப்பற்றி வாழ்ந்தோம்
சாத்திரத்தின் சாரமதை உணர்ந்த தக்கோர்
கத்துவதென்றும் மாறா ஒழுக்கத்தின் கருணைவாழ்வின்
காந்தியே வீசும்சாந்தக் காந்தியே வருக ஐயா.

3. நெற்றியில் நீறுநாமம் நிறைந்திடப் பூசியென்ன?
நியமும்நிஷ்டையென்று நீண்டநாதால் நேரமென்ன?
பற்றிய ஜெபம்செய்மாலைப் பகலிரவிருந்துமென்ன?
பார்த்தவர்மருளும் யோக ஆசனம் பழகியென்ன?
சுற்றிய எவரும் நம்மால் துன்புறாத்தூயவாழ்வும்
தோன்றிய ஜீவரெல்லாம் துணையெனக் கருதுமன்பும்
கற்றனை வாழ்வில் என்றும் காட்டினைக் கருணைவாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக் காந்தியேவருக ஐயா.



4. திடமொடு உதித்த ஞானத்திருவருளடைந்த பேரும்
தெளிந்தவர் மொழிந்தவற்றைத் திளைந்ததில் தெரிந்தபேரும்
அடவியில் இருந்து நாளும் அருந்தவம் புரிந்தபேரும்
அடைக்கலம் குருவைநாடி அருள்வழி அறிந்தபேரும்
இடம்நிறம் காலமென்னும் இவைகளில் எதில்வந்தாரும்
இவ்வுலகுதித்த பின்னர் இந்த நாளளவும் யாரும்
கடவுளின் இருக்கை கண்டோர் காட்டிய கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்காந்தியே வருக ஐயா.

5. முனிவரர் கோடிகோடி முயற்சியாற் சிறந்த நாட்டை
மூடவெம் மதியினாலே முயக்கினோம் அடிமைவாழ்வில்
தனிவருந்துயரில் நோயில் தரித்திரத்தாலேவாடி
தளர்ந்திடும் ஏழைமக்கள் துயரத்தைத் தாங்கிநின்றாய்
இனிவரும் அணித்தேயென்று எண்ணவும் முடியாமேன்மை
இப்பெரும் உன்னைப்பெற்றும் சோம்பினோம் இகழ்ந்துநின்றோம்
கனிபெருந்தூய வாழ்வின்கண்ணெனும் கருணைவாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக் காந்தியே வருக ஐயா

6. என்கடன் பணிகள்செய்து கிடப்பதே யென்றுமுற்றும்
ஏழைகட்காக வாழ்ந்தோர் எண்ணிலாரிருந்த நாட்டை
துன்புடையடிமை வாழ்வின் துயரிடை யழுத்திவிட்டோம்
தூயவர் சொல்லையெல்லாம் தூற்றினோம் காற்றிலேயோ
வன்பெரும் மிடியால்வாடும் வறியவர்க் குழைத்தலன்றி
வாழ்விலை நமக்கேயென்று வகுத்தனை யுணர்ந்தோமையா
கன்மனமுடையோரேனும் கனிந்திடும் கருணைவாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக் காந்தியே வருக ஐயா.

7. பகையென நினைத்தபேரும் அன்பொடு பணிந்து போற்றப்
பாரெலாம் இமைகொட்டாமல் பார்த்திடுந் தனித்தூதாகி
இகசுகம் மிகுந்ததாலே இறைவனை மறந்தாலொக்கும்
இலண்டன்மா நகரஞ்சென்று ஏழைகளிடையே தங்கி
நகைமுகம் மாறிடாமல் நாளுடன் பைந்தும் போற்றி
நலிவிலா வீரச்சொல்லால் நாட்டினுய் நமதுஞாயம்
தகைபெரும் பாரதநாட்டின் தவமெனும் கருணைவாழ்வே
சாந்தமே காந்திவீசும் காந்தியே வருக வாழ்க.

## வேலூர் சிறையில் ஆங்கீரஸ வருஷப்பிறப்புநாளில் பாடிய புதுவருஷப்பாட்டு.

(தமிழணங்கின் தோற்றத்தைக் கண்ட தமிழர்கள் தமிழ்த்தாயின் புதுவருட அலங்காரத்தைக் கண்டு போற்றி வரங்கேட்டல்.)

1. எண்ணிலா ஆண்டுகண்டிங் கிருந்தவளெனினுமின்னுங்
கண்ணினுக் கினியதூய கன்னியாயென்றும் நின்று
தண்ணொளியழகு காட்டும் தமிழகத்தாயே இன்றுன்
புண்ணியம்நிறைந்த வாழ்வில் புதியதோர் ஆண்டுபூண்டாய்.

2. காங்கிரஸ் காரர்யாரும் காந்தியெம் அடிகளாதி
ஆங்கிலர் சிறையிற்றள்ள அருந்தவங்கிடக்குமிந்நாள்
ஆங்கீ இரசமென்றோதும் ஆண்டினைப்பூண்டுவந்தாய்
பாங்கியே இந்தக் கோலம் பார்த்திலம்முன்னம் நாங்கள்.

3. புதியதிவ் வாண்டில் மிக்கப் புதியதோர் அழகுபூண்டாய்
நிதியமும் இழந்ததெல்லாம் நீயடைந்திட்டாய்போல
விதியினைக்கடந்தஞான வித்தகர் தெளிவுபூண்டாய்
புதியது புதியதம்மா புகுந்த உன்கோலம் இன்று.

4. வாடினை யிருந்தமேனி வளமிகும் வடிவுகாட்டிக்
கூடின புருவம் இன்றுக் குளிர்ந்தன களிக்கக்கண்டோம்
பாடினை இனியகீதம் பற்பல ஆண்டுக்கிப்பால்
ஆடினை அடையாளத்தை அறிந்திலம் முதலில்நாங்கள்

5. முன்னம் நீ எம்பாற் கொண்ட முணுமுணுப்பின்று காணோம்
அன்னை நீ முன்னம் காட்டும் அருவருப்பின்று காணோம்
பின்னும் நீ எம்பாற்பேசும் பிணக்கினைக் காணோமின்று
என்னமோ புதுமையாக இருக்கிறதெங்கள் தாயே.

6. வீட்டினிலிருந்தபோது வெருண்டெமை மருண்டுபார்ப்பாய்
கூட்டினிற் கிடக்குமிந்நாள் குளிர்ந்தனைச் சிரித்துவந்தாய்
நீட்டினை முடங்கிநொந்த நின்னுடை அங்கம் பூத்துக்
காட்டினை என்றுங் காணா கட்டழகுடனே வந்தாய்.



7. எண்ணெயும் மறந்தஉந்தன் இருண்டடைசுருண்டகூந்தல்
வண்ணமாய் வாரிமிக்க வாசனைமலருஞ்சூடி
திண்ணமாய் சக்திக்கானத் திலகமும் தீட்டியுந்தன்
கண்ணியல் மையினோடு கலவையின் மையுந்தீட்டி.

8. பற்பல வாண்டின் முன்னே வெறுத்தஉன் பணிகளெல்லாம்
அற்புத உந்தன்மேனி அழகுற அணிந்தாயின்று
கற்பனைக்கடந்த வேலை கதிர்விரியுடையும் பூண்டாய்
நிற்பதுகண்டோம் என்ன நினைந்திவை புனைந்ததம்மா?

9. புத்தொளி புனைந்துஎம்முன் புத்துயிரளிக்கவந்தாய்
இத்தினம் உந்தன் ஆண்டு விழவினில் எங்கள் தாயே
பத்தியுன் பாதம்போற்றிப் பணிந்துனை வேண்டுகின்றோம்
உத்தமீ எங்கட்கின்று ஒருவரம் தருதல்வேண்டும்.

10. அடிமையின் வாழ்வுநீங்க ஆண்மையும் அறிவும்வந்துக்
குடிமையின் முறையும் சொந்தக்கோல் நெறியரசும்கொண்டு
படிமிசை யெவர்க்கும் அஞ்சிப் பணிந்திடா பலமும்பற்றி
விடுதலை யடையத்தேசம் வழிவிடவேண்டும்தாயே.

11. சோறிலை யென்பாரின்றித் துணியிலையென்றும் உண்ணும்
நீரிலையென்றும் நிற்க நிழலிலையென்றும்சுற்றத்
தாரிலையென்பா ரோடுந் தாழ்ந்தவரென் பாரின்றி
பாரினில் எவர்க்கும் நாங்கள் பகையிலை என்றவாழ்வில்

12. ஏழையென் றெவருமின்றி எளியரென்பாருமின்றி
கோழை யென்றுரைக்க ஆண்மைக் குறைந்தவர் ஒருவரின்றி
மேழியும் தொழிலும்தங்க மேதினிப் பொருள்கள்யாவும்
வாழிய எவர்க்கும் கிட்டி வருந்துவா ரெவருமின்றி

13. எண்ணெழுத் திரண்டுங்கல்லார் இல்லையின்னாட்டிலென்னப்
பெண்ணொடு ஆணும்ஒத்துப் பிணக்கிலா தம்தம்வாழ்வை
எண்ணிய இறைவனுனைக் கிடரிலா ஒழுங்கில்வந்தும்
புண்ணிய வாழ்விற்காசி புரிந்திடல்வேண்டுந்தாயே.

14. என்னுடை நாடிந்நாடு என்றிதிற்பிறந்தயாரும்
தன்னுடை யறத்தைச் செய்யத் தடுப்பவர்யாருமின்றி
'மன்னவன் நானே' என்று மனங்களித்தினிதுவாழ
இன்னவை வரயேவேண்டி இணையடிபணிந்தோம் தாயே.

## தமிழர்களுக்கு தாய் வரங்கொடுத்து பதிலுரைத்தல்.

---

1. தந்தனனிவ்வரம்—தந்தனனிவ்வரம்—தந்தனன் என்மகனே
வந்ததுவாழ்வினி—வெந்ததுதீவினை—வாழ்ந்தனை உன்செயலால்

2. நாட்டையிவ் வடிமையின்-மீட்டிடுவேனென்று-நாட்டினைதவக்
[கொடியே
கேட்டுமகிழ்ந்துனைப்-பார்த்துப்புகழ்ந்திடக்-கிட்டினனிங்குவந்தேன்

3. தருமமுணர்ந்தனைக்-கருமமறிந்தனைத்-தாயெனநீநினைத்தாய் [ன்
பெருமையளித்தனைச்-சிறுமையொழித்தனை-பெற்றமனங்களித்தே

4. அச்சமகற்றினை-ஆண்மைபெருக்கினை-ஆநந்தம் பொங்குதடா
இச்சையதன்படி-யாவுமுனக்கினி-இல்லறம்தங்குமடா

5. தீயவைவிட்டனைத்-தூயவைதொட்டனைத்-தெளிவடைந்தாய்
[மகனே
போயின என்னுடை-மனக்குறையாவையும்-புத்தொளிபூண்டுவிட்டேன்.

6. உன்னையுணர்ந்தனை-என்னையுவந்தனை-உண்மையறிந்துவிட்டாய்
இன்னுமெனக்கினி-என்னமனக்குறை இன்னல்மறந்துவிட்டேன்

7. என்னுடை நாடெனச் சொன்னஉன்சொற்களில் என்மனங்குளிர்ந்ததடா
பின்னியதுயர்விட-பொன்னொளியணிமணி-பூண்டுமகிழ்ந்ததடா.

8. சத்தியமுன்னுடைச்-சித்தமுதித்தது-சஞ்சலம் என்மகனே ?
பொய்த்தவர்வஞ்சமும் புகுந்தவர்மோசமும்-போவதுகாண்மகனே

9. சாந்திபிறந்துயர் காந்திவிரிக்குது-சங்கடம் தீர்ந்ததடா
போந்ததுபுத்துயிர்-புகுந்ததுதைரியம்- புதுவருஷத்தோடே

10. திங்கள் மும்மாரியிற்-பொங்கிடும் பாலினி தேசம் செழிக்குமடா
மங்களம் மங்களம்-மங்களமுனக்கினி மகனே எழுந்திடடா.

---



## அன்னிய நாட்டு சம்பந்தத்தால் மயங்கிக் கிடக்கும் மக்களை நினைத்து இந்தியத் தாயின் புலம்பல்.

---

(அழுகணிசித்தர் பாடல் மாதிரி)

1. காலக்கதியடியோ கைவிரித்து நான்புலம்ப
ஆலம்விதையெனவே அளவிறந்த மக்கள்பெற்றும்
ஞாலத்தில் என்னைப்போல் நலிந்தாளொருத்தியுண்டோ ?
நீலக்கடலுலகில் நீடித்தும் பிள்ளைகளால்
கோலமிழந்துநிலை குலைந்துருகி வாடுகின்றேன்.

2. மெத்தப்பகட்டுடையாள் மேற்கத்திப் பெண்ணொருத்தி
'அத்தை' யெனக்கூவி யெந்தன் ஆசாரவாசலிலே
தத்தித்தடுமாறித் தலைவணங்கி நின்றிருந்தாள்.
"புத்தம்புதிய பெண்ணே போந்தகுறை என்னசொல்லு
சித்தங்கலங்காதே சின்னவளே" என்று சொன்னேன்.

3. வெள்ளைத்துகிலுடுத்து வெட்டிருந்தப் பட்டணிந்து
கள்ளக்குறி சிறிதும் காட்டா முகத்தினளாய்
அள்ளிச்சொருகிவிட்ட அழகான கூந்தலுடன்
பிள்ளைமொழிவதெனப் பின்னுகின்றசொற்பேசி
மெல்லத்தலைகுனிந்தே மெல்லியலாள் நின்றிருந்தாள்.

4. "எங்கிருந்து இங்குவந்தாய்? என்னகுறைபெண்மணியே?
சங்கிருந்த வெண்ணிறத்தாய்! சஞ்சலத்தால் வந்ததுண்டோ
இங்கிருந்து உள்ளதைநீ என்னுடைய மக்களுடன்
பங்கிருந்து கொள்வாய்நீ பயமொழிவாய்" என்றுசொல்லி
இங்கிதம்நான் சொன்னவுடன் இருதாளும்மண்டியிட்டு,

5. குன்னி உரைகுளறிக்குளிரால் நடுங்கினள்போல்
சின்னஞ்சிறு குரலால் சிந்தைமிக நொந்தவளாய்
"உன்னுடனே பிறந்தோன் ஊரைவிட்ட ஆரியனும்
முன்னம் உனைப்பிரிந்து மேல்நாடுமேவினவன்
அன்னவன்புத்திரி நான் அத்தைநீர் சித்தம்" என்றாள்.

6. "நெஞ்சம்கலங்காதே நீயெதற்கும் அஞ்சாதே
தஞ்சமுனக்கிருப்பேன் தையலே மெய்யிதுகாண்
கொஞ்சும் இளவயதில் குறையுனக்கு வந்ததென்ன?
பஞ்சையெனத்தனியே பட்டணத்தைவிட்டுவந்தாய்
வஞ்சியிளங்கொடியே வந்துபசியாறும்" என்றேன்

7. சற்றுத்தலை நிமிர்ந்தாள் தையலவள் புன்சிரிப்பு
உற்றமுகத்தினொடு உள்ளம் குளிர்ந்தவள்போல்
சுற்றிஅயல்பார்த்துச் சொன்னபடி என்னுடனே
முற்றமதனைவிட்டு முன்கட்டில் வந்துநின்று
தத்தியதன்மேல் நடக்கத் தயங்கினவள்போலநின்றாள்.

8. "தாவில்லை உள்ளேநீ தாராளமாய் வரலாம்
வா"வென்று சொன்னவுடன் வல்லியவள் மெல்லவந்தாள்.
தூவெள்ளையான அவள் துணியும், அணியிழந்தும்
தாவள்யமான அந்தத் தையலவள் மெய்யழகில்
'கோ' வென்று கூட்டமிட்டென் குழந்தைமார்கூடிவிட்டார்.

9. ஆனபடி என்னுடனே அன்னமந்தக் கன்னிவர
மேனியவள் ஆடையெல்லாம் வாடையொன்றுவீசியது.
"ஏனிதிளங்கொடியே! என்ன?" வென்றுகேட்டதற்கு
"மீனுணவும் ஊனுணவும் மெத்தஉண்டதத்தையரே"
தேனுங்கனிகாய் என்தேசத்தில் கொஞ்சம்" என்றாள்.

10. சொல்லி முகஞ்சுளித்தாள் சோகமதை நான்மாற்றி
கொல்லைச் சிறுவீட்டிற் கொண்டவளைச் சென்றிருத்தி
மல்லிகை முல்லைமலர் மணமிருந்த நன்னீரால்
அல்லிநிறத்தவளை அங்கமெல்லாம் நீராட்டி
மெல்லத் துவட்டிவிட்டு மெய்யழகு செய்துவைத்து,



11. தக்க உடைகொடுத்து டக்காவின் சல்லாவால்
மிக்க விலையுயர்ந்து மிகமெலிந்த ஆடையினால்
ஒக்க அவளைமிக ஒய்யாரம் செய்துவிட்டு
பக்கம் உடனிருத்திப் பரிந்தேவிருந்துமிட்டேன்
துக்கம்மிக ஆறியவள் துதித்தாள் மிகவும்என்னை.

12 என்னுடைய மக்களுடன் என்வீட்டுத்தாதியரும்
இன்னும் பணியாட்கள் எல்லோரும் பக்தியுடன்
என்ன சிறுகுறையும் ஏதுமவட்கில்லாமல்
சொன்னபடி எல்லாரும் சோடசஉபசாரம்
பண்ணியந்தப் பெண்மணியைப் பார்த்துவந்தார் நேர்த்தியுடன்.

13. அஞ்சியடக்கமுடன் அத்தையென்று பக்தியுடன்
வஞ்சியிளங்கொடியாள் வாழ்ந்திருந்தாள் வீட்டில்எந்தன்
குஞ்சுகுழந்தையெல்லாம் கோதையவள் தன்னிடத்தில்
கொஞ்சிவிளையாடிக் குலவிமகிழ்ந்திருந்தார்
நெஞ்சம் மிகக்களித்து நிம்மதியாய் நானிருந்தேன்.

14. இந்தவிதம் என்வீட்டில் என்னுடைய மக்களினும்
சொந்தம் மிகக்கொண்டாடிச் சொன்னபடி கேட்டுவந்து
வந்திருக்கும் நாளையிலே ஒருநாள் அருகில்வந்து
"எந்தனுடை ஊரின்மேல் ஏக்கமின்று வந்ததனால்
உந்தனுடை உத்தரவில் ஓலைவிட ஆசை" என்றாள்.

15. "என்னதடை இதற்கு எழுதுவா" யென்று சொன்னேன்
சொன்னவுடன் எந்தனுக்குத் தோன்றாதபாஷையிலே
கன்னியவள் தன்னவர்க்குக் காகிதமும் போட்டுவிட்டாள்.
பின்னைச் சிலநாளில் பெண்ணவளின் தன்னினத்தார் [றும்
அண்ணனென்றும், தம்பியென்றும் அக்கமென்றும்பக்கமென்

16. வந்தார் பலபேர்கள் வந்தவரைச் சொந்தமுடன்
தந்தேனிடமவர்க்கும் தக்கவிருந்துமிட்டேன்
சந்தேகம் நானவர்மேல் சற்றும் நினைக்காமல்
அந்தோ! இருந்துவிட்டேன் அந்த ஒரு காரணத்தால்
நொந்தேன் நிலைதவறி நோவேன் விதியினையே.

17. அன்னவர்கள் கொண்டுவந்த அழகாம் பலபொருள்கள்
மின்னுகின்ற கண்ணாடி மினுக்குகின்ற பொம்மைகளும்
இன்னும் மயக்குகின்ற என்னென்னமோ பொருள்கள்
என்னுடைய மக்களுக்கு எடுத்துக் கொடுத்தவளாய்
கன்னியவள் சிரிக்கக் களித்துவிட்டார் மக்களெல்லாம்.

18. நாளுக்குநாள தன்மேல் நலிந்ததடி என்வீடு
மேலுக்குமேலாக மிகவும் பயந்தவள்போல்
'பாலுக்குங் காவலொடு பூனைக்கும் தோழ'னென்றே
தோல்நிற்க உள்ளிருந்த சுளைமறைத்த கொள்கையென.
கோல்செய்த என்வாழ்வைக் குலைத்துவிட்டாள் மெல்ல மெல்ல

19. என்ன உரைத்தாளோ! எதுமருந்திட்டாளோ!
அன்னை தந்தை தெய்வமென்று ஆராதனைபுரிந்த
என்னுடைய மக்களென்னை எறெடுத்தும்பார்ப்பதில்லை
சொன்னபடி கேட்பதில்லைத் 'தூ' வென்றும்'' 'போ' வென்றும்
கன்னியவள் மோகததால் காலால் எனை உதைப்பார்.

20. கொண்டசமயம் விட்டார் குலதெய்வப்பூசைவிட்டார்
பண்டைப் பெருமையுள்ள பக்திகளும் விட்டொழிந்தார்
கண்டபடி உண்டுடுத்துக் கண்டபடியாய்க்களித்து
பெண்டொருத்தி தன்மயக்கில்பெற்ற என்னையும்மிகழ்ந்து
சண்டையிட்டுத் திரிவார்நான்தவங்கிடந்த மக்களெல்லாம்

---



# காந்தி சரித்திர நொண்டிச் சிந்து.

ஆனந்தவிகடனில் பரிசுபெற்றது.

காந்தியின் சரிதம் சொல்லுவேன் நல்லோர்
காதுக்கினிப்பது அதைக் காட்டிலு முண்டோ ?
மாந்தர்க்குயர் தர்ம மெல்லாம் காந்தி
மகாத்மாவின் வாழ்க்கையிலே மலிந்திருக்கும்
புண்ணியக் கதை இதுவே கேட்டால்
பூதலத்தில் மூர்க்கருக்கும் பொறுமைவரும்
கண்ணியம் கனதையென்று பழைய
கதைகளில் முன்பு நாம் கேட்டனவெல்லாம்
சத்தியம் வடிவெடுத்து வேதம்
சாந்தி சாந்தியென்ற சாந்தத்துடனே
இத்தரையிற் கண்டு களிக்க இன்னும்
இருந்தே அறந்தருமோர் பெருந்தகையார்
கூர்ஜா வடநாட்டில் நல்ல
குணமிகும் போர்பந்தர் சமஸ்தானம்
தார்முடி மன்னர்க்கு ராஜ
தந்திர முறைக்குந்திறல் மந்திரிகளாய்
வாழ்ந்தவர் பரம்பரையில் குஜராத்
வாணிய குலத்துக்கொரு ஆணி யெனலாம்
காம்சந்த் என்பவரின் மனைவி
கற்பில் அருந் ததியென்னும் பொற்புடையவர்
புத்திர வதியாரின் மூன்றும்
புத்திரா கப்பிறந்தார் உத்தமர் காந்தி

அன்னையுந் தந்தையுமே தாம்
அறிந்த கடவுளென்று நடந்திடுவார்
பள்ளிப் பருவத்திலும் சிறு
பையன்களின் துடுக்குகள் செய்யமாட்டார்
எள்ளளவும் பொய்பேசார் மற்ற
எவரொடும் தவறுகள் எதுவும் செய்யர்
ஆசான் மார்களுங்கூடக் கண்டே
ஆச்சரியப்படும்படி நடந்துகொள்வார்
பன்னிரண்டு வயதினிலே கஸ்தூரி
பாயென்னும் உத்தமியை மணமுடித்தார்
தாயார் பெருங்குணமும் கொண்ட
தாரந்தனக் கேற்றபடி வாய்த்த நலமும்
ஓயாப் புகழுடனே காந்தி
உலகினுக் குழைப்பதற் குதவியென்பார்
பெண்ணின் பெருமையன்றோ! நாட்டின்
பெருமைகள் யாவினுக்கும் பிறப்பிடமாம்
பத்தொன்பது வயதில் சீமை
பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் போய்ப்படிக்க
ஆசைகொண்டார் காந்தி கேட்டே
அறிந்தவர் பந்துமித்ரர் அனைவருமாய்
சீமைக்குப் போனாலே ஒழுக்கம்
சீர்கெட்டு நம் ஆசாரம் போய்விடுமென்று
தடுத்தார் பலபேர்கள் பெற்ற
தாயாரும் சம்மதிக்கத் தயங்கினின்றார்
காந்தியின் பிடிவாதம் கண்டு
கடைசியில் அன்னையொரு விதந்தேறி
"மூன்றுவித சபதங்கள் செய்து
முற்றுமவை காப்பேனென்று சத்தியஞ்செய்தால்



தருவேன் விடை" யென்று பெற்ற
தாயுரைத்த வாசகத்தைத் தலைவணங்கி
"அருள்வீர் என்ன சபதம்?" என்றார்
அன்னையவள் தன்மகனை யணைத்துச்சொல்வாள்
"மாமிசம் மதுவுண்ணல் பர
மாதர்களைக் காமுறுதல் இவைமூன்றும்
செய்யேன் என்றெனக்கே சத்தியம்
செய்தபின்னர் சீமைக்குச் செல்லுக" என்றாள்
"செய்வேன் அப்படியே அந்தச்
சீமையிலே மட்டுமல்ல சென்மமுழுதும்
செய்வேன்" என்று சொல்லி ஒரு
சிறந்த சமணசந் யாசியின் முன்னால்
சத்தியம் செய்து கொடுத்தார் தாய்
சந்தோஷ மாகவிடை கொடுத்தனுப்பச்
சீமைக்குச் சென்றங்கே தாய்க்குச்
செய்துவந்த சத்தியங்கள் பிசகாமல்
பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிப்
பம்பாய் நகரில் தொழில் செய்யும்போது
தென்னாப்பி ரிக்காவிலே சில
தெரிந்த மஹம்மதிய வியாபாரிகள்
வக்கீல் தொழிலாக ஒரு
வழக்கை நடத்த அங்கு வரக்கேட்டார்
போனார் காந்தியங்கே முன்னால்
போயிருக்கும் இந்தியர்கள் படும்பாட்டைப்
பார்த்தார் பரிதவித்தார் மீண்டும்
பம்பாய் திரும்ப மனம் படியாமல்
இந்தியரின் உரிமைக்காய் அங்கே
இருபது வருஷங்கள் இருந்துழைத்தார்

விண்ணப்பம் செய்துபார்த்தார் லண்டனில்
வேண்டிய துரைகளைக் கெஞ்சிக்கேட்டார்
கண்டபலன் ஒன்றுமின்றிக் கடைசியில்
தன்கையே தனக்குதவி என்றுதுணிந்தார்
அநியாயச் சட்டங்களைச் சிறிதும்
அஞ்சாமல் சாந்தமுடன் எதிர்ப்பதென்றே
இந்தியரை ஒன்று திரட்டிக் கேட்க
எல்லாரும் சரியென்று ஒத்துக்கொள்ளவே
தொடுத்தார் அறப்போரை இந்த
தொல்லுலகம் முன்னறிந்த தில்லையெனலாம்
சாந்தமும் சத்தியமும் நம்பும்
சர்வேசன் கருணையும் படையாகக்
காந்தியும் போர்தொடுத்தார் தாமே
கைவிரற் பதிவுசெய்யும் சட்ட மறுத்தார்
தண்டனை யிரண்டுமாதம் பெற்றுச்
சந்தோஷமாகச் சிறை முதலில் சென்றார்
ஆயிரக் கணக்காக இந்தியரும்
அங்கிருந்த சீனர்களும் சிறைக்குவந்தார்
இந்தவிதம் எட்டுவருஷம் அங்கே
இடைவிடாம லேயுழைத்தார் இடர்பொறுத்தார்
பலமுறை சிறைபுகுந்தார் மக்கள்
பத்தினியுங் கூடச்சிறை பயத்தைவிட்டார்
கல்லுடைத்து செக்குமிழுத்தார் சிறையின்
கக்கூசில் மலஜலம் வாரியெடுத்தார்
வீதியில் விலங்குடனே சர்க்கார்
வேண்டுமென்று நடத்தவும் சகித்திருந்தார்
இத்தனை துயரும் சகித்தே அங்கே
இந்தியரின் கண்ணியத்தைக் காத்து வைத்தார்



கைரேகைப் பதிவு செய்தல் இந்தியரைக்
கட்டாயக் கூலி செய்யக் கப்பலேற்றல்
தலைவரி கொடுப்பதிவை சர்க்கார்
தள்ளிவிடச்சம்மதிக்க வெற்றி யடைந்தார்
இந்தியா திரும்பி வந்தார் சொந்த
இந்நாட்டின் விடுதலைக் குழைத்திடவே
சபர்மதி ஆச்சிரமத்தை ஏற்படுத்தி
ஸத்யாக்ர ஹப்பயிரை வளர்த்துவந்தார்
சம்பரான் ஜில்லாவினிலே அவுரிச்
சாகுபடிக் கூலிகளைத் தாங்கி யுழைத்தார்
கெய்ரா ஜில்லாவினிலே விளைவு
கெட்டவர்க்கு நிலவரி விட்டிடச் செய்தார்
ஜெர்மன் சண்டைவரக் காந்தி
சேனையும்பண மும்மிகச் சேர்த்துக் கொடுத்தார்
நன்றியை நினைப்பார்கள் இந்த
நாட்டுக்கொரு நல்வழி பிறக்கு மென்றே
நம்பியிருந் தார்காந்தி ரௌலட்
சட்டங்களால் இந்தியரை நசுக்க எண்ணம்
கொண்டதைக் கண்ட பின்னர் இதுவரைக்
கொண்டிருந்த நம்பிக்கை முற்றுந் துறந்தார்
ஸாத்வீகப் போர்தொடுக்க ஜனங்களைச்
சத்திய மெடுத்துக்கொள்ளப் புத்தி புகன்றார்
பற்பல இடங்களிலே வெகு
பரபரப்புடன் மக்கள் பதைத்தெழுந்தார்
நாடெங்கும் கூக்குரலும் பஞ்சாப்
நாட்டிற்சில போர்புரிந்த பதட்டங்களும்
'டயர்' ரென் றொருபாவி அன்று
ஜலியன்வா லாவிற்சுட்ட சங்கதியும்
ராணுவச் சட்ட அமுலும் இந்த
நாட்டிற் பிறந்தவர்கள் மறப்பாரோ

கிலாபத் விஷயத்திலும்      ஆங்கிலால்
கிடைத்திருந்த வாக்குறுதி தவறியதால்
ஒத்துழைப் பினிமேலே      சிறிதும்
உதவா தென்றுமனம் உறுதிகொண்டார்
கல்கத்தா விற்கூடிய      விசேஷக்
காங்கிரஸின் ஒத்துழையாத் தீர்மானம்
நாட்டுக்கொரு புத்துணர்ச்சி      தந்து
நல்லபல வேலைகளும் நடக்கையிலே
சௌரிசாரா வென்னுமிடத்தில்      வெறிகொண்ட
ஜனம் சிலர் போலீசுக் கச்சேரிக்குத்
தீயிட்டுக் கொளுத்தியதில்      உள்ளே
சிக்கிய இருபத்தொரு பேரும்மாண்டார்
கேட்டார் இதைக் காந்தி      இயக்கம்
கெட்டுவிட்ட தென்றுகண்டு சட்டமறுப்பைத்
தாமே நிறுத்தி விட்டார்      அந்தத்
தகைமையை உலகென்றும் புகழுமன்றோ
சிலநாள் சென்றதன் பின்      காந்தியைச்
சிறை பிடித்தார் குற்றப் பொறுப்பை யெல்லாம்
தம்மேல் ஒத்துக்கொண்டு      அதற்குத்
தண்டனையா றுவருஷம் கொண்டு சிறையில்
இரண்டுவ ருஷமிருந்தார்      குடலில்
ஏற்பட்ட நோவினுக்குச் சிகிச்சை செய்து
விடுதலை செய்தார்கள்      பிறகு
வெகுநாள் நிர்மாண வேலைகள் செய்தே
காங்கிரஸைப் பலப்படுத்திக்      குடிசைக்
கைராட்டைத் தொழிலெங்கும் பரவச் செய்தார்
முஹம்ம தலியின் வீட்டில்      ஹிந்து
முஸ்லீம்களின் ஒற்றுமைக்குப் பட்டினி கொண்டார்
ஆறு வருஷம் பொறுத்தார்      நாட்டின்
அடிமைத் தனங்குறைய ஆள்வோர்க்கு



எண்ணமில்லை யென்று கண்டு      வைஸ்ராய்
இர்வினுக்குத் தம்முடைய எண்ணமெழுதி
சத்தியப் போர் தொடுத்தார்      உப்புச்
சட்டத்தை மறுத்திடுவ தென்று 'டாண்டி'க்குப்
புறப்பட் டார்காந்தி      அந்தப்
போதெழுந்த உணர்ச்சியை ஏது சொல்லுவோம்
ஆச்சரியம்! ஆச்சரியம்!      அதை
ஆராலும்மு டியச் சொல்ல முடியாது
டாண்டியில் சட்ட மறுத்தார்      ஒருநாள்
ஜாமத்தில் வந்து சர்க்கார் கைது செய்தார்
நாட்டிலெந்த மூலைமுடுக்கும்      சண்டை
நடந்ததில் லக்ஷம் பேர் சிறை புகுந்தார்
ஸாத்வீகம் தவறாமல்      ஜனங்கள்
சந்தோஷ மாகப் பல ஹிம்சை சகித்தார்
இந்த விதம் பத்துமாதம்      சண்டை
இடைவி டாமலெங்கும் நடந்திடவே
காந்தியை வெளியில் விட்டுச்      சர்க்கார்
காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்
இரண்டாம் வட்டமேஜைக்      கூட்டத்
திந்தியக் காங்கிரஸின் ப்ரதிநிதியாய்
வீரமொழிகள் புகன்றார்      ஏழைகள்
விடுதலை விட்டெதுவும் வேண்டாமென்று
இந்தியா வருமுன்னால்      ஸர்க்கார்
இர்வின் உடன்படிக்கை மீறிவிட்டதால்
வில்லிங்டன் வைஸ்ராயைப்      பார்க்க
விடைவர வேணுமென்று சேதி விடுத்தார்
வைஸ்ராய் மறுத்து விட்டார்      வேறு
வழியின்றிக் காந்தியும் கைதியானார்
சிறையில் இருக்கும்போது      அங்கே
சீமையின் மந்திரி திட்டமொன்றினால்

தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களை தேர்தல்
தனித்தனித் தொகுதியிற் பிரித்து வைத்தார்
காதில் விழுந்த உடனே காந்தி
கட்டாயம் பட்டினியிற் சாவேனென்றார்
எங்கும் பரபரப்பாய்ப் பூனா
ஏரவாடா ஒப்பந்தமும் நிறைவேறி
சிறையில் இருந்த படியே ஹரிஜன
சேவை செய்ய வசதிகள் செய்து கொடுத்தார்
சிலநாள் சென்றதன் பின் ஹிந்துக்கள்
தீண்டாமை விஷயத்தில் மனமிரங்கத்
தாம் ஒரு மூன்று வாரம் பட்டினித்
தவஞ் செய்யக் கடவுளின் ஆணை யெவரும்
தடை சொல்லக் கூடாதென்றும் காந்தி
தாமடுத்த விரதத்தைச் சர்க்காரஞ்சி
விடுதலை செய்து விட்டார் உடனே
சட்ட மறுப்பைச் சிறிது நிறுத்தச் சொல்லி
பட்டினியை வென்று முடித்தார் கிழவர்
பயந்தவர் யாவரும் வியந்திடவே
தலைவர்களோடு கலந்து முடிந்தால்
சண்டையை முடித்தே ஒரு ராஜி செய்யவே
வைஸ்ராய் வில்லிங்டனைத் தாம்
வந்துகாணச் சம்மதிக்கத் தந்தி கொடுத்தார்
பதில் தந்தி மறுத்திடவே முதலில்
பாடுபட்டுத் தாம்வளர்த்த பயிரான
சபர்மதி ஆச்சிரமத்தை மூடித்
தாமும் சில சீடர்களும் சிறை புகுந்தார்
சிறையினில் முன்போல ஹரிஜன
சேவைக்கு வசதிசர்க்கார் குறைத்ததனால்
வசதிகள் அவை போனால் இனித்தாம்
வாழ்வதன் லக்ஷியம் போனதென்றே



பட்டினியிற் சாகத் துணிந்தார் உலகம்
பயந்து நடுநடுங்கிப் பாதவிக்கத்
தெய்வச் செயலே போல் காந்தியைத்
திரும்பவும் சர்க்கார் விட்டு விடவே
செய்வதுதான் இன்னதென்று தமக்குத்
தெளிய விளங்கவில்லை அதனாலே
'கிச்சிக் கிச்சித் தம்பளம்' போல் சர்க்கார்
பிடிக்கவும் விடுக்கவும் செய்ய நடத்தல்
கண்ணியக் குறைவென்று தண்டனைக்
காலம் ஒருவருஷம் கழியுமட்டும்
ஹரிஜன சேவை ஒன்றே அதன்பின்
ஆண்டவன் விட்டவழி விடட்டுமென்று
ஏழைகளுக் குழைப்பதற்கே தவம்
ஏந்தும் காந்தி புகழ் என்றும் வாழ்கவே.

---

## பூனா வெடிகுண்டு.

---

(1) விந்தையில் விந்தை! காந்தியின் மேலும்
வெடிகுண்டை யாரோ வீசினராம்!
ஹிந்து மதத்தில் வந்தவர் யாரும்
இப்படியும் செய்ய ஒப்புவரோ!
நிந்தையில் நிந்தை இதைவிட வேறும்
இந்திய நாட்டிற்கு வந்திடுமோ!
இந்த விபத்தில் காந்தியைக் காத்தது
எந்தப் பொருளதைச் சிந்தை செய்வோம்.

(2) சத்தியம் மெய்யே, சாந்தமும் மெய்யே,
சாதித்துயர்ந்திட்ட ஸாதுக்கள் மெய்
நித்தமும் நின்று நம்மை நிறுத்து
நீதி செலுத்திடும் ஜோதியும் மெய்

பொய்த்திடும் பொய்யே போனது ஐயம்
புண்ணியம் என்பதும் உண்மையதை
உத்தமர் காந்தியின் மெய்த்தவ வாழ்வினில்
உண்டு வெடித்திட்ட குண்டும் சொலும்.

(3) மடமையினாலே செய்தனர் என்றே
மன்னித்து வாழ்த்திய பொன்னுரையால்
அடவியிற் சென்றே ஐம்புலன் வென்றார்
அந்தணர் முந்துரை தந்தவெலாம்
நடைமுறை தன்னில் தினசரி வாழ்வில்
நாட்டிடைக் காந்திஜி காட்டிவிட்டார்
கடவுளும் உண்மை கருணையும் உண்மை
காத்திடும் என்பதும் பார்த்து விட்டோம்.

(4) தாழ்ந்தவரேனும் வாழ்ந்தவரேனும்
சத்தியம் நாடிய பக்தரல்லால்
வேந்தரும் காணா வேதியர் காணா
வேறொரு சக்தியின் பேருளால்
மாந்தருள் தெய்வம் நம்பினவர்க்கு
மனத்துறை யின்பம் எனத்தகுமோர்
காந்தியும் தப்பிக் கருணையுந் தப்பிக்
கடவுளும் தப்பிப் பிழைத்தனரோ.

(5) பொங்கிய ‘போலிச்’ சநாதன கோபம்
பூனாவில் அன்று வெடித்ததுவோ
அங்கொரு தீங்கும் யாருக்கு மின்றி
அன்புருக் காந்தியும் துன்பமிலார்
சங்கெடுத் தூது மங்களம் பாடு
சாந்தி உலகுக்குக் காந்தியினால்
எங்கணும் சாந்தி யாவர்க்கும் சாந்தி
என்ற முதுமறை நின்றது பார்.



## பண்டித மோதிலால் நேருவின் மரணம்.

### அகவற்பா.

மோதிலால் நேருவும் மாண்டனர் ஐயோ!
ஏதுநாம் எப்படி இழவினைச்சகிப்போம்?
சீரோடும் பிறந்தோன் சிறப்போடும் வளர்ந்தோன்
யாரோடும் பகையா அரும் பெரும் குணத்தான்
போரிடும் போதும் புரையிலா உரையான்
நேரிடும் துயரம் யாவையும் பொறுத்தோன்
எண்ணிலாச் செல்வம் ஈட்டியவல்லோன்
புண்ணியம் பலித்த சுகமெலாம் பூத்தோன்
தவறிலா வாழ்வும் தயாளமும் நிறைந்தோன்
ஜவரிலால் நேருவைத் தநயனாய்ப் பெற்றோன்
அரசரைப்போல அனைத்துளபோகமும்
வரிசையில் வாழ்ந்தோன் வள்ளலாம் கொடையான்
சீரும் சிறப்பும் தேடிய செல்வமும்
பேரும் புகழும் பெற்றன யாவையும்
தாய்த் திருநாட்டின் விடுதலை தனக்கே
ஓய்விலாதுதவிய ஒருபெருங் குணத்தான்
மனைவியும் மக்களும் மற்றுள சுற்றமும்
அனைவரும் நாட்டின் அடிமை அகற்றவே
உழைப்பதில் நாளும் உவகையே கொணடோன்
களைப்பிலா வீரக் காளையே யனையான்
ஆனந்த பவனமாம் அரியமாளிகையினை
தானமாய் தேசம் தனக்கே கொடுத்தவன்
மோதிலால் நேருவின் முழுமதிவதனம்
காதலால் பொலிவதைக் காணாதிழந்தோம்
அந்தோ! அந்தோ!! யாதென அழுவோம்
இந்தியத்தாய் தான் அடைந்தோர் இழவை

அரசியல் ஞானமும் அனுபவச் சட்டமும்
வரிசையில் மற்றய நாட்டவர் வழிகளும்
அவரைப்போல அறிந்தவர் சிலரே
எவரைப் போயினி இவற்றைக் கேட்போம்
வெண்ணைதான் திரண்டு வருகின்றவேளையில்
எண்ணிய தாழிதான் உடைந்ததாம் எனவே
மோதிலால் நேருவும் இந்நாள் மாண்டார்.
ஏது நாம் எப்படி இழவினைச் சகிப்போம்
அன்னவர் ஆவி ஆண்டவன் அடியில்
பொன்னொடும் பொலியப் போற்றுவோம் அவனே.

## தேசிய சுகாதாரப் பாட்டுகள்.

சுகாதார வாரக் கொண்டாட்டங்களுக்காக, சென்னை 'டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்' வேண்டிக்கொண்டதற்காக பாடப்பட்டவை. சுகாதார வாரக் கமிட்டியாரால் தங்க மெடல் பரிசுபெற்றது.

### கடவுள் வணக்கம்.

இல்லாத காலமில்லை இருக்கின்ற பொருள் ஒன்றில்லை
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியும் எட்டவில்லை
சொல்லாத வேதமெல்லாம் சொல்லியும் சொன்னதில்லை
சூட்டாத நாமமில்லைத் தோன்றாத உருவமில்லை
அல்லாவாய் புத்தனாகி அயனரி ப்ரம்மனாகி
அருளுடை சமணர்தேவும் அன்புள கிருஸ்துவாகி
கல்லாத மனதிற்கூட காணாமல் இருப்பாரந்தக்
கடவுளென் றுலகம்போற்றும் கருணையைக் கருத்தில் வைப்பாம்.



### முறையீடு.

உலகினிற் சிறந்ததென்றும் உருவினிற் பாந்ததென்றும்
உயர்தவ யோகர்சித்தர் ஒப்பிலார் இருந்ததென்றும்
பலவளம் நிறைந்ததென்றும் பகுத்தறி வுயர்ந்ததென்றும்
படித்தனம் கேட்டோமந்த பாரத தேசமக்கள்
புலபுல வென்றுநித்தம் புதுப்புது நோய்களாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டுபோவதைக் கண்டுமையோ
விலகிட வழிதேடாமல் விலங்கினம் போலவாழ்ந்து
விதியென வாதம்பேசி வீணாயிருத்தல் நன்றோ 1

கற்பமும் அறிந்துகாய சித்தியும் கற்றமேலோர்
பற்பலர் இருந்தயிந்த பாரத தேசமக்கள்
அற்பமாய் ஆயுள்குன்றி அழிந்திடல் ஏனோவென்று
சொற்பனந்தன்னிற்கூட எண்ணிடத் துணிந்தோமில்லை 2

உடல்வலி மிகுந்துநல்ல ஊக்கமும் உறுதிபொங்க
உலகினில் இன்பமெல்லாம் உயர்வழி அநுபவித்த
திடமுள தீரவீரர் திகழ்ந்தஇச் சிறந்தநாட்டில்
சிறியதோர் நோய்வந்தாலும் தாங்கிடத்திறனில்லாமல்
நடைபிணம் போலநாமும் நாள்கழித் திருந்தோமையோ
நாடிலோம் இதனைமாற்ற நல்வழி யென்னவென்று
மடமையோ மதியோ அன்றி விதியெனும் மயக்கந்தானோ
மாற்றநாம் அல்லவென்றால் மதியினாற் பயன்தானென்னே 3

முற்றிய ஒழுக்கத்தாலும் முறைதெரி வாழ்க்கையாலும்
பெற்றவர் காணமுன்னாள் பிள்ளைகள் இறந்ததில்லை
கற்றவர் பெரியோர்நித்தம் கதைகளிற் சொல்லக்கேட்டோம்
இற்றைநாள் கோடி கோடி பிறக்குமுன் இறப்பதேனோ! 4

பிணியிலே பிறந்துநித்தம் பிணியையே அருந்திப்பொல்லாப்
பிணியிலே வளர்ந்து அந்தப் பிணியினாற் சாகக்கண்டும்
அணியிலே ஆடையாலே அலங்கரித் தோமேயன்றி
அறிவிலே ஆசாரத்தால் அழகெதும் செய்தோமில்லை

பணியிலும் பணத்திலேயே சுகமெலாம் இருந்தாற்போல
பழகினோம் நாமேயன்றிப் பழக்கினோம் மக்கள் தம்மை
துணிவிலோம் தூய்மையில்லோம் சுசிகா நடத்தையில்லோம்
துவக்குவோம் இனிமேலேனும் நோய்களைத் துடைக்கும்
[வாழ்க்கை. 5

மணத்தையே விரும்பியோடி மலரினைக் கசக்குவார்போல்
பணத்தையே பெரிதென்றெண்ணிச் சுகத்தினைப் பழித்து வாழ்ந்து
குணத்தையே விலக்குவிற்றுக் குரங்கினைக் கொண்டாற்போல
இனத்தையே பிணிகள்வாட்ட இருந்தனம் அறிவிருந்தும் 6

உண்டியில் ஆசைவைத்தோம் ஒழுக்கமே மறந்துபோனோம்
பெண்டினர் மக்கள் தம்மை வளர்த்திடும் முறைமைபேணார்
மண்டையி லெழுத்தென்று மயங்கினோம் கர்மந்தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம் மலிந்திட நலிந்தோமையோ. 7

---

## சக்தி தோத்திரம்.

ஸ்ரீராகம்—ஆதி தாளம்.

பல்லவி.

சக்தி எனக்கே அருள்வாய் பரா
சக்தியென்தாயுனை நித்தமும் தொழுதனன் (சக்தி)

சரணங்கள்.

பக்தியொ டுந்தனைப் பணிந்திடல் மறந்தேன்
பாரினிற் சுகமெல்லாம் நீயெனத் தெரிந்தேன்
இத்தின முதலுந்தன் இணையடி புரிந்தேன்
இனிமேற் பிணியில்லை கவலைகள் துறந்தேன் (சக்தி)

நோய்களைத் தடுத்திட நண்ணிய அறிவும்
நொந்தவர் தங்களைக் காத்திடப் பரிவும்
மாய்வதைக் குறைத்திட மருந்துகள் முறிவும்
மந்திர தந்திர மணியவை தெரியும் (சக்தி)



கல்லினுங்கட்டுடைய தேகம் எனக்கருள்வாய்
காலனை ஜெயித்திடும் கருணையும் தருவாய்
சொல்லிலும் செயலிலும் தூய்மையைத் தருவாய்
சோம்பலை யோட்டிநற் சுகமெனக் கருள்வாய் (சக்தி)

புண்ணிய பாபமெந்தன் இச்சையிற் கடந்து
பூதங்க ளைந்துமெந்தன் சொற்படி நடந்து
எண்ணிய யாவுமெந்தன் இஷ்டப்படி முடிய
ஈன்றவளே உந்தன் அருள்வாத் தடையோ (சக்தி)

---

## கும்மி.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி குல
தெய்வத்தைக் கும்பிட்டடியுங்கடி
நம்முடை தேசத்தில் நோய்களில்லாமலே
நாடுசெழித்திட வேணுமென்று (1)
செத்தவர்தம்மை எழுப்பித்தரவல்ல
சித்தரிருந்த திருநாட்டில்
எத்தனையெத்தனை நோய்களினால் மக்கள்
ஈசலைப்போல மடிவதென்னா (2)
ஈசனளித்த அறிவிருந்தும் நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு
மோசமிகுந்தப் பகட்டுடைவாழ்க்கையில்
மோகம்வைத்தே இந்த மோசமுற்றோம் (3)
சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்னவிதிகளை விட்டுவிட்டோம்
நித்தங்குளிப்பதும் பத்தியங்காப்பதும்
மெத்தக் குறைந்தது தேசத்திலே (4)
காலையிலெழுந்து நீராடல்கொஞ்சம்
கர்த்தனையெண்ணித் துதிபாடல்
மாலையிலோடி விளையாடல் இந்த
மார்க்கத்தைவிட்டனர் மக்களெல்லாம் (5)

அளவையறிந்து புசிப்பதில்லை தங்கள்
அளவையளந்து வசிப்பதில்லை
களவுக்குப்பின்னால் கதவை அடைப்பவர்
காரியம்போலடி கண்மணியே . (6)

நல்லவழக்கங்கள் உள்ளவர்தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்
நல்லவழக்கங்கள் நாளும்வளர்ந்திட
நாடுசெழித்திட வேணுமடி (7)

---

(வாழ்க பாரத சமுதாயம் என்ற மாதிரி)

பல்லவி.

வருக வருக தேவிசக்தி வரமருள்தாவே (வருக வருக)

அனுபல்லவி

எப்பொழுதும் என்னை நோய்களேதும் அணுகிடாதவண்ணம்
தப்பிதமற்ற வாழ்க்கையோடு தவறிலாதஎண்ணம்—தருக

சரணம்

சக்தி தேவியருள் அடைந்தோர் சாவதினியுண்டோ
நித்தமுந்தன் பக்தியுள்ளார் நோவதினியுண்டோ—நொந்து
போவதினியுண்டோ—சீக்கிரம்—மாய்வதினியுண்டோ (வருக)

விதியும்மதியும் வினைகள் யாவும் உன்திருவிளையாடல்
எதுவும் எனக்கு ஏவல்புரியுப் உன்னருளினை நாடில்—இனி
உன்னருளினைநாடி—உன்னை—ஓதுவேன்தினம்பாடி (வருக)

எல்லா செயல்களிலும் நீயேயிருக்கிறாய்
என்றறிந்தேன்பரா சக்தீ
நல்லதுவுமுன்செயல்—பொல்லாதுமுன்செயல்
நாடிநான் அறிந்து கொண்டேன்
நல்லதே எண்ணுவேன் நல்லதே சொல்லுவேன்
நல்லதே செய்வனென்றால்
நாடுமோ எமன் என்னைக்-கேடுகள் அணுகுமோ
நன்றிது தெரிந்தேன்-உந்தனையுணர்ந்தேன்.



## கடவுள் வணக்கம்.

உலகெலாம்தந்து இந்த உலகுள பிறவிக்கெல்லாம்
உயர்ந்துள பிறவிதந்து
நிலையிலா தேகந்தன்னை நீண்டநாள் நிலைக்கச்செய்து
நெருங்கிய நோய்கள் தீண்டா
அலகிலா வாழ்க்கைக்கான விதிகளும் அவற்றைக்காணும்
அறிவையும் நமக்குத் தந்து
மலர்மணம்போல நம்முள் மறைந்தருள் சுரந்துகாக்கும்
மஹிமையை மனத்துள் வைப்பாம்.

---

## தேவி பூஜை.

('பச்சைமாமலைபோல் மேனி' என்ற மாதிரி)

நூறென்று மனிதர்க்கு நீ தந்த வயசினில்
கூறென்று பலநோய்கள் பங்கிட்டுக்கொள்ளுதையோ
ஆரெம்மைக் காப்பவர் அன்னையே உன்னையன்றி
பாரெம்மைக் கடைக்கண்ணால் தேவிபராசக்தி. (1)

நீதந்த உடல்கொண்டு நின்புகழ் துதிக்குமுன்
நோய்வந்து புகுந்தெம்மை நொடிக்குள் மடிப்பதென்றால்
தாய்தந்தை நீயன்றி தஞ்சம்பிறிதுமுண்டோ
வாய்தந்து வாவென்று வரமருள்வாய் தேவீ. (2)

தாயை மறந்திருக்கும் குழந்தைகள் ஸகஜந்தான்
சேயை மறந்தவளை ஜெகமினுங் கண்டதில்லை
நீயே எமைமறந்தால் நிலையெமக்கெது வேறே
நோயே மிகநலிக்க நொந்தனம் வந்தருள். (3)

நித்தம் உனைநினைந்து நியமமுடன் வசிக்க
சுத்தமனநிலையும் சொல்லும் செயலும்தந்து
சுற்றும் பலபிணிகள் தொடார தருள்புரிவாய்
சத்தியமாய் விளங்கும் தேவீ பராசக்தி. (4)

### குழந்தைகளுடைய க்ஷேமத்தைப்பற்றித் தாய்தந்தையருக்கு

விருத்தம்.

பெற்றிடும் செல்வத்தெல்லாம் பெரியது மக்கட்செல்வம்
உற்றிடும் இன்பத்தெல்லாம் உயர்ந்தது மக்களின்பம்
மற்றிதை உலகிலெந்த மனிதனும் மறுக்கொணாது
சற்றதை மதித்துநாமும் சரிவர நடப்போமாக. (1)

சிறந்திடும் இன்பமானச் சிசுவது நமக்குவந்து
பிறந்திடுமுன்னும்பின்னும் நாம்செய்யும் பிழைகளாலே
அருந்தவக் குழந்தையின்பம் அநுபவிப்பதற்கு முன்னால்
இறந்திடும் அதனைப்போல இன்னொரு துன்பமுண்டோ (2)

உருவினிற் குறைந்ததென்றும் உடல்மிகமெலிந்ததென்றும்
அறிவினிற் குறைந்ததென்றும் அழகினை யிழந்ததென்றும
பிறவியின் குறைகளெல்லாம் பெற்றவர்குற்றத்தாலே
கருவினில் அமைந்ததல்லாற் கடவுளின் குற்றமுண்டோ. (3)

விதிவிலக்கறிந்து வாழ்ந்து விமலனை மனத்துளெண்ணி
மதியினைக்கொண்டு சுத்த மார்க்கத்தில் நின்றுநாமும்
புதல்வரைப் பெற்றுமற்றும் புத்தியாய் வளர்ப்போமானால்
இதமுறவந்த மக்கள் இளமையில் இறப்பதுண்டோ. (4)

வித்தினைப்போற்றித் தூவும் விளைநிலம் பழுதுபார்த்து
சுற்றிடும் மிருகவாசை துடைத்திடா வேலிசுற்றி
பத்தியிற் காத்துப்பண்ணைப் பயிரது செய்துவிட்டால்
சொத்தையாய் சோவையாகத்தோன்றுமோ செந்நெல்சொல்லாய்(5)

### கர்ப்பிணிகளை நடத்தும் முறை.

தன்யாசி—ரூபகம்.

பல்லவி

கர்ப்பிணிப்பெண்டுகளைக் கருணையுடன் மிகவும்
கவனிக்கவேண்டுவமே

அநுபல்லவி

அற்பமென்றவர்களை அசட்டைசெய்வீரெனில்
ஆண்டவன் சாபமுண்டு

சரணம்

கொஞ்சும் மொழிகள்சொல்லி கோதை யிளங்கொடியைக்
குதூகலப்படுத்தி வைப்பீர்
அஞ்சும் படிக்குச்செய்து அடிப்பதும் திட்டுவதும்
ஐயையோ ஆகாது. (1)



குற்றங்கள் செய்திடினும் முற்றும் மனம்பொறுத்து
குணமுடன் வார்த்தை சொல்வீர்
சற்றும் அவர்மனதில் சஞ்சலமொன்றுமின்றி
சந்தோஷம் புரிவீர். கர் (2)

நல்லகதைகள் தினம் சொல்லியவர்மனதை
நயம்படச் செய்துவைப்பீர்
அல்லும்பகலும் மவர் ஆண்டவனைத் துதித்து
அறஞ்செய வரந்தருவார். கர் (3)

### கர்ப்பிணிக்குப் பூ முடித்தல்—தோடி—ரூபகம்.

'மற்றுப்பற்றெனக்கின்றி நின்றிரு' என்ற மாதிரி.

கல்வினுட்சிறு தேரையோடு கருவிலேவளர் யாவையும்
எல்லையில்பல ஜீவகோடியை எங்குமாய்நின்று காத்திடும்
வல்லவெம்பெரு மானருளினால் வஞ்சியேபிள்ளை யாண்டனை
நல்லபூமுகை சூட்டுவோமந்த நாதனுந்தனைக் காக்கவே. (1)

மல்லிகை நல்ல முல்லையாதிய வெள்ளையாமலர் சூட்டுவோம்
சொல்லுமன்னவை வெண்மைபோல நீ சுத்தமாயிரு நித்தமும்
பல்லுமுந்தன்ப டுக்கையோடின்னும் பாவையே உந்தன் யாவையும்
நல்லவெள்ளை யெனச்சொலும்படி நாளும்வைத்திடவேண்டியே (2)

வாடினாலும் வதங்கினாலும் தம் வாடைவீசுதல் வாடிடா
நாடியேமரு காமருக்கொழுந் தோடுநன்மகிழ் சூட்டுவோம்
பாடுநீமிக பட்டபோதிலும் பக்தியோடிரு நித்தமும்
தேடியே உன்னைத் தேவன்வந்தருள் செய்குவார் பயமில்லையே (3)

தொட்டபோதிலும் சற்றுவாடிடும் சொல்லொணாமிக மெல்லிது
இஷ்டமாகவே யாருமாசைகொள் இன்பரோஜா இம்மலர்
கஷ்டமாகிய வேலையொன்றையும் கட்டிநீசெயல் விட்டிடு
நுட்பமாகிய உந்தன் மேனியும் நொந்திடில் துயர் தந்திடும் (4)

நீளுமாமலர்த் தாழையோடு நிறைந்த மாமரச் சம்பகம்
சூழும்நல்ல மணமிகுந்தவை சுந்தரிக்கவை சூட்டுவோம்
வாழுமந்த வனம்முழுவதும் வாடையோடியு லாவல்போல்
நாளும்நீஉந்தன் வீட்டிலெங்கும் நடந்துலாவுதல் வேண்டியே (5)

சேற்றில்நின்று வளர்ந்து நீரினிற் சேர்ந்திருப்பினும் தாமரை
சாற்றுமோரள வுக்குமீறிடத் தானருந்துமோ நீரினை
சோற்றின்மூழ்கி யிருந்தபோதிலும் சொற்பமாகவே சுத்தமாய்
போற்றியுண்ணுதல் வேண்டுமென்றந்தப் பூமுடித்தனன் பூவையே (6

### சிசுக்களைப்பற்றிப் பொது விதிகள்.

கோலாட்டப்பாட்டு. "நடப்போம் வாராய்" என்ற விதம்.

பல்லவி.

கொஞ்சும் கிளிமொழி கோதையரே நாம்
கூடியாடுவோம் கோலாட்டம்

அனுபல்லவி.

மிஞ்சும்பலவித நோய்களைத்தடுத்திட
மெல்லியலே வழி சொல்லிடுவோம்.

சரணங்கள்.

நோய்கள்மிகுந்தது எதனாலேயென்று
நுண்ணறிவோடதை எண்ணிடுவோம்
தாய்கள் குழந்தையை வளர்த்திடும் வழிகளைச்
சரிவரச் செய்திடத் தெரிவதில்லை. (கொ)

பிஞ்சில் வெம்பிய காய்கறியென்றும்
பெரிதாய்ச் செழித்ததைக் கண்டதுண்டோ
அஞ்சில் கெட்டது அம்பதுவயதிலும்
அழியாதிருப்பினும் செழியாது. (கொ)

தாயுந்தந்தையும் தவறுசெய்தாலது
தனையரைச்சேர்வது பொய்யாமோ
சேயைச்சிசுவினில் கவனிக்காவிடில்
ஜென்மத்தால் வரும் நன்மையுண்டோ (கொ)

கருவில் வளர்ப்பார் கடவுள் பூமியைக்
கண்டபின் வளர்ப்பது நாமன்றோ
அறிவின்நாமதை அறிந்தே வளர்த்திடில்
ஆயுள்நீளும் நோயில்லை. (கொ)

விதியாற்சாவது இருந்தாலும்பல
வீணாய்ச்சாவதும் உண்டென்றும்
மதியால்நாமதை மாற்றிடலாமென்று
மஹரிஷியவர்மொழி இகழாதே. (கொ)



# காங்கிரஸின் வெற்றி.

---

### 'அஸெம்பிளி' தேர்தல், நவம்பர் 1934.

1. வெற்றிச் சங்கை யெடுத்தூது
வென்றது த்யாகம் என்றோது
சுற்றிச் சுற்றி யிவ் வுலகெங்கும்
சுதந்திரச் சங்கின் ஒலி பொங்க (வெற்றி)

2. தன்னலக் கோட்டை இடிந்தது பார்
துயவால் வாழ்வது ஒடிந்தது பார்
அன்னை யிந்நாட்டின் தளை முறித்தோம்
அரசியல் வாழ்வின் களை பறித்தோம் (வெற்றி)

3. அடக்கு முறைகளைப் பொய்ப் படுத்தி
'ஆயுதச் சாலையைக்' கைப் பிடித்தோம்
நடிக்கும் வாழ்க்கையை மாய்ப்போமே
நாட்டின் நன்மையைக் காப்போமே (வெற்றி)

4. பணத்தின் பலத்தால் ஏழைகளை
பயப்படச் செய்யும் கோழைகளை
குணத்தின் பலத்தால் வெல்வோமே
குறைகள் நீங்கிடச் சொல்வோமே (வெற்றி)

5. காங்கிரஸ் வென்றது எதனாலே
காந்தியின் நெறிநின்ற அதனாலே
தீங்குகள் பற்பல பொறுத்ததனால்
தேசம் சரியாய் நிறுத்தது பார் (வெற்றி)

6. அன்பின் வழியே மேலாகும்
அதுவே சுதந்திரக் காலாகும்
முன்பிவ் வுலகம் அறியாத
முதியோர் காந்தி சொல் மறவாதே (வெற்றி)

## மஹாத்மா காந்தியடிகளுக்கு.

1. சாந்தியே உருவாய்வந்த சத்தியமூர்த்தியான
காந்தியே உம்மைக்காண கணக்கிலா ஜனங்களெங்கும்
காந்தமொன் றணுகஓடும் ஊசிகள் காட்சிபோலப்
போந்ததும் தரிசனத்தால் பொறுமையைக்கற்கவேண்டி.

2. மூவுலகொருங்கேயாண்டு முடிவிலாச்செல்வமெய்தி
ஏவலில்மமதைகொண்ட ஹிரணியன் உய்யுமாறு
தாவியதூணில் அன்றுத் தனியுருத்தாங்கிவந்த
சேவகன்மெச்சுகின்ற சிறுவனேயன்ன சீலா

3. பகையினாற் கொன்றுவென்று பயப்பட வாழ்ந்துவந்த
வகையிலாச் சாதியோரை வழிபடச்செய்ய வேண்டி
மிகமிகத் துன்பமுற்றும் மென்மையால் வென்றுகொண்ட
மகம்மது நபியேயென்று மதியுளார் சொல்வாருன்னை.

4. அன்பொரு உருவாய்வந்து அற்புதச் செயல்கள் காட்டி
துன்பமேசூழ்ந்த தெய்வத் துரோகிகள் செய்கையாலே
வன்பெரும் சிலுவைதன்னில் வைத்தவாறைந்தபோதும்
இன்பமே நுகர்ந்ததேவன் ஏசுவே என்பாருன்னை.

5. கனவினிற் பிணிமூப்போடுச் சாவினைக்கண்டபின்னர்
இனியிதன் ரகசியத்தை இன்னதென்றறிவோமென்று
கனதனராஜபோகக் கட்டெலாம் விட்டொழித்த
புனிதன் அப்பௌத்தனென்று போற்றுவாருன்னையாரும்

6. அடிதடிவாழ்க்கைகொண்டு அன்பினைமறந்துநாளும்
கொடியதாம் பணப்பேயாலே குவலயம் அயர்ந்துநொந்து
முடிவிதற்கெங்கேயென்று முறண்படுகின்றகாலை
விடிவது பொழுதுபோல வீசியதுந்தன்காந்தி.

7. குண்டுபீரங்கியாலும் கோடியந்திரங்களாலும்
மண்டிய செல்வத்தாலும் மயக்கிடும் பொருள்களாலும்
சண்டைகள் ஜயத்தினாலும் சலிப்பின்றி சுகமெங்கென்று
மண்டல மிருண்டபோது மதியெனத்தோன்றினாய்நீ.



8. சாந்தமொன் றில்லையென்றால் சௌக்கியமில்லையென்று
ஆய்ந்தவர் சொன்னதெல்லாம் அகந்தையால் மறந்துவிட்டு
மாந்தினர் கள்ளேயென்ன மயக்கமுற்றிருந்தகாலை
காந்தியென்றொருவன் தோன்றி காத்தனன் உலகையென்ப.

9. சத்தியனென் பாருன்னைச் சாந்தமேயென்று சொல்வார்
பித்தனே யாவானென்பார் பேடியென்றொருசார் சொல்லும்
சுத்தனேயென்பாரில்லைத் துரோகியென்பாருமுண்டு
இத்தனைப்பெயருந்தாங்கும் இதுவன்றோ பெரியார்செய்கை.

10. நம்மையும் புனிதராக்கி நம்மையாண்டடிமை செய்வார்
தம்மையும்புனிதராக்கித் தரணியில் தருமநீதி
மும்மையும் உயிர்க்கச்சாந்த மூலமந்திரத்தைக்காட்டும்
செம்மைசேர் ராட்டினத்தின் திகிரியைச்சுழற்றிவிட்டாய்.

11. உனைவிடப்பெரியாரிந்த உலகினில் இல்லையென்று
நினைவினிற்பெரியாருன்னை நிரந்தரம்போற்றுகின்றார்
இனியஉன் பெருமையெல்லாம் இந்தியமாதாபெற்றாள்
அனையவள் பெற்றகீர்த்தி அடியமும் பெற்றதன்றோ.

12. ஆண்டவன் ஆணைதாங்கி அன்பினைநாட்டவென்று
பூண்டஉன் கொள்கையெங்கும் பூமிவேரூன்றுமட்டும்
நீண்டுஉன் ஆயுளோங்க நிமலனும் கடவுள்மாட்டு
வேண்டுவோம் என்றுசொல்லல் வெற்றுரையாகுமன்றே.

---

## இராட்டினப்பாட்டு.

'ஆடுபாம்பே' என்ற பாம்பாட்டிசித்தர் பாடல் மெட்டு.

பல்லவி.

ஆடுராட்டே சுழன் றாடுராட்டே,

அநுபல்லவி.

சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே இனி
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே (ஆடு)

சரணங்கள்.

1. பாபங்குறையுமென்று ஆடுராட்டே இனி
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபங்குறையுமென்று ஆடுராட்டே நல்ல
குணங்கள் மிகுந்ததென்று (ஆடு)

2. மேலான ஜாதியென்று மிக்கப்பேசி மிக
மாறான காரியங்கள் செய்து வாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனையெல்லாம் இனி
மாண்டு மடியுமென்று ஆடுராட்டே (ஆடு)

3. ஏழைகள்கண் ணீர்சொரிய மிக்கவருத்தி பல
எத்துகள் செய்தே பிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடி யாதினிமேல் வஞ்சனையினால் அவர்
வாழ்க்கைத் திருந்து மென்று (ஆடு)

4. பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிருந்து நூல்
இழைத்துப் பிழைப்பரென்று (ஆடு)

5. கள்ளுபீர் சாராயம் காமவகைகள் கெட்ட
கஞ்சா அபின்களெல்லாம் ஓடியொளிக்க
பிள்ளைகுட்டிப் பெண்ஜாதி வயிறார உண்ணப்
பெற்றதே சுதந்தரமென் (ருடு)

6. உழுது நெய்துபல தொழில்செய்து பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம் இனித்
தோல்வியடையுமென்று (ஆடு)

7. வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார் பெண்கள்
வாசலிலேகூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார் குடி
சுத்தப்படு மென்றுசொல்லி (ஆடு)

8. ஜாதிஜனக் கட்டுகளை மதிக்காமல் நித்தம்
தானடித்த மூப்பாக வாழ்ந்ததெல்லாம்
நீதிநெறி தெய்வவழி நினைத்தினிமேல் சுகம்
நிரம்பத்திருப்புமென்று (ஆடு)



9. ஆங்கிலம்படித்தமென் றகங்கரித்து சொந்தம்
அக்கம்பக்கம் யாரெனினும் மதியாமல்
தாங்களேபெரியரென் றிருந்ததெல்லாம் இனித்
தலைகுனிந்தோடுமென்று (ஆடு)

10. சர்க்கார் மனிதனென்று மதிமயங்கி குணம்
தக்காரெனினும் அவ மதித்தவர்கள்
சர்க்கார் ஜனங்களென்று மதிதெளிந்து இனித்
தாழ உரைப்பரென்று (ஆடு)

11. படித்தம் படித்தமென்று பட்டங்காட்டி ஏழைப்
பாமரரை ஏய்த்துவாழ்ந் தவர்களெல்லாம்
நடித்த நாடகங்கள் தவறென்பதைக் கண்டு
நல்வழி நடப்பரென்று (ஆடு)

12. அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப்பல காளைகள் நெய்ய நாம்
காத்துக்கொள்வோம் மானமென்று (ஆடு)

13 சாந்திபெருகுமென்று ஆடுராட்டே மன
சாட்சிவிளங்குமென்று ஆடுராட்டே
காந்திதுலங்குமென்று ஆடுராட்டே அந்த
காட்சி சுதந்தரமென் (ருடு)

14. ஆங்கார முள்ளடக்கி அன்புபெருக்கி பல
ஆசைகளைச் சற்றேனும் அடக்கிவைக்க
ஓங்கார ரூபமதன் உண்மைகாட்டி இனி
ஓயாது நீ சுழன்று ——— (ஆடு)

## கிளிக்கண்ணிகள்.

கூட்டிலடைபட்டிருக்கும் ஒரு கிளியைப்பார்த்து அதன் விடுதலைக்கு ஒருவழி சொல்லிக்கொடுப்பதுபோன்றது. இதில் சொல்லப்பட்டிருக்கிற 'கிளி' சாதாரண பறவையாகிய கிளியையும் ஒரு மனிதன் அல்லது தேசத்தையும், ஆன்மாவையும் ஒருங்கே குறிப்பது உவக்கத்தக்கது.

'ஆதி சிதம்பரத்தைக் கிளியே ஆடிவணங்கிக்கொள்ளு' மெட்டு.

1. ஆதிசுதந்தரத்தைக் கிளியே அடையவழிதேடு
நாதன் திருவடியைக் கிளியே நாடிஜெயம்பாடு

2. இந்தப்பெரும் உலகில் கிளியே இச்சைப்படிபறக்க
சொந்தம் உனக்கிலையோ கிளியே சொல்லடிவாய்திறந்து

3. காட்டினிலே பிறந்தாய்க் கிளியே காற்றெனவேபறந்தாய்
கூட்டினிலேகிடக்கக் கிளியே கூசலையோ உனக்கு.

4. தங்கமணிக்கூண்டில் கிளியே தங்கியிருந்தாலும்
அங்கு சுதந்தரத்தின் கிளியே ஆனந்தமேதுனக்கு.

5. சொந்தமெலாம்மறந்து கிளியே சுற்றமெலாம் துறந்து
இந்தப்படியிருக்கக் கிளியே இச்சைகொண்டாயேநீ.

6. பச்சைமரக்கிளைமேல் கிளியே பாடுதல் நீயிழந்தாய்
இச்சை உயிர்மேலே கிளியே இன்னும் எதற்காக.

7. ஓடியிறைதேடிக் கிளியே உண்பதுநீமறந்தாய்
நாடிப்பிறர் கொடுக்கக் கிளியே நாணமின்றிப்புசித்தாய்.

8. காட்டுப்பழவகையைக் கிளியே காணுதல் நீமறந்தாய்
போட்டதைஉண்டிருக்கக் கிளியே புந்திமகிழ்ந்தாயே

9. சொந்தமொழிமறந்தாய்க் கிளியே சொன்னதுசொல்லுகின்றாய்
இந்தவிதம் வாழும் கிளியே இன்பமுனக்கேது.

10. உன்குலத்தைப்பழிக்கக் கிளியே உத்திரவானாலும்
அங்கதுசெய்துயிரைக் கிளியே ஆசையுடன் வகித்தாய்.

11. எண்ணமுனக்கிருந்தால் கிளியே எத்தனைநேரமடி
கண்ணைத்திறக்குமுன்னே கிளியே காட்சி சுதந்தரமாம்.

12. நல்லவழிசொலுவேன் கிளியே நாடித்தெரிந்துகொள்ளு
அல்லல்வழிவிடுத்துக் கிளியே அன்பின்வழிதேடு.

13. கூட்டை உடைத்துவரக் கிளியே கூடாதுன்னாலே
சேட்டைவழிகளைநீ கிளியே செய்திடும் ஜாதியல்ல.

14. சொன்னதைச் சொல்லாதே கிளியே சோறிடஉண்ணாதே
என்ன அழைத்தாலும் கிளியே ஏனென்றுகேளாதே.



15. ரங்காரங்காவென்று கிளியே இங்கிதம்பேசாதே
எங்கெயெங்கேயென்று கிளியே எளனம் சொல்லாதே.

16. கொஞ்சிமகிழாதே கிளியே கெஞ்சிப்புகழாதே
அஞ்சிநடுங்காதே கிளியே ஆடிநடிக்காதே.

17. கொண்ட எஜமானன் கிளியே கோபித்துக்கொண்டாலும்
அண்டிஉயிர்வாழக் கிளியே ஆகாதென்றுசொல்வாய்.

18. கொல்லுவனென்றாலும் கிளியே கொஞ்சமும் அஞ்சாதே.
மெல்லுவனென்றாலும் கிளியே மேனிநடுங்காதே.

19. வெட்டுவனென்றாலும் கிளியே வெற்றுரையென்றிருப்பாய்
சுட்டிடவந்தாலும் கிளியே சோதனையென்றிருப்பாய்.

20. சோதனைக்காலமடி கிளியே சோர்ந்திடுவாயோநீ
வேதனையைப்பொறுத்தால் கிளியே வெற்றியுனதாகும்.

21. இந்தப்படிகிடக்கக் கிளியே இயலாதென்பதனை
உந்தன் எஜமானன் கிளியே உணரும்படி நடப்பாய்.

22. இப்படிநீ நடந்தாற் கிளியே எண்ணியெண்ணிப்பார்த்து
ஒப்பி எஜமானன் கிளியே யோசனைசெய்வாண்டி.

23. காரியமுன்னாலே கிளியே காசளவில்லையென்று
வீரியம்பேசாமல் கிளியே விட்டிடுவானுனையே.

24 கோதிச்சிறகுலர்த்திக் கிளியே கூசாமல்விரித்து
நாதன்புகழ்பாடிக் கிளியே நாற்றிசையும்பறப்பாய்.

25. நீண்டபெருவானம் கிளியே நீயதிலேபறந்து
ஆண்டவன் சன்னதியைக் கிளியே அண்டிசுகமடைவாய்.

## இந்தியத்தாயின் நிலைக்கிரங்கல்.

(இராம்-வாளி—தாளம்-ரூபகம்)

பல்லவி.

என்ன உறக்கமடா உனக் கென்ன மயக்கமடா

அநுபல்லவி.

அன்னைபடுந்துயர் இன்னுமறிந்திலை
பின்னை அவளுன்னைப் பெற்றுப் பலனென்ன (என்ன)

சரணங்கள்.

1. கட்டத்துணியுமின்றி உண்ணக் கஞ்சியுணவுமின்றி
கெட்டும்கிழவயதில் அவள் நெஞ்சம்மிகவும்குன்றி
பெற்றவயிறவள் பற்றியெரிந்திட
முற்றுந்துயரவள் உற்றசமயத்தில் (என்ன)

2. கண்ணைத்திறந்துமுன்னால் இப்போ என்னநடக்குதுபார்
உன்னைப்பரிந்துபெற்றாள் ஒரு பெண்ணைப்பிறர்நகைக்க
ஓவென்றலரியே மேவியவளுன்னை
ஆவிதுடித்திடக் கூவியழைக்கையில் (என்ன)

---

## ஒரு வரம்.

~~இராகம்-சகானா—தாளம்-ரூபகம்.~~

பல்லவி.

இந்த ஒரு வரம் தந்தருள் புரிகுவை
ஈசா ஆ ஜெக தீசா

அநுபல்லவி.

எந்தெந்தப் பொருளிலும் சந்ததம் பொலிகின்ற
ஏகனே சர்வ போகனேபரி
பாகனே உயர்த் யாகனே எனக் (இந்த)

சரணங்கள்.

1. உண்ணவும் உடுக்கவும் அந்நியருதவியை
எண்ணிடல் நீக்கிய கண்ணிய வாழ்க்கையே
இன்பமானதென் றென்பொன்நாட்டினர்
அன்பினாற்கண்டு துன்பம் நீங்கிடும் (இந்த)

2. என்னை வளர்த்தெடுத்த அன்னையிந்தியநாடு
முன்னைய நிலைபெற்று உன்னதமடைந்திட
எந்தனால்முடி கின்றமாத்திரம்
சொந்தமாயவள் தொண்டு செய்திடும் (இந்த)



3. வல்லாளொருவனென்று நல்லாரறிந்தபடி
எல்லா மதத்தினரும் சல்லாபித்தொன்றுபட்டு
இந்தநாடுபி றந்தயாவரும்
சொந்தமாகக்க லந்து வாழ்ந்திடும் (இந்த)

4. ஓதிய பெருமையில் நீதியில் நடத்தையில்
க்யாதியில் ஆனதன்றி ஜாதியிற் சிறியவர்
யாருமேயிலை கூறுமேமறை
பாரதத்தினர் தேறுமாறுசெய் (இந்த)

5. ஒப்பி மனசைவிற்று முப்பழம் உண்பதினும்
தப்பில்லா வேலைசெய்து உப்பில்லாக் கூழுண்பதே
உத்தமம் எனும் சத்தியத்தினை
சித்தமென்றுமி ருத்திவைத்திடும் (இந்த)

6. இச்சகம் பலபேசி மெச்சப் பிறர்கொடுக்கும்
எச்சிலையுண்பதினும் பிச்சை எடுப்பதுமேல்
என்றநீதியில் எந்தன் நாட்டினர்
ஒன்றியேயவர் என்றும் வாழ்ந்திடும் (இந்த)

7. அதிகாரம் பண ஆசை அதனாலே மதமேறி
மதியாமற் பெரியோரைச் சதிபேசிக் களிக்காத
எண்ணமேவாப் பண்ணுவாயென
புண்ணியா உனை நண்ணுவேன் தினம் (இந்த)

8. உற்றவர்க் கூறுசெய்யும் மற்றவருடன் கூடி.
பெற்றது சொர்க்கமேனும் முற்றும்பழியுடைத்து
ஆதலாலினி சூதுவாழ்க்கையில்
ஏதும் நான்மனம் பேதியாவிதம் (இந்த)

9. உள்ளொன்று புறமொன்று கள்ளத்தனத்தைவிட்டு
உள்ளத்தை உள்ளபடி சொல்லும் உயர்குணமும்
உண்மையேஉன் தன்மையாமெனும்
திண்மையேவர நன்மையேபெற (இந்த)

10. காந்திமுனிவன்செல்லும் சாந்தவழியில்நின்று
எந்தும்உன் அருட்சுவை மாந்தியனுபவித்து
எண்டிசைக்கணும் மண்டலத்தினில்
கொண்டுசென்றிதை விண்டுபேசிடும் (இந்த)

# தனிப்பாடல்கள்.

## இறைவன் வணக்கம்.

அன்பினுக்கன்பாய்வந்து அறிவினுக்கறிவாய்நின்று
அறிந்தவர்க்கெளியனாகி அல்லவர்க்கரியனாகி
முன்பினும்நடுவொன்றின்றி முதுமறைதனக்குமெட்டான்
மூடர்கள்மனத்திற்கூட மூலையிலொதுங்கிநின்று
செம்பினும்கல்லினாலும் செய்தவையெல்லாமாகிச்
சிலந்திபோற்கூடுகட்டிச் சிலுவையில்மறைந்தான்போல
என்பினுக்கென்பாயென்றும் எம்முளேவிளங்குகின்ற
எழுஞ்சுடர்ஜோதியான இறைவனை இறைஞ்சிநிற்பாம்.

## நரசிம்மமூர்த்தி.

எரியினிலெறிந்திட்டாலும் எண்ணெயிற்காய்ச்சினாலும்
ஈட்டியைக்காட்டினாலும் யானையைஏற்றினாலும்
ஹரியெனும்ஒருவனன்றி அறிந்திலேன்வேறுதெய்வம்
அன்னவர்க்குரிமையன்றி மற்றவர்க்கடிமைசெய்யேன்
சரியெனத்தந்தைசெய்தக் கொடுமையைச்சகித்துநின்று
தனக்கிடர்செய்தபோதும் தானதுசெய்யானந்தச்
சிறுவனைக்காத்தசேதி தினம்வரநாமக்கல்லில்
நரஹரிஉருவுகாட்டும் ஒருவனைத்துதித்துநிற்பாம்.

## மஹாத்மா.

இத்தனைநாள் உலகமெலாம் இருந்தறிந்த பெரியவர்கள்
இசைத்தஞானம்
அத்தனையும் ஒருருவாய்த் திரண்டதெனக் கலியுகத்தே
அவதரித்தோன்
சத்தியமே மந்திரமாம் சாந்தமொன்றே தந்திரமாம்
சமயம்தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த ஸாத்விகத்தை
உறுதிகொள்வாம்.



## தேசபக்தர்கள்.

அன்புடைய பெயரையெல்லாம் ஆபத்திலறியலாம்
அதனைப்போல
மன்பெரிய இந்தியத்தாய் மிடிமையுற்று அடிமையினால்
மனமேநொந்து
துன்பமுறு மிந்நாளில் துணையெனவே முன்னின்று
துயரந்தாங்குந்
தெப்புடைய தேசபக்தர் யாரெனினும் அவர்புகழைச்
செப்புவோமே.

## அஸாத்விக வழி பேசுகிறவர்களுக்கு

இராகம்—தன்யாசி—தாளம் ஆதி.

பல்லவி.

கத்தர்துணியுடுத்த சித்தமில்லாதநீ
கத்தியெடுத்தென் செய்குவாய்

அநுபல்லவி.

பித்தலரைப்போலவே மெத்தப் பிதற்றுகின்றாய்
சற்றுநினைத்து உய்குவாய் (கத்)

சரணங்கள்.

1. கள்ளுக்கடைகளிலே உள்ளம்மயங்கினநீ
கஷ்டங்கள்சகிப்பாயோ
வெல்லும் சமர்களத்தில் கொல்லெனமுன்னின்று
வீரமும் வகிப்பாயோ (கத்)
2. ஜாதிமதக்கலகம் பேதம்விடாதநீ
தைரியமடைவாயோ
ஓதும்சமர்முனையில் ஏதும்கவலையின்றி
உயிரதை விடுவாயோ (கத்)
3. சத்தியம்பேசவும் மெத்தப்பயந்திடும்நீ
சண்டையிற் செய்வதென்ன
சுத்தமும் வீரனைப்போல் யுத்தமேபேசுகிறாய்
சூதனுமுய்வதுண்டோ (கத்)

4. உஷ்ணஜலம்படவும் கஷ்டம்பொறுதவர்
உடன்கட்டை ஏறுவரோ
இஷ்டமுனக்கிருந்தால் நஷ்டமில்லாவழி
இதைவிடக்கூறுகிறேன். (கத்)

## சாந்தமே நல்லவழி.

இராகம்-ஆனந்தபைரவி—தாளம்-ரூபகம்.

பல்லவி.

நல்ல வழியிருக்க அல்லல் வழிநினைத்து
நாளும் அலைந்தாய் நெஞ்சமே

அநுபல்லவி.

தொல்லைமுனிவர்கள் சொல்லியவழியது
சுதந்தரநாட்டிற்குச் செல்லுதற்கெளியது (நல்ல)

சரணங்கள்.

1. கடியும்புலிகாடி கொடியமிருகமில்லை
கள்வர்கள்பயமில்லை பள்ளம்மேடுள்ளதல்ல
குடியுங்கொலைகளவும் அடியும்வழிபரியும்
கொஞ்சமும் அதிலில்லை நெஞ்சமேநீசெல்ல (நல்ல)

2. கோபமெனும்வெயிலின் தாபமங்கடிக்காது
க்ரோதமெனும்பனியின் குளிர்வந்துநடுக்காது
சாபப்பிறர்க்குச்சொல்லும் தாகமும் எடுக்காது
சங்கடப்பேய்கள்நம்மை அங்கேதும் தடுக்காது (நல்ல)

3. நாடும்மதங்களெல்லாம் கூடும்அவ்வழிசென்று
நாலிருவழிகட்கும் நடுவானதுவொன்று
பாடும்மறைகளெல்லாம் தேடும்அதனையென்றும்
பக்தியுடையவர்க்குப் பாதைமிகவும்நன்று (நல்ல)

4. ஆய்ந்தபெரியவர்கள் தேர்ந்தது அவ்வழி
ஆனந்தசுதந்தரம் போனவர்க்கங்குவெளி
காந்திமுனிவன்சொல்லும் சாந்தமென்றொருமொழி
காட்டியவழிசென்றால் வீட்டையடைவாய்தெளி (நல்ல)



## நமது முற்கால தற்கால நிலைமை.

"மஞ்சுநிகர்குந்தளமின்னே" யென்ற வர்னமெட்டு.

1. எந்தவிதம் இந்தகதியே இந்துதேசம்-வந்துதித்த
எங்களுக்கு வந்தவிதியே பெரும்
இந்தமாநிலத் தெந்ததேசம்மும் முந்திடாதெனும் அந்தமேவிய
இந்துதேவி எங்கள் தெய்வமே எம்முரிமை-யாமடைந்து
எந்தவிதம் நாங்களுய்வமே.

2. போகபூமி யென்றுசொல்லுவார் போதமுறையில்-வேதமொ
பூத்தநில மென்றுவிள்ளுவார் அந்த [ழிகள்
போகமாதிய வேதமானவை யோகமேநிறை ஆகமாதிய
பொய்த்தவெனத் தோன்றுகின்றதே புகழ்ச்சியற்று-இகழ்ச்சி
புத்திநிலை மாற்றுகின்றதே. [யுற்று

3. பொன்விளையும் நன்னிலமென்று பெரியவர்கள்-மறையவர்கள்
புத்தகத்தில் சொன்னதுமுண்டு இங்கே
வந்துநாங்கள் பிறந்தநாள்முதல் எந்தநாளிலும் இந்துதேசமும்
பொன்செழிக்கக் கண்டதில்லையே ஒருபொழுதும்-வறுமை
போஜனமும் உண்டதில்லையே. [யின்றி

4. இங்குவளம் பொங்குமேயென்று எடுகளிலே-பாடியவர்கள்
எழுதினதைக் கண்டதுமுண்டு நிலம்
இஞ்சியேபல பஞ்சமேமிக நஞ்சியேழைகள் துஞ்சவேதினம்
எங்குமெங்கும் பார்ப்பதுமுண்டு எழைக்குடிகள்-கூழுக்கு
எங்கியேங்கி ஆர்ப்பதுமுண்டு. [மின்றி

5. அன்னைமிக பின்னமுற்றதும் அகமுடைந்து-மகிமைபெற்ற
அன்னியர்க் கடிமைபட்டதும் மேற்கு
ஆங்கிலேயர்கள் ஈங்குவந்தா சோங்கவும்மனம் வீங்கிநிற்பது
யாருடைய தப்பிதமென்று அமைதியுடன்-நிம்மதியாக
மாறுமொழி செப்புவீரின்று

6. நாகரீக முற்றவர்களே அவர்வழியில்-தவறுமின்றி
நல்லரசு கற்றவர்களே அவர்
நல்லரேமிக வல்லரே தடை யில்லையேயென சொல்லினும் என்
நம்முரிமை நாமடைந்திட தடைசொலவும் உடைமையுண்டோ
நம்மனமும் போமுடைந்திட.

7. நல்லபல கல்விகொடுத்தார் தேசபக்தியில்-ஆசைபெருக்கி
நம்மகிமை சொல்லிவிடுத்தார் வெகு
நன்மையேபல பண்ணிஞரினும்நம்மையே பலமுன்னவேசெய்த
நன்றிநமக் கென்றுமேயுண்டு என்ருலுமேயென்ன-நன்ரு
நாமவர்க்கு என்றுமோதொண்டு [குமோயிது

8. மின்னிழைத்த பொன்னுருக்கியே இரத்தினங்களை வைத்தி
மினுமினுத்துக் கண்ணுருக்கவே வெகு [ழைத்துமேல்
ஜொலிஜொலிப்புடன் கலகலத்திட விலைமதித்திடஉலகமேதென
இட்டதொரு கால்விலங்குதான் துலங்கிடினும்-விலங்குதானே
ஏதும்நகை போலிலங்குமோ.

9. உற்றதொரு நேசனென்னினும்உயிர்கொடுக்கும்-இயல்புடைய
நற்றருமப் பாசனென்னினும் ஐயா
ஓதுவீரொரு பாரபட்சமி லாமலேயிது ஞாயமோவென
என்மனைவி வீடுவாசலை அடக்கியாள-அவர்க்குரிமை
ஏதுமுறை கூடுமோசொல்லும்

10. நல்லரசே யென்னினும்அது சுதந்தரத்தில் -ஹிதம்பெருகும்
நம்மரசே யாகுமோ இது எந்த
நாளுமேயவர் மேலிருந்ததி காரமேசெய கூடுமோயிது
ஞாயமல்ல வென்றுசொல்லுவோம் நீதிமுறையில்-வாதுதொ
ஞாயபலத் தாலேவெல்லுவோம் [டுத்து

---



# நாட்டுக்கும்மி.

இஃது பாமாஜனங்களுக்குத் தேசிய ஊக்கம் ஊட்டக்கூடியதாகவும்
எளிய நடையுள்ளதாகவும், பாமாஜனக்களுக்கும் பழக்க
முள்ளசந்தமுள்ளதாகவும் உள்ள ஒரு சிறு நூல்
தேவையென்றும், அதற்கு "ரானடே" பரிசு
என ஒரு பரிசு கொடுக்கப்படுமென்றும்,
1912-ஹு த்தில் "சுதேசமித்திரன்"
பத்திரிகையில் தூத்துக்குடியி
லிருந்துவந்த விளம்பரத்
தைக்கண்டு பாடிய

## கும்மி.

1. கும்மியடிப்பெண்கள் கும்மியடியுங்கள்
கொத்துச்சரப்பணி சத்தமிட
நம்மையெல்லாம்பெற்ற இந்தியநாட்டின்
நன்மையைக்கோரி யடியுங்கடி.

## கடவுள் வணக்கம்.

2. புத்தனென்றும்மஹ மத்தனென்றும் ஏசு
நாதனென்றும்மது சூதனென்றும்
நித்தமுதித்தருள் நீதியளித்திடும்
நிர்மல ஜோதியைப் போற்றுங்கடி.

## ப்ரம்மன் துதி.

3. நீதிநிலைக்க நினைந்தவனும்அருள்
ஜோதியுருக்கொண்ட மேனியனும்
ஆதியறத்தை அளித்திடுவான் எங்கள்
அரவிந்த நாதனைப்போற்றுங்கடி.

## சிவபிரான் துதி.

4. ஆலமுண்டாலும் அசையாதான்பா
காலனடிகுண சீலனடி
பாலைமுனிந்தப் பனிமொழியாள்பதி
பாலகங்காதரன் பாடுங்கடி.

### கோபாலன் துதி.

5. தீதுசெய்வேந்தரைச் சீர்திருத்தம்செய்யத்
தூதுநடந்திடும் தூயனடி
கோதில்குணத்தவன் கோகுலத்தில் வந்த
கோபால கிருஷ்ணனைப்பாருங்கடி.

### வழிபடு கந்தன் துதி.

6, கந்தமலரொரு மேலவர்க்கும் ஞானக்
கைப்பலம் காட்டிய கந்தனடி
கந்தமணக்கின்ற ஜோதியடி புகழ்
காந்தியடி வெகுசாந்தனடி.

### தற்கால நிலைமை.

7. கிட்டுங்கடி மலர் கொட்டுங்கடி கையைத்
தட்டுங்கடி கண்ணீர் சொட்டுங்கடி
மட்டில்புகழ் கொண்ட இந்திய தேவியின்
மாக்ஷிமை கெட்டதைக் கேளுங்கடி.

8. கெட்டோமடி குடிகெட்டோமடி நாம்
பட்டோமடி வெகு கஷ்டமடி
முட்டத்தரித்திரம் கிட்டிமுறைக்குது
மூதேவி நம்மைமுறைமை கொண்டாள்.

9. கஞ்சியற்றோம் பழங்கந்தையற்றோம்குல
வஞ்சியரே என்னவஞ்சமடி
கெஞ்சிநின்றோம்மிக அஞ்சுகின்றோம் என்ன
காலமடிவந்த கோலமடி.

10. மானமிழந்து மதியிழந்துபுகழ்
தானமிழந்துத் தவமிழந்து
ஞானமிழந்து நலமிழந்து நாம்
போனகதியினைப் பாருங்கடி.

11. காசுபணத்தைக் கைவிட்டாலுங்கதிர்
வீசும்புகழை விடலாமோ
வீசும்புகழையும் விட்டுவிட்டோம்சற்றும்
வெட்கமுமின்றி வெளியில் வந்தோம்.



12. நல்லகுடியிற்பிறந் தோமடிநாம்
நல்லநிலையிலிருந் தோமடி
தொல்லைப்பிறப்பும் புகழும்மறந்துநாம்
தொண்டுசெய் தொண்டரின் தொண்டரானோம்.

13. பேரும்புகழும் பெருமையுங்கொண்டவர்
பேரரின்பேரரின் பேரரடி
சீரும்சிறப்பையும் விற்றுவிட்டுநாம்
சின்னத்தனத்தினை தேடிக்கொண்டோம்.

14. உத்தமஜாதி மனிதரடிநாம்
உத்தமமான குலத்தரடி
பத்தினிஜாதியின் பாவையரேயிப்போ
பஞ்சப்பனுதிக ளானமடி.

15. வீரர்குடித்தன வீரரடிநாம்
வீரருள்வீரரின் பேரரடி
சூரர்குடித்தனச் சூரரடியிப்போ
சோற்றுக்கும் தண்ணிக்கும்சோருதடி.

16. வேந்தர்குடிவந்த மாந்தரடிவெகு
வெற்றியடி நாம்பெற்றதடி
சோர்ந்துசுழன்று சுழித்துத்திரிகின்றோம்
சொக்குதடிமனம் வெக்குதடி.

17. அன்னியரெத்தனை வந்தாலும் வெகு
ஆன்புடன்கொண்டு விருந்தளிக்கும்
கண்ணியமானகுடியிற் பிறந்துநாம்
கஞ்சியுமற்றுக் கதறுகின்றோம்.

18. அன்னக்கொடிகள் பறந்துவிருந்திடும்
ஆசாரவாசலின் வீதியடி
பின்னக் கழுதையும் பேயும்குடிகொள்ளப்
பெண்மணியே என்ன காலமடி.

19. வெண்ணையும்பாலும் பெருகிவழிந்திடும்
பண்ணைய மெங்களின் பண்ணையடி
தண்ணியுமின்றித் தயங்கத்தரித்திரம்
தங்குதடி மனம் பொங்குதடி.

20. நெல்லுங்குலமணிக் கல்லுமுதிர்ந்திடும்
கொல்லையடி யெங்கள் கொல்லையடி
கல்லுங்காட்டொடு காடுமேடாயிப்போ
காணுதடி மனம் நாணுதடி.

21. கோடானுகோடி குடித்தனக்காரரின்
கூட்டமடி யெங்கள் கூட்டமடி
நாடோடியாகி நடுத்தெருவில்நின்று
நாமும்புலம்பிடும் ஞாயமென்ன.

22. கண்ணும்மனமும் கருத்துங்கொண்டமட்டும்
காணுமடி யெங்கள் காணியடி
கண்ணும் மனமும் கருத்துஞ்சுழன்றிடக்
கஞ்சியற்றோமடி வஞ்சியரே.

23. மன்னருள்மன்னரும் வந்துவணங்கிடும்
மன்னவர் மன்னரின் மைந்தரடி
சின்னரிற் சின்னரும் நின்றுசிரித்திடச்
செய்வினையென்னடிச் சேடியரே.

24. நீதியும்நல்ல நெறிமுறையுங்கொண்ட
ஜாதியடி யெங்கள் ஜாதியடி
நீதியும்நின்ற நெறிமுறையுங்கெட்ட
நிந்தனையென்னடிச் சுந்தரியே.

25. மானம்பெரிதென்று பிராணனைவிட்டுயர்
மாட்சிமை கொண்டவர் மைந்தரடி.
மானத்தை விற்று வயிற்றைவளர்த்திடும்
மாயமுமென்னடிச் சேயிழையே.



26. வெள்ளியும் பொன்னும் விரிந்துகிடந்தொளி
வீசுமடி யெங்கள் வாசலிலே
கள்ளியும் முள்ளும் கலந்துமுளைத்திப்போ
காட்டுதடி மனம் வாட்டுதடி.

27. முத்தும்பவளமும் சிந்திக்கிடந்திட்ட
முற்றமடி யெங்கள் முற்றமடி
சொத்தைப்பணத்திற்கும் செல்லாதகாசுக்கும்
சோருதடி மனங் கோருதடி.

28. போரொடுநின்றுப் புகழோடிறந்திட்ட
தீரர்வழிவந்த தீரரடி
தேரொடுநின்றுத் தெருவோடலைந்திடத்
தேற்றமுமென்னடிக் கோற்றொடியே.

29. இல்லையென்றோருக்கு அள்ளிக்கொடுத்திட்ட
வள்ளர்வழிவந்த வள்ளரடி
இல்லையில்லையில்லை யில்லையில்லையென்றுப்
பல்லை யிளிக்கிறோம் பாருங்கடி.

30. பார்த்ததிசை யெங்கும் பச்சைப்பசேலென்று
பார்க்குமடி யெங்கள் பாளையத்தில்
பார்த்ததிசை யெங்கும் நீத்துக்கிடக்குது
பாவமு மென்னடிப் பூவையரே.

31. பட்டும்பட்டாடையும் கட்டிக்கழித்திட்டப்
பட்டையக்காரரின் பந்தலிலே
கட்டக் கையகலக் கந்தையுமின்றிநாம்
கத்துவதென்னடிச் சித்திரமே.

32. மிஞ்சுவளங்கள் நிறைந்து சுகங்கள்
மிதந்துகிடந்திட்ட தேசத்திலே
பஞ்சமும் கொள்ளைப் பலவகைநோய்களும்
மிஞ்சுவதென்னடி ரஞ்சிதமே.

33. பாலுந்தினுசுப் பழவகையும்மூன்று
வேலையும்தின்று வெறுத்தவர்நாம்
பாழும்வயிற்றுக்குக் கூழுமின்றியிப்போ
பற்றுதடி வயிறு வற்றுதடி.

34. வேதமொடுகுறள் நீதிமுறைகளும்
ஓதுமடி யெங்கள் வீதியிலே
வாதுவழக்கொடு வஞ்சனைமோசமும்
வஞ்சியரே யிப்போ மிஞ்சுதடி.

35. புத்தம்புதியவ ரானாலும் உயிர்
தத்தம் அவருக்குத் தந்தவர்கள்
ஒத்துப்பிறந்தவர் செத்துக்கிடந்தாலும்
ஒத்திநடந்திடக் கற்றோமடி.

36. கட்டுக்கடங்காத கஷ்டங்கள் வந்தாலும்
விட்டுப்பிரியாத கட்டுடையோம்
விட்டுத்தனித்தனி எட்டியதாலிந்த
வேதனைவந்தது மாதரசே.

37. கூடப்பிறந்த சகோதரர்கள்மிக
வாடியிருந்து வருந்துகையில்
மோடியிருந்துத் தனித்துச்சுகித்ததால்
மோசம்போனோமடி மொய்குழலே.

38. வாசமடிபுகழ் வீசுமடி எங்கள்
தேசமடி வந்தமோசமடி
நாசமடிவெகு நாசமடிமனங்
கூசுதடி பழி யேசுதடி.

39. பொங்குதடி மனம் பொங்குதடி உடல்
பொங்குதடி துயர் தங்குதடி
மங்குதடி மதி மங்குதடிமட
மங்கையரே யென்ன பங்கமடி.



40. எண்ணயெண்ண மனங்குன்னுதடி வினை
என்னென்று சொல்லுவேன் கன்னியரே
பண்ணியதொல்லைப் பழவினையோயென்ன
பாபமடி எவர் சாபமடி.

### ஏன் இக்கதியடைந்தோம்.

41. பாபமல்ல வருஞ்சாபமல்ல முனி
கோபமுஞ் சாமியின் குற்றமல்ல
தாபமடிபெற்றத் தாயைமறந்ததால்
தாழ்வடைந்தோமடித் தையலரே.

42. மாதாவின்பெற்ற வயிறெரிய நாம்
மஹேச்வர பூஜையைச்செய்தமடி
ஆதலினாலிந்த வேதனைவந்ததும்
ஆச்சரியமல்ல ஆச்சியரே.

### அந்த தாய் யார்?

43. தேசமடி இந்து தேசமடிநம்மைப்
பாசமுடன் பெற்றுப் பாலித்தவள்
தேசமடி இந்து தேசமடி எங்கள்
தேவியடி எங்கள் ஆவியடி.

44. தேவியடி இந்து தேவியடி யெங்கள்
ஆவியடி உங்கள் ஆவியடி
பாவியடி வெகு பாவியடிபடு
பாதக ரெங்களைப் பெற்றதனால்.

45. பெற்றவ ளிந்திய தேவியடிபெயர்
இட்டவ ளிந்திய தேவியடி
உற்றவ ளிந்திய தேவியடிபால்
ஊட்டி வளர்த்தவளும் மவளே.

46. மாதமும்மாரி பொழிந்து செழித்திட்ட
மாநிலத் துயர்ந்த தேவியடி
போதமும் வேதமும் மூந்தியுரைத்திட்ட
புண்ணிய ஞானக் கிழவியடி.

47. முப்பத்து முக்கோடி மக்களடி இந்த
மூப்புடை இந்திய தேவிபெற்றாள்
முப்பத்து முக்கோடி மக்களுந்தானுமாய்
முச்சந்தி வீதியில் கத்துகின்றாள்.

48. மூப்புடை இந்திய தேவியடிநம்மை
முன்னம்பயந்து வளர்த்தெடுத்தாள்
மூப்புடை யிந்திய தேவியடிநம்மை
இன்னும்புரந்து முகந்துடைப்பாள்.

49. இந்திய தேவிநம்மைப் பயந்தாள்கலை
இந்திய தேவிநமக் களித்தாள்
இந்திய தேவிநமைப் புரந்தாள் அந்த
இந்திய தேவியை நாம் மறந்தோம்.

50. எத்தனை காலஞ் சுமந்திருந்தாள் நமக்
கெத்தனை கஷ்டமனுபவித்தாள்
அத்தனைகஷ்டமும் நாம் மறந்தோமவள்
அத்தனை குற்றமு மேபொறுத்தாள்.

51. கோடானு கோடிபகைவரடி முன்னம்
கொள்ளையடித்திட வந்தவர்கள்
கோடானு கோடியும் தான்சகித்துத்தன்
குஞ்சு குழந்தையை ஆதரித்தாள்.

52. எண்ணிக்கையற்ற அரசரடி இந்த
ஏந்திழைசெல்வத்தில் ஆசைகொண்டார்
எண்ணிக்கையற்றப் பகைவரடி அந்த
ஏந்திழைவென்று நமைப்புரந்தாள்.

53. அத்தனைகஷ்டமும் தான் சகித்துநம்மை
ஆதரித்திருந்த தேவியினை
மத்தரைப்போல மறந்ததினாலிந்த
மானிலத்தேமிக ஈனமுற்றோம்.



54. அற்புதமானப் பொறுமையடி அவள்
அற்புத ஞானப் பெருமையடி
அற்புதமானச் சிறுமையடி இப்போ
அற்பத்தனத்தினால் தேடிவைத்தோம்.

55. பெற்ற வயிறுமெரியாதோ அவள்
பேதைமனமும் வருந்தாதோ
பெற்றகுழந்தைகள் தன்னைமறந்ததைப்
பெண்ணுமொருத்தி சகிப்பாளோ.

56. பெற்றமனமுங் கசிந்தழுது அந்த
பேதையுகுத்திடுங் கண்ணீரால்
பெற்றதனமும் புகழுமிழந்து நாம்
பேதைகளானது பெண்ணரசே.

57. தாயைமறந்தக் குழந்தைகளெப்படித்
தாரணிதன்னில் செழிக்குமடி
தாயையிகழ்ந்தக் குழந்தைகளையிந்தத்
தாரணிநின்று பழிக்குமடி.

58. அன்னையும் தந்தையுந் தெய்வமென்றுமுன்னம்
சொன்ன கிழவியின் வார்த்தையைப்போல்
அன்னையும் தந்தையும் அத்தையும்மாமனும்
அத்தனையும் இந்து தேசமடி.

அந்த தேசத்தின் எல்லையும் சிறப்பும்.

59. வெள்ளிமலையும் வடக்காக விரி
வெற்புடைசிங்களம் தெற்காக
பள்ளக்கடலடி வங்காளம் கிழ
பாரிசமேற்கி லரபிக்கடல்.

60. பரந்துகிடக்கின்ற தேசமடி எம்மைப்
பாலிக்கும் இந்திய தேவியடி
சிறந்து விளங்கிய தேசமடி அவள்
சீரும்சிறப்பையும் கேளுங்கடி.

61. வேதமுதித்தது மிந்நாடு அருள்
வேதிகை நின்றது மிந்நாடு
போதமுதித்து மிந்நாடு மிக்கப்
புண்ணிய பூமி யென்றாடுங்கடி.

62. ஞானமுதித்தது மிந்நாடு அருள்
ஞானிகள் நின்றது மிந்நாடு
மோனமறிந்த முதல்நாடு வெகு
முத்தரிருந்தது மிந்நாடு.

63. புத்தர்பிறந்தது மிந்நாடு அவர்
போதம் வளர்ந்தது மிந்நாடு
சித்தரிருந்தது மிந்நாடு வெகு
சித்திகள்பெற்றது மிந்நாடு.

64. சீதைபிறந்தது மிந்நாடு அவள்
சீர்த்தி விளங்கிய திந்நாடு
கீதைபிறந்தது மிந்நாடு வெகு
கீர்த்திகள் பெற்றது மிந்நாடு.

65. சீருடையத் தமயந்தியொடு புகழ்
சிலம்புடைக் கண்ணகி தேவியையும்
பேருடையச் சாவித்திரி தேவியைப்
பெற்று வளர்த்தது மிந்நாடு.

66 ராமனிருந்தது மிந்நாடு அந்த
பீமனிருந்தது மிந்நாடு
சோமனொடுபுகழ் சூரியன்மரபும்
ஜோதிபொழிந்தது மிந்நாடு.

67. கண்ணன் பிறந்தது மிந்நாடு கொடை
கர்னனிருந்தது மிந்நாடு
அண்ணலடியரிச்சந்திரனும்மவர்
அன்புடை தேவியு மிந்நாடு.



68. முன்னுமில்லை இனிப்பின்னுமில்லை யென
முந்திய நீதியின் மூவேந்தர்
மன்னாடிசேர சோழரும் பாண்டியர்
மாட்சிமை கொண்டது மிந்நாடு.

69. எட்டி லடக்க முடியாதுமனம்
எண்ணி எழுதவும் போதாது
பாட்டி லடக்க முடியாதபுகழ்
பாவையு மிந்தக் கதியானாள்.

இனி நாம் செய்யவேண்டிய தென்ன ?

70. போனதுபோகட்டும் கண்மணியேயினி
யாகிலும் புத்தியுடனிருப்போம்
மானிலத்தாயை வணங்கிநின்றாலினி
மானிலத்தே மிக நாமுயர்வோம்.

71. இந்திய தேவியைப் பூஜைசெய்யநாம்
இந்திய ரெல்லோரும் ஒன்றடியே
எந்த மதத்திற்கும் எந்த குலத்திற்கும்
சொந்தமடி அவள் தொந்தடி.

72. ஏழையு மெங்களுக் கண்ணனடி செல்வப்
பேழையு மெங்களின் தம்பியடி
கோழையு மெங்கள் குலத்தனடி குடி
காரனுங் கூடப் பிறந்தவனே.

73. நல்லவர் கெட்டவ ரென்பதன்றிமற்றும்
நாலுவருணமு மொன்றடியே
தொல்லைச்சுருதியின் சொல்லடியே இதை
தோகையே நீயும் மறக்காதே.

74. பறையரு மெங்கள் குலத்தாடி சுத்தப்
பார்ப்பனரு மெங்கள் பந்துவடி
அரையனு மெங்களுக் கானவனேயன்றி
அல்லவனும் வெகு நல்லவனே.

75. அன்னியரானாலும் இந்திய நாட்டை
அடைந்தவர் எங்களுக்கண்ணனடி
மன்னவரானாலும் இந்திய நாட்டை
மறந்தவர் தங்களை நாமறப்போம்.

76. எந்தகுலத்தில் பிறந்தாலும் அவர்
எந்த நிலையிலிருந்தாலும்
இந்து நிலத்தில் பிறந்தவரெல்லோரும்
இந்திய தேவியின் மக்களடி.

77. முப்பத்து முக்கோடி மக்களடி நாங்கள்
முப்பத்து முக்கோடி சோதரர்கள்
முப்பத்து முக்கோடி பேருமொருமிக்க
முப்பொழுதும் அவள் பூஜைசெய்வோம்.

78. பூஜையென்றால் வெறும் பூஜையல்லசெல்வப்
புண்ணிய பூமியின் பிள்ளைகளே
ஆசையுடனவள் கைத்தொழில்வித்தையை
ஆதரஞ் செய்யுங் கடமையடி.

79. எண்ணிக்கையற்றத் தொழிலடியே இந்த
புண்ணிய பூமியுங் கண்டதடி
எண்ணிக்கையற்றவர் இந்தியர் தொழிலை
அன்னிய தேசங்கள் ஆளுதடி.

80. கைத்தொழில் கெட்டுக்கலங்குதடி தேசம்
கைத்தொழிலின்றிப் புலம்புதடி
கைத்தொழில் தம்மை விருத்திசெய்தாலந்த
கண்ணுடை தேவியும் கண்விழிப்பாள்.

81. ஆயிரம் ஆயிரம் வித்தையடி இங்கே
ஆதரிப்பாரின்றிச் செத்ததடி
ஆயிரம் ஆயிரம் கைத்தொழிலாழிகள்
ஆதரவின்றி உயிர் துறந்தார்.

82. இந்திய தேவியின் கைத்தொழிலை நாம்
ஏற்றுப்புகழக் கடமைப்பட்டோம்
இந்திய தேவியின் வித்தைகளை நாம்
எந்த விதத்திலும் ஆதரிப்போம்.



83. இந்திய தேசத்தில் உண்டானபொருள்
எந்த விதத்திலு முத்தமமே
இந்திய தேசத்தொழிலாளி நமக்
கெந்த விதத்திலும் சொந்தமதால்.

84. அன்னியர் சாக்கைத்தீண்டோமே நாம்
அன்னியர் தயவை வேண்டோமே
அன்னியர் பொருளைத்தீண்டுந்தொறும் அந்த
அன்னை வயிற்றிலடிப்பதுபோல்.

பயன்.

85. என்றுநினைந்து மனங்கசிந்து நாம்
இந்திய தேவியைப் போற்றிசெய்தால்
நின்ற துயரம்மறையுமடி இங்கே
நீடிய பஞ்சம் பறக்குமடி.

86. கண்டுகொண்டோமடி கண்மணியே இனி
காரண மின்னதெனத் தெரிந்தோம்
பண்டைச்சிறப்பினை நாமடைய இந்து
பாவைபதத்தினைப் பூஜைசெய்வோம்.

87. கேளுங்கடி இனி கேளுங்கடி வந்து
வீழுங்கடி அவள் பாதத்தினில்
வாழுங்கடி இனி வாழுங்கடி அவள்
வாழ்த்தியிருந்து வரங்கொடுப்பாள்.

88. கிட்டுங்கடி கையைத்தட்டுங்கடி மலர்
கொட்டுங்கடி அவள் பாதத்தினில்
விட்டதடி சனி விட்டதடி பழி
விட்டதடி துயர் விட்டதடி.

89. பஞ்சமும் நோயும்பறக்குமடி அந்தப்
பத்தினிதேவியை நாம் நினைந்தால்
பஞ்சமும்நோயும் பகைக்குமடி அந்தப்
பத்தினிதேவியை நாமறந்தால்.

90. இல்லையில்லை யென்றுப் பல்லையிளிப்பதும்
இல்லையடி இனி இல்லையடி
இல்லையடிபசி இல்லையடி நோய்
இந்திய தேவியை நாம் நினைந்தால்.

91. உத்தமமாகிய ராஜாங்கம் இனி
ஒப்பிலதாகி உயருமடி
நித்தியமாக நிலைக்குமடி நல்ல
நீதியும் வேதநெறி முறையும்.

92. பொங்குமடி பால் பொங்குமடி யினி
புண்ணியபூமி மணைதோறும்
மங்குமடி வினைமங்குமடி இந்த
மங்கையை நாமும் மனதில்வைத்தால்.

93. ராஜ்ஜியம் பொங்கி தழைத்தோங்க நம்
ராஜ்ஜியம்வேண்டி உழைத்திடுவோம்
ஒச்சியகோலு முயிர்த்தோங்க நாம்
ஒற்றுமையோடு உழைத்திடுவோம்.

94. நீதிநிலைக்க நினைத்துவருகின்ற
நிர்மலமாகிய ராஜாங்கம்
ஆதி அரசின் வழிமுறையே நின்று
ஆதித்தன்போல விளங்குமடி.

வாழி.

95. வாழிமழை பொழிவான மொடுவரு
மேழியுழவர் வழிவாழி
வாழியகைத்தொழில் வாணிபம்தம்மொடு
வாழ்விக்க நின்றிடும் ராஜாங்கம்.

96. வாழிமுனிவர்கள் தேடியளித்திட்ட
வேதவழிவரும் நீதியெலாம்
வாழியர்ஞான முணர்ந்தோர்கள் வழி
வாழிய இந்த உலகமெலாம்.

97. இந்திய தேவிதனக்காகத்தம்
சொந்த சுகத்தைத் துறந்தவர்கள்
எந்தமதத்திலும் எந்த குலத்திலும்
வந்தவர் வந்த வழிவாழி.



# தமிழபிமானம்.

இது 1914-வருஷத்தில் ஒரு நாடகக்காரரின் வேண்டுகோளுக்கிணங்கி எழுதப்பட்டது. கோவலன் நாடகத்தில் கோவலன் சிலம்பு திருடியவனாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பாண்டியன் முன்னாற் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டபோது மதுரைமன்னனாகிய பாண்டியனிடத்திற் சொல்வது போன்றது. கோலவன் நாடகத்துக்கு முதனூலாகிய சிலப்பதிகாரத்தில் கோவலன் பாண்டியனைச் சந்திப்பதேயில்லை. என்றாலும் நாடகக்காரர்கள் விசாரணைநடப்பது போலவே நடிப்பது வழக்கமானதால் இப்படி நாடகக்காரருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதைப் பொருட்படுத்தற்க. தமிழை இகழ்ந்து பேசிய தமிழரைக் கண்டிக்கவே எழுதப்பட்டதால் தமிழைப்பற்றி பெருக்கி கதையைச்சுருக்கியிருக்கிறது. இதை நாடகத்திற் பாடுபவர்கள் அங்கங்கே சில அடிகளை எடுத்துக்கொண்டு கடைசியிலுள்ள கதையைச்சேர்த்து இஷ்டப்படி குறுக்கிபாடுவர்.

## அகவல்.

### கடவுள் சொக்கநாதமூர்த்தியாகக் கோயில்கொண்ட பெருமை.

சர்க்கரைதேனோ கண்டோபாகோ
இக்கரைகடந்த அக்கரைதானோ
முப்பழங்கலந்த முதிர்சுவையமுதோ
ஒப்புயர்வில்லா துதவுசஞ்சீவியோ
இன்பமோ துன்பமோ இருளோ ஒளியோ
அன்போ அருளோ ஆணோ பெண்ணோ
அவனோ இவனோ அவனே இவனே
எவனோ எவனோ எளிதே அரிதே
உருவோ கருவோ உயிரோ உடலோ
உருவுங் கருவும் உயிரும் தானோ
இங்கோ அங்கோ இலதோ உளதோ
எங்கே எங்கே எங்கே யென்ன
வேதமும் மற்றும் விளம்பிய நூல்களும்

ஓதியமுனிவரும் உயர்தவயோகரும்
தேடியுங்காணாத் தேம்பியுங்காணா
ஓடியுங்காணா ஒப்பிலா ஒருவன்
எள்ளினுட்கலந்த எண்ணையேபோலும்
தெள்ளியபாலில் நெய்யேபோலும்
பூவினிற்கலந்த மணமேபோலும்
நாவினிற்கலந்த உருசியேபோலும்
உடலிற்பாவிய உயிரேபோலும்
கடலிற்பாவிய உப்பேபோலும்
எங்கும்நிறைந்த எம்பிரான்பரமன்
மங்கும் தனது அடியார்க்கென்று
சத்தியமானச் சத்தியாய்வந்தவள்
பக்தரைகாக்கப் பாரிலுதித்தவள்
மானுண்டவிழியினள் தேனுண்டமொழியினள்
வாணாட்சிசெய்திடும் மீனாட்சிதன்னோடு
வாயிலம்பதியென வந்தடைந்திங்கே
கோயில்கொண்டருளிய குறைவிலாபெருமையும்

தமிழ்ச்சங்கம் வளர்ந்த பெருமை.

பாஷைகளெல்லாம் பசையறநாணிக்
கூசிக்கூசிக் குறைபடச்செய்யும்
வாசத்தமிழை வரையிலாத்தொன்மையை
வீசும்தமிழை விரிந்தகடலினைத்
தேனினும்பாகினும் தெள்ளியஅமுதினும்
ஏனினும் எதனினும் இனித்திடும் தமிழை
தின்னதின்னத் தெவிட்டாத் தமிழை
பன்னப்பன்னப் பலக்கும் தமிழை
கொள்ளக்கொள்ளக் குறையாத் தமிழை
கள்ளக்கபடுகள் இல்லாத் தமிழை
படிக்கப்படிக்கப் பயனே தந்து
குடிக்கக்குடிக்கக் குறையா அமுதை
என்தாய்மொழியினை என்னுடைத்தமிழை
உன்தாய் மொழியினை உம்முடைத்தமிழை



எம்மையும் உம்மையும் மற்றுமிங்கெவரையும்
செம்மையாய் நம்முடைச் சிறுபிராயத்தினில்
தொட்டிலில்விட்டுக் கட்டிலில்வைத்துத்
தோளிலும்மார்பிலும் தூக்கித்திரிந்து
பாலூட்டிவளர்த்த பாவையாம் தமிழை
தாலாட்டிவளர்த்தத் தாயாம் தமிழை
சீராட்டிவளர்த்தச் சீர்பெறும் தமிழை
பாராட்டி வளர்த்தப் பழையதோர் தமிழை
கோவணமுடுத்துப் பாவாடைதந்த
தேவியாம்தமிழை தெய்வநற்றமிழை
ஆசையாம்மனைவியை அகத்தினில்விட்டு
வேசையைவிரும்பும் வெறியரைப்போன்ற
பாஷையைமறந்த பாதகர்பிறந்து
தேசமிந்நாட்டின் தீவினையாலே
சீசீத்தமிழெனச் சீறிப்பழித்து
நாசியைநீட்டி நாய்போல்விழுந்து
ஏசித்திரியும் இழிவுடைமாக்கள்
பேசவும்கூசிடும் பேயர்கள்பிறந்து
தன்னைவளர்த்த தமிழைப்பேசுதல்
குன்னுந்தொழிலெனக் கூசியேநின்று
பன்னப்பன்னய் பல்லைக்காட்டிடும்
சின்னஞ்சிறியவர் பிறந்ததனாலே
தாயைமறந்த தடியர்கள்போல
வாயைத்திறந்தொரு வார்த்தைசொல்லவும்
உரிமையாம் பாஷையைத் தெரியாதிருப்பது
பெருமையென்றெண்ணும் பேயெனுமாக்கள்
குங்குமம்சுமந்த கழுதையேபோலத்
தம்முடை பாஷையைத் தாமுணராமல்
அத்துடன் அதனை அவமதித்தேசும்
பித்தரும்பதரெனும் சுத்தநிர்மூடர்கள்
பிறந்ததனாலே பெருமைமறைந்து
சிறந்தநாளும் சீரும்குறைந்து

மண்ணிற்கிடக்கும் மணியேபோலும்
எண்ணையிற்றேய்த்த எழுத்தேபோலும்
அற்பரை அண்டிய விற்பனர்போலும்
ஆதாவில்லா வித்தையேபோலும்
அணைப்பவரில்லாக் குழைந்தையேபோலும்
அநுபவமில்லா அறிவேபோலும்
மங்கிக்கிடக்கும் மருவிலாத்தமிழை
இங்கிதத்தமிழை இனிமையாம் தமிழை
அந்த நாளினிற் சந்திரமுடியோன்
சுந்தரப்படுத்த வந்துநின்றருளி
விருத்தியேசெய்யக் கருத்தினிலெண்ணி
பெருத்தகேள்வியர் பெரியவர் சபையென
சங்கரன்தானே அங்கத்தலைவனாய்
தங்கியே நடத்திய தனிப்பெரும்சபையென
சுத்தரும்சித்தரும் பக்தரும் துதிக்க
இத்தரையெல்லாம் இசைகொண்டு நின்று
உலகெலாம் அழியினும் விலகிடாப்புகழொடு
அலகிலாகல்விக் களஞ்சயமாகி
தெய்வப்பலகையைத் தன்னிடமடக்கி
ஐயமில்லாத அருந்தமிழளித்த
சித்திரச்சபையாம் மெய்த்திருச்சபையாம்
முத்தமிழ்ச்சங்கம் விளங்கியபெருமையும்

பட்டணச் சிறப்பு.

தீப்புனல்வைகைத் திரியும் சோலைகள்
ஆம்பலும்அல்லியும் அலர்ந்தவாவிகள்
வாம்பரியானைகள் வரிசைவரிசையாய்
ஓம்பியவீதியும் உயர்ந்தகோபுரம்
சிற்பநூலொடுச் சித்திரவேலையும்
கற்பனைவேண்டாக் காட்சியுமுடைத்தாய்
ஓங்கியமாட ஒப்பிலாவரிசையும்
தாங்கியே அதனிடைத் தயவுடைக்குடிகள்
தெய்வபக்தியும் தேவர்பூஜையும்



மெய்யாம்தொண்டரின் மிகைபடுமன்பும்
சத்தியந்தவிரா முத்தமிழுணர்ந்த
சற்குணமக்களைத் தாங்கியபெருமையும்
இத்தனைப்பெருமையும் இசையுடன்தாங்கி
அத்தனையறிந்த அருந்தவர்போல
மாவளம்நிறைந்த மதுராபுரியைக்
காவலேபுரியும் கோவேசொல்வேன் :—
பெரியவர்பேணிய நெறிகளையுணர்ந்து
அரியநீதியை அளித்திடும் அரசே
ஞாயம்புளா நடுநிலைக்கொண்டு
தாயெனக்குடிகளைத் தாங்கிடுமரசே
மனுமுதல்மற்ற மறையவர்வகுத்த
கனமிகுநீதியைக் கடைந்தாராய்ந்து
காலமுங்கருதி காத்திடும் அரசே
சீலமும்செய்கையும் தேர்ந்திடும் அரசே
பாண்டியா ! சொல்வேன் பரிவுடன்கேண்மோ
ஆண்டிபோல்வந்த அடியனேன்கதையை

தான்பிறந்த சோழநாட்டின் சிறப்பு.

நீர்வளமிகுந்து நிலவளம்சிறந்து
பார்வளமிகுந்து பலவளம்நிறைந்து
ஊர்வளமோங்கி உயிரெலாம்செழிக்கக்
கார்வளமோங்கிக் கடல்வளந்தாங்கி
விருந்தினர்தம்மை வருந்தியே அழைத்து
மருந்தேயெனினும் மகிழ்வுடன்கொடுத்து
உண்பீர்உண்பீர் உண்பீர்கொஞ்சம்
உண்பீரென்ன ஊட்டிக்களிக்கும்
உயர்குண மக்களை உடையதாகி
அயர்விலாப்பெருமை அடங்கியதாகி
மங்களச் சிவபிரான்மகிழ்ந்திடும் கோவில்கள்
எங்கும்நிறைந்த ஸ்தலங்களடங்கி
வானுடென்றே வகுக்கத்தகுந்த
சோணுடையேன் சொல்லுவன்கேளீர்

நீறுமலிந்த நெற்றியர்மிகுந்த
சோறுமலிந்த சோழநாடுடையேன்
சோழமாநாட்டின் கீழைக்கரையில்
காவிரியாறு கடலுடன்கலக்கும்
சங்கமுகத்தில் தங்கியநகரம்
காவிரிப்பூம்பட் டினமென்றோதுவார்
பூவிரியந்தப் புநிதமாம்நகரில்
திரைகடலோடி திரவியம்தேடும்
வாணிபர்குலத்தினில் வந்திடுமொருவன்
மாசத்துவன்தன் மகனெனப்பிறந்தேன்
அந்தமாநகரில் சொந்தமென்ஜாதியில்
வந்திடுமொருத்தி சுந்தரக்குயிலாள்
கண்ணகியென்னும் கனிமொழியாளைப்
பண்ணினேன் கடிமணம் பழவினையாலே
மோசமேசெய்திடும் தாசியொருத்தியின்
ஆசையிலழுந்தி அழிந்தேன் அழிந்தேன்
கணக்கிடக்கூடா பணத்தினையெல்லாம்
விரயம்செய்து வெறுங்கையானபின்
நகரினைநீங்கி நாயகியோடும்
பாண்டியா! உந்தன் மதுராபுரியை
வேண்டியேவந்தேன் ஜீவனம்செய்ய
கண்ணகியோடும் காலிற்பிறந்த
சிலம்பினைவிற்று முதலெனக்கொண்டு
வாணிபம்செய்யவும் வஞ்சகியான
மாதவியென்னும் காதகிகடனைத்
தீர்த்திடவந்தேன் தீர்த்திடவந்தேன்
என்வரலாறு இதுவேயாகும்
மன்னவாநல்ல மதுரைமா அரசே.



## மஹாத்மா காந்தி விசாரணையின்போது கோர்ட்டுக்குச்சொன்ன வாக்குமூலம்

### அகவல்.

ஆங்கில அரசியல்
ஈங்கதற்கொன்றும்
எண்ணியே இருந்த
மண்ணிலே அதுமிக
கண்ணியமுடையோர்
திண்ணமாய் நம்பித்
ஈங்குளயாவரும்
ஆங்கிலமக்களும்
தாங்களும் அறிய
ஓங்கிய கடமையில்
அதிநாள் தெற்கு
நீதியும் எங்கள்
இந்தியனுகவே
சொந்தமென்றுரிமை
இந்தமா உலகில்
அங்குதான் முதலில்
என்கிறபோதும்
போய்விடும் போலப்
போயர்சமரிலும்
அந்த நாடாளும்
எந்தனுலான
சொற்பொருளுடலும்
பற்பல விதமாய்
எட்டினிற்கூட
காட்டியே எழுதும்
ஜெர்மனிசண்டை
தர்மம் இதுவெனத்
ஆன என்தேகம்

அதுமிக நல்லது
இணையிலையென்று
என்மனமுடைந்து
மயக்குடைத்தென்று
கலந்திடார் அதிலென
திரும்பியகாரணம்
இந்தியரனைவரும்
அரசியல் அதிபதி
ஸத்தியம் தெரிய
உரைத்திட நின்றேன்.
ஆப்பிரிக்காவில்
நிலைமையும் கண்டேன்
இருந்ததனுலே
சொல்லுதற்கொன்றும்
எமக்கிலையென்பதை
அறிந்திடநேர்ந்தது
ஏகாதி பத்யம்
போரில் எதிர்த்த
ஜுலுவர்போரிலும்
ஆங்கிலேயருக்கு
உதவிகள் புரிந்தேன்.
சோர்விலா துதவி
பட்டமும் பரிசும்
என்னைப்புகழ்ந்து
கனதையும் பெற்றேன்.
செய்திடும்போதும்
தளராதுழைத்தேன்
அசதியுற்றிருந்தும்

சேனையும் பணமும்
சண்டையின் பின்பு
அண்டிய எங்கள்
மானிலத்துள்ள
தானிமிர்ந்துயா
நம்பியே நானும்
வெம்பினேன் எண்ணமும்
அடிமேல் அடியென
இடிமேல் இடிவிழ
முதலடி ரௌலட்
முதுகினில் வீழ்ந்தது
பதைத்துநா னெழுந்து
அதைத் தடுப்பதற்கே
தயங்கிய என்மனம்
பயங்கரமாகிய
கூர்மையாம் இடியது
மார்பினில் விழவே
இந்திய முசல்மான்
மந்திரியுரைத்த
அன்னவர் குருவின்
மன்னிய கிலாவத்
சொன்னதம் வாக்கினைச்
எண்ணமும் இல்லை
இத்தனைக் கொடுமைகள்
சித்தமும் அவர்க்குச்
ருசையே கொண்டு
ஏசியே என்னை
எச்சரித்திட்ட
உச்சரித்திட்ட
இந்தியர் குறைகளை
வந்திடும் பெரிய
அத்தினம் நானும்
ஒத்துழைப்பதையே

சேர்த்துக்கொடுத்தேன்.
தருமம் தழைக்கும்
ஆரிய நாடும்
மற்றநாடுகளென
தயவு செய்வாரென
நாளும் உழைத்து
வீணாய்ப்போனதே.
அஞ்சியே பதைத்திட
இற்றது நெஞ்சமும்
சட்ட மூலமாய்
சுதந்தரம் முறிய
பலவிதத்தாலும்
அலைந்திடும் நாளில்
தைரியமடையுமுன்
பஞ்சாப்படுகொலை
மானமுங்குறைய
மயங்கினன் ஐயோ.
மக்களுக்கென்று
உறுதியைமறந்து
ஆதிபீடமாம்
மத விஷயத்திலும்
சோரவிட்டார்கள்
யென்பதையுணர்ந்தேன்.
இழைத்தனர் தெரிந்தும்
சீக்கிரம் திருப்புமென்
அடக்கினேன் துக்கமே
எதிர்த்தவராகி
என்னுடை நண்பர்கள்
உரைகளை விடுத்து
எடுத்துரைத்திடவென
வாக்குடைகாங்ரஸில்
அமிர்தசரசினில்
உறுதியாய்க்கொண்டு

தாங்கியே நின்றேன்
ஏங்கினேன் ஐயோ
மகம்மதியர்க்குரை
தருமென பஞ்சாப்
அடிப்பதுபோலும்
நடிப்பினை செய்து
தீங்கிழைத்தவர்க்கு
பாங்குடன் கொடுத்து
இதையெலாங் கண்டபின்
உதவாக்கரையாம்
என்னுடை நாடு
குன்றிடவென்றே
கண்டனன் நானும்
பண்டயை இந்தப்
அரசியல் செய்பவர்க்
உரிமையெம் பணத்தை
அறிந்திடநின்றேன்
சிறந்த என்தேசம்
அன்றியும் இந்த
ஒன்றிய சுகங்கள்
மனைதொறும் இருந்து
கிணவரிதாகிய
அழித்தனர் முற்றும்
எழுதினர் தெரிந்த
காரணமிதனால்
சோறுண வழியும்
நடைபிணம்போல
தடைசொல யார்க்கும்
பட்டணக்கரையில்
சட்டவட்டம்பல
வீடுகள் கட்டியே
பாடுபடாமலே



திருமந்தானென
ஏமார்ந்தவனாய்
வார்த்தையும் பொய்த்தது
தருகணாளரை
அழுவதுபோலும்
ஞாயமும் மழுப்பி
உதவிசம்பளமும்
பரிசுகள் அளித்தார்.
இந்தியர்க்களித்த
சீர்திருத்தங்களும்
இன்னமும் குறைந்து
கொடுத்தனர் என்று
கருத்திழந்தவனாய்
பாரதநாட்டிடம்
கன்பிலை யென்றும்
உரிஞ்சிடவென்றே
ஆங்கில ஆட்சியில்
சீர்குலைந்ததுவே.
ஆட்சியின் முன்னால்
உயர்ந்த இந்நாட்டில்
மானங்காத்ததாம்
ராட்டினத் தொழிலை
அறிந்தே யென்று
இங்கிலீஷ்காரரே.
கணக்கிலா ஜனங்கள்
துணியுமில்லாமல்
நாள்கழிப்பதனை
தைரியம் வருமோ?
பகட்டியேயலைந்து
ஜம்பமாய்ப் பேசி
விளக்குகள் ஏற்றி
பசப்பியே வாழ்ந்து

நாட்டுப்புறங்களில்
பாட்டைப்பிடுங்கியே
பங்குகொண்டுண்ணும்
தங்கிட எண்ணார்

ஏழையின் பணத்தை
அளுமிந்நாட்டின்
உதவியாய் நிற்பதென்
உதவியாய் நிற்பதால்

வித்தைகள் ஜாலமும்
எத்தனைக் கணக்குகள்
உண்மையாம் இதனை
திண்மையாய் நானும்

உலகக் கதைகளில்
பலமிகுமிப்பெரும்
ஈசனென்றொருவன்
மாசிலா அவனுடை

ஆங்கில தேசமும்
பாங்கினராகிய
உத்தாம் சொல்ல
ஸத்தியம் ஒருநாள்

பற்பல விதமாய்
அற்புத உண்மையை
அறிந்தோ அன்றோ
பரிந்தே நிற்கும்

நல்லதே யென்று
நல்லதோர் துரைகளும்
மயங்கியே நிற்கும்
முயங்கியே அவர்கள்

ஆண்மையை யிழந்து
பான்மையை உணரார்
ஆதலாலிந்த
தீதிலாவழியில்

நலிந்திடும் ஏழைகள்
பிறருடன் கூடி
பாபமாம் வாழ்க்கையை
தாகாய் வாழ்வார்.

எளிதினிற் பரிக்கவே
ஆட்சியின் முறைமை
றுணரார் அவரும்
உண்மையை அறியார்.

வேணதுசெய்து
எடுத்துரைத்தாலும்
ஒளித்திடமுடியுமோ
செப்புவதுண்டு

உவமையொன்றில்லா
பாவத்திற்கே
இருப்பது உண்மையேல்
சன்னதிமன்றினில்

அதனுடன் எண்ணிய
இந்தியர் பலரும்
ஒதுங்கிடும் காலம்
வந்திடும் ஸத்தியம்.

பார்த்துப் பார்த்து
அறிந்தனன் நானும்
அன்னியர் தமக்கே
பகருமிவ்வாட்சியை

நம்பினராகி
நாட்டினர் பலரும்
மகிமையேமகிமை
செய்திடும் முறையில்

அழுந்திடும்தேசம்
பாவமும் அறியார்
அரசியல் மாற
திரும்பினேன் உழைக்க



அரசியல் செலுத்தும்
ஒருவரிடத்தும் நான்
மன்னவனிடத்துள
என்னினும் இந்த

இதுவரைக்கண்ட
இதுமிக கெடுதிகள்
நம்பியே அதனுடன்
அன்புகாட்டுவதே

இந்தியாவிற்கும்
சந்ததம் நன்மையை
ஒத்துழையாமையே
இத்தரையெல்லாம்

கடமையையுணரும்
திடமுடன்கொண்டு
சட்டப்படிக்குத்
திட்டமாய் நானும்

ஆகையால் துரையே
ஆகிய இந்த
சரியல்லவென்றும்
நிரபராதியே

ஒருவழி ஒன்றே
மருமிகும் இந்த
சாலவும் தவறெனத்
வேலையைவிட்டு

அன்றேல் இந்த
நன்றேநானும்
செய்தவனென்றே
நொய்தில்விடாமல்

தண்டனைமுழுவதும்
கொண்ட இந்நாட்டின்
அதிகாரிகளாம்
உள்ளம் கசந்திலன்

மதிப்பிலும் குறையேன்
இயல்பிலா முறைமை
எல்லாமுறையிலும்
இழைத்துளதென்று

நான்பிணக்குற்று
அக்ரமமென்று
இங்கிலாந்திற்கும்
நாடியே நானும்

உயர்ந்த வழியென
இயம்பினேன் அறிய.
ஒவ்வொருகுடியும்
செய்திடவென்றும்

தவறெனத்தெரிந்தும்
தெரிந்தே செய்தேன்
அரைகுவன் முடிவாய்
அரசியல் முறைமை

ஸத்தியத்தில் நான்
என்பதும் நினைத்தால்
உங்களுக்குண்டு,
மார்க்கத்திருப்பது

தகுதியிலுணர்ந்தால்
விலகிடல்வேண்டும்
அரசியல் முறைமை
நாட்டிற்கிடைஞ்சல்

தெளிந்திடுவீரேல்
நூலில் இதற்குள
தந்திடல்வேணும்
குறை தவிர்ந்திடவே.

---

# தமிழ்நாட்டுத் தேசியக்கவி

## ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார்.

(1) அச்சமிகும் பேடிமையின் அடிமைவாழ்வில்
அடங்கியிருந்த றம்மறந்த தமிழர் நாட்டை
பச்சைமரத் தாணியெனப் பதியும் சொல்லால்
பாட்டிசைத்துப் பாலர்களும் நிமிர்ந்துநின்று
நிச்சயமெந் தாய்நாட்டின் அடிமைவாழ்வை
நீக்காமல் விடுவதில்லை யெனமுன்வந்து
துச்சமெனச் சுகத்தையெல்லாம் துறந்துநிற்கத்
தூண்டியது பாரதியின் சொல்லேயாகும்.

(2) படித்தறியா மிகஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்துத் தன்மெலிந்த தோளைக்கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடைச் சுறுக்கிக்கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமைவாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென்றார்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வானென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரேவல்லார்.

(3) புத்தொளியிற் பழந்தமிழ்க்கோர் புதுமைகாட்டி
புத்துயிரும் புதுமணமும் புகுத்திஞானச்
சத்தியொளி மிகவிளங்கும் சொற்களாலே
தாய்நாட்டின் தளையறுக்கும் தவமேபாடி
எத்திசையும் இளந்தமிழர் இன்றுகூடி
இறந்தேனும் ஈன்றவளை மீட்போமென்று
பத்தியொடு அறப்போரில் முனைந்துநிற்கப்
பண்ணினது பாரதியின் பாட்டேயாகும்.

(4) எத்தாலும் பணந்தேடி இன்பம்நாடி
உண்டுடுத்து இறப்பதனை இகழ்ந்துதள்ளிப்
பித்தாகித் தான்பிறந்த பாரதநாட்டின்
பிணிவீட்டல் ஒன்றினுக்கே பாடிப்பாடி



முத்தாதி மணிகளெனும் சொற்களோடு
முப்பழத்தின் சுவைகூட்டி முனிவிலாது
சத்தானவீரத்தின் சாறும் சேர்த்துக்
கவிசமைத்த பாரதியின் தகைமை என்னே!

(5) நடித்தொழுகித் துதிபாடி நலங்கள்நாடி
நரைத்திறந்து மறைந்திடும் நாவலர்போலன்றி
வெடித்தெழுந்த பக்தியொடு பாரதநாட்டின்
விடுதலைக்குப் பாடுவதே வெறியாய்க்கொண்டு
இடித்தெழுந்து தேன்பொழியும் சொற்களோடு
இளங்கதிரும் முழுமதியும் இணைந்தாலென்னப்
பொடித்துடலம் புளகமுற அச்சம்போக்கிப்
புகழ்புரியும் பாரதியின் புலமைதானே.

(6) மேனாட்டுப் புதுமொழிகள் வளர்ந்துநாளும்
மிகக்கொழுத்துப் பளபளத்து மேன்மைமேவ
மிக்கசுவைப் பழந்தமிழ்த்தாய் மெலிந்தாளென்றும்
தாய்நாட்டைத்தமிழ்மொழியை மறந்தீர் ஐயோ!
தமிழர்களே! தளதளத்து மூச்சுவாங்கித்
தலைவணங்கி உடல்சுகித்தீர் தவத்தால்மிக்க
வானாட்டுத் தேவர்களும் அறிந்திடாத
வளமிகுந்துச் செழுசெழுத்து வாழ்ந்தநாட்டை
வறுமைதரும் அடிமையினில் வைத்தீரென்றுப்
பாநாட்டிப் பலவழியிற் பாடிப்பாடிப்
படித்தவுடன் பதைபதைக்க வீரமூட்டும்
சுப்ரமண்ய பாரதியின் பண்தான் என்னே!

(7) பாலொழுகும் சிறுகுதலை மகனைப்பார்த்து
"படையெடுத்தார் பகையாளர் மகனேநீபோய்
வேலொழுகும் போர்க்களத்தில் வெல்வாயன்றேல்
வெம்படையை மருமத்தில் வாங்" கென்றேவும்
சீலமிகும் பெண்மணிகள் திகழ்ந்த நாட்டைச்
சிற்றடிமைக் கொப்பிவிற்றுத் தின்றீரென்றுத்
தாழுழுது பறைசாற்றித் தமிழ்ப்பாவோதித்
தட்டியெழப் பாரதியார் தானேசெய்தார்.

(8) ‘அருமகனைத் தேர்க்காலில் அறைத்தவேந்தும்
பழியஞ்சித் தன்கையை அரிந்தகோனும்
தருமமிலைக் கோவலனைக் கொன்றதென்றுத்
தானறிந்த அக்கணமே சவமாய்வீழ்ந்தப்
பெருமையுள்ளத் திறல்வேந்தர் பின்னேவந்தீர்
பித்தடிமைக் குற்றேவல் பிழைத்தீ’ ரென்று
உருகிமனம் விரிந்துயரும் கவிகளாலே
உணர்வளித்த பாரதியின் உரைதான் என்னே!

(9) பாரிமுதற் சடையப்ப வள்ளலென்றுப்
பாவலர்கள் நாவிலுறை பல்லோர்வாழ்ந்துச்
சீரிலகும் தமிழ்மொழியின் இனிய ஓசைத்
திசையனைத்தும் போயொலிக்கச் செய்தநாட்டில்
ஊரியநற் சுவையொழுகும் கவிகளாலே
ஊக்கமிகத் தமிழ்நாட்டிற் குணர்வுந்தந்த
பாரதியார் மிகக்கொடிய வறுமைமேவப்
பார்த்திருந்தத் தமிழருற்றப் பழிதான் என்னே!

(10) சோற்றினுக்கறிவைவிற்றுத் தூர்த்தரைப்புகழ்ந்துபாடிச்
சோம்பரைச் செல்வரென்றுத் தோழுதுடல் சுகித்துவாழ்ந்து
கூற்றினுக் குடலம்போகக் குப்பையிற் கவிகள்சோக்
குறிவிடா திறந்துபோகும் கவிகளின்கூட்டம்சோரா
வேற்றவர்க் கடிமைநீங்கும் விடுதலைவரமே வேண்டி
வீரமும் ஞானம்பொங்கச் சக்தியின்வேள்விபாடி
நாற்றிசைத் தமிழரெங்கும நாட்டினைப் பணியச்செய்த
நாவலர் சுப்ரமண்ய பாரதி நாமம்வாழ்க.

---

## தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு

(1) இளந்தமிழா ! உன்னைக்காண இன்பமிக்கப்பெருகுது
இதுவரைக்கும் எனக்கிருந்த துன்பர்சற்றுக்குறையுது
வளந்திகழும் வடிவினோடும் வலிமைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமைநிற்கு வந்தஊக்கம்கண்டுநான்



தளர்ந்திருந்த சோகம்விட்டுத் தைரியங்கொண்டேனடா
தமிழர்நாட்டின் மேன்மைமீளத் தக்ககாலம் வந்ததோ
குளிர்ந்த எந்தன் உள்ளம்போலக் குறைவிலாது நின்றுநீ
குற்றமற்றச் சேவைசெய்து கொற்றமோங்கி வாழ்குவாய்.

(2) பண்டிருந்தார் சேரசோழ பாண்டிமன்னர் நினைவெலாம்
பாயுதடா உன்னையின்று பார்க்கும்போது நெஞ்சினில்
கொண்டகொள்கை அறம்விடாமல் உயிர்கொடுத்த வீரர்கள்
கோடிகோடி தமிழர்வாழ்ந்த கதைகள்வந்து குத்துது
மண்டலத்தே இணையிலாத வாழ்வுகண்ட தமிழகம்
மகிமைகெட்டு அடிமைபட்டு மதிமயங்கி நிற்பதேன்?
செண்டெழுந்தா லென்னப்பாய்ந்து தேசமுற்றும் சுற்றி நீ
தீரவீரம் நம்முள்மீளச் சேருமாறு சேவைசெய்.

(3) அன்பினோடு அறிவுசேர்ந்த ஆண்மைவேண்டும் நாட்டிலே
அச்சமற்றத் தூயவாழ்வின் ஆற்றல்வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள் என்ற எண்ணம்வேண்டுமே
துன்பமான கோடிகோடி சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும் துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும் இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா ! என்றும்நின்று ஏடெடுத்துப் பாடுவாய்.

(4) பணமிருந்தார் என்பதற்காய்ப் பணிந்திடாத மேன்மையும்
பயமுறுத்தார் என்பதற்கே பயந்திடாத பான்மையும்
குணமிருந்தார் யாவரேனும் போற்றுகின்ற கொள்கையும்
குற்றமுள்ளார் யாரென்றாலும் இடித்துக்கூறும் தீரமும்
இனமிருந்தார் ஏழையென்றுக் கைவிடாத ஏற்றமும்
இழிகுலத்தார் என்றுசொல்லி இகழ்ந்திடாமல் எவரையும்
மணமிகுந்தே இனிமைமண்டும் தமிழ்மொழியால் ஓதிநீ
மானிலத்தில் எவருங்கண்டு மகிழுமாறு சேவைசெய்

(5) ஓடி ஓடி நாட்டிலெங்கும் உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமைவாழ்வை உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து வறுமைபட்டத் தமிழனை
வாய்மையோடு தூய்மைகாட்டும் வலிமைகொள்ளச்செய்கு
கூடிக்கூடிக் கதைகள்பேசிச் செய்கையற்ற யாரையும் [வாய்
குப்பையோடு தள்ளிவிட்டுக் கொள்கையோடு நின்றுநீ
பாடிப்பாடித் தமிழின் ஓசை உலகமெங்கும் பரவவே
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப் பணியுமாறு சேவைசெய்.

(6) தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்துநில்லடா
தரணியெங்கும் இணையிலாஉன் சரிதைகொண்டுசொல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை அண்டமுட்டஉலகெலாம்
அகிலதேச மக்களுங்கண் டாசைகொள்ளச்செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில் கதவிடித்துக்கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை செய்துவாழ்க நீண்டநாள்.

---

## இந்தியநாடு என்னுடை நாடு.

(1) "இந்திய நாடிது என்னுடை நாடு"
என்று தினந்தினம் நீயதைப்பாடு
சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக்கிடந்தது போனதுமாள
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடினகாலங்கள் ஓடின தம்பி
இந்தத்தினம் முதல் "இந்திய நாடு
என்னுடை நாடெ"ன்ற எண்ணத்தைக்கூடு (இ)

(2) கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு
என்ன முறையிது எனிதை வேறு
இன்னொரு நாட்டவர் ஆள்வது கூறு



சொன்னவர் கேட்டவர் யாரையும் நம்பி
சேர்ந்துக் கிடந்தது தீர்ந்தது தம்பி
என்னுடை நாட்டினை நானிருந்தாள
இந்தத்தினம் முதல் எண்ணுவன் மீள (இ)

(3) தன்னுடை வேலையைத் தான் செய்வதாலே
தப்பு வந்தாலும் சுதந்திரம் மேலே
இன்னொரு யாருக்கும் இதிலென்ன கோபம்
எந்தன் உரிமைசொன் னலென்ன பாபம்
அன்னியர் ஆள்வதில் நன்மைவந்தாலும்
அடிமையின் வாழ்வது நரகம் எந்நாளும்
என்னுடை வீட்டுக்கு நான் அதிகாரி
என்பது தான்சுய ராஜ்ஜிய பேரி (இ)

(4) பாரத நாடெந்தன் பாட்டனின் சொத்து
பட்டயத்துக்கென்ன பஞ்சா யத்து
யாரிதை வேறொரு அன்னியர் ஆள
அஞ்சிக்கிடந்தது போனது மாள
'வாரவர் போறவர்' யாரையும் நம்பி
வாடினகாலங்கள் ஓடின தம்பி
வீரமும்தீரமும் வெற்றுரையாமோ
விடுதலைவேண்டுதல் விட்டிடப்போமோ. (இ)

(5) 'முத்தமிழ் நாடெந்தன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்' கெனப்பாடு
சற்றும் உரிமையில் லாதவர் ஆள
சரிசரி யென்றது போனதுமாள
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்
சத்தியம்சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே. (இ)

## கொடிப்பாட்டு.

பல்லவி.

கொடிபறக்குது கொடிபறக்குது கொடிபறக்குது பாரடா
கோணலற்றக் கோலில் எங்கள் கொடிபறக்குது பாரடா

சரணங்கள்.

(1) சிறைகிடந்து துயரடைந்த தேசபக்தர் நட்டது
தீரவீர சூரரான தெய்வபக்தர் தொட்டது
முறைகடந்து துன்பம்வந்து மூண்டுவிட்டபோதிலும்
முன்னிருந்து பின்னிடாமல் காக்கவேண்டும்நாமிதை (கொடி)

(2) வீடிழந்து நாடலைந்து வினையிழந்த நாளிலும்
விட்டிடாத தேசபக்தர் கட்டிநின்றுங் காத்தது
மாடிழந்து கன்றிழந்து மனையிழக்க நேரினும்
மானமாக நாமுமந்தக் கொடியைக்காக்க வேண்டுமே (கொடி)

(3) உடலுழைத்துப் பொருள்கொடுத்து உயிரும்தந்த உத்தமர்
உண்மையான தேசபக்தர் ஊன்றிவைத்தக் கொடி இது
கடல்கொதித்த தென்னமிக்கக் கஷ்டம்வந்த போதிலும்
கட்டிநின்று விட்டிடாமல் காக்கவேணும் நாமிதை (கொடி)

(4) மனமுவந்து உயிர்கொடுத்த மானமுள்ள வீரர்கள்
மட்டிலாத துன்பமுற்று நட்டுவைத்தக் கொடியிது
தனமிழந்து கனமிழந்து தாழ்ந்துபோக நேரினும்
தாயின்மானம் ஆனஇந்தக் கொடியையென்றும் தாங்குவோம்
(கொடி)

---

## முருகன் பாட்டு.

1. முருகனென்ற சிறுவன்வந்து முணுமுணுத்த சொல்லினால்
முன்னிருந்த எண்ணம்யாவும் பின்னமுற்றுப் போனதே
அருகுவந்து மனமுவந்து அவனுரைத்த ஒன்றினால்
அடிமையென் மனத்திருந்த அச்சமற்றுப் போனதே (முரு)



2. இளமையந்த முருகன்வந்து என்னோடொன்று சொல்லவே
என்னுளத் திருந்த பந்தம் ஏதுமற்றுப் போனதே
வளமையுற்று இளமைபெற்று வலிமிகுந்த தென்னவே
வந்ததே சுதந்திரத்தில் வாஞ்சையென்ற ஞானமே (முரு)

3. அழகனந்த முருகன்வந்து அருகிருந்த போதிலே
ஐம்புலன்க ளுக்கொடுங்கி அஞ்சியஞ்சி அஞ்சிநான்
பழமையென் உடற்கண்வைத்த பற்றுயாவும் அற்றதால்
பாரிலென்னை யாருங்கண்டு பணியுமாறு செய்ததே (முரு)

4. அன்பனந்த முருகன்வந் தழைத்திருத்தி என்னையே
அஞ்சல் அஞ்சல் அஞ்சலென் றகங்குழைந்து சொன்னதால்
துன்பமிக்க அடிமைவாழ்வில் தோய்ந்திருந்த என்மனம்
சோகம்விட்டு விடுதலைக்கு மோகமுற்று விட்டதே. (முரு)

---

## கதர்பாட்டு.

பல்லவி.

கதர்துணி வாங்கலையோ அம்மா
கதர்துணி வாங்கலையோ ஐயா (கதர்)

சரணங்கள்.

1. ஏழைகள் நூற்றது எளியவர் நெய்தது
கூழும் இல்லாதவர் குறைபல தீர்ப்பது (கதர்)

2. கன்னியர் நூற்றது களைத்தவர் நெய்தது
அன்னதான பலன் அணிபவர்க்களிப்பது (கதர்)

3. கூனர்கள் நெய்தது குருடர்கள் நூற்றது
மானமாய்ப் பிழைக்க மார்க்கம் தருவது (கதர்)

4. தாழ்ந்தவர் நூற்றது தளர்ந்தவர் நெய்தது
வாழ்ந்திடும் உங்கட்கின்னும் வாழ்த்துகள் சொல்வது (கதர்)

# வாழி.

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மணியறம்
வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டு கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்.

அன்புகொண்டு யாவரும்
அச்சமின்றி வாழ்கவே
துன்பமான அடிமையின்
துக்கம் யாவும் நீங்கியே
இன்பமான யாவுமெய்தி
இந்தநாட்டில் எங்களும்
தெம்பினேடு தெளிவுபெற்றுத்
தேவர்போற்ற வாழ்கவே.

முதல் பாகம் முற்றிற்று.